# புதிய ஜனநாயகம்

செப்டம்பர் 2012
ரூ.10.00



பி.ஆர்.பழனிச்சாமி « துரை தயாநிதி « எம்.ஜி.ஆர். « ஜெயலலிதா « கருணாநிதி...
லெக்டர் » எஸ்.பி. » நீதிபதி » தாசில்தார் » கிராம நிர்வாக அலுவலர் » தலையாரி...

தமிழ்நாடு

## மலைக்கள்ளன் அண்ட் கோ!

www.padippkam.com

# மாருதி தொழிலாளர்கள் மீது அடுக்கடுக்காகப் பாயும் அடக்குமுறைகள்

மாருதி சுசுகி நிர்வாகத்தின் கொடிய அடக்குமுறைக்கு எதிராக ஜுலை 18 அன்று வெடித்த தொழிலாளர் போராட்டத்தின் தொடர்ச்சியாக ஆலையில் கதவடைப்பு அறிவிக்கப்பட்டது. ஆலையின் சுற்றுவட்டார கிராமங்களில் வசித்து வந்த மாருதி தொழிலாளர்கள் மீது போலீசு அடக்குமுறையும் பொய்வழக்குகளும் பாய்ந்தன.

இப்போது மாருதி சுசுகி தொழிற்சாலை மீண்டும் இயங்கத் தொடங்கிவிட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. சுமார் 200 தொழிலாளர்கள் மட்டுமே வேலைக்கு வந்திருப்பதாக ஊடகங்கள் கூறுகின்றன.

1528 நிரந்தரத் தொழிலாளர்களில் 500 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர். பணி நீக்க அறிவிப்பும் ஆலை இயங்கத் தொடங்கும் என்ற அறிவிப்பும் ஒரே நேரத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. ‘காயம்பட்ட அதிகாரிகள் யாரையெல்லாம் அடையாளம் காட்டினார்களோ, அவர்கள் அனைவரையும் வேலை நீக்கம் செய்திருக்கிறோம்; இன்னும் யாரெல்லாம் அடையாளம் காட்டப்படுகிறார்களோ, அவர்களையெல்லாம் வேலைநீக்கம் செய்வோம்’’ என்று அறிவித்திருக்கிறார் மாருதியின் தலைவர் பார்கவா.

எந்த விதமான விளக்கமும் கேட்காமல், விசாரணையும் நடத்தாமல் பணிநீக்கம் செய்வது, சட்டத்துக்குப் புறம்பானது என்று தெளிவாகத் தெரிந்த போதும், மாநில அரசு மூச்சுவிடவில்லை. 500 போலீசாரை ஆலைக்குள்ளேயே குவித்திருக்கிறது மாநில அரசு. முன்னாள் இராணுவத்தினர் உள்ளிட்ட 100 ஆயுதம் தாங்கிய தனியார் படையினரை நிர்வாகம் நிறுத்தியிருக்கிறது. வெளிப்படையாக நிர்வாகத்தின் அடியாள் படையாகவே போலீசு நிறுத்தப்பட்டிருப்பதால், வேறு வழியின்றி காங்கிரசு, பா.ஜ.க. தொழிற்சங்கங்களே, ‘ஆலைக்குள்ளிருந்து போலீசைத் திரும்பப் பெறவேண்டும்’ என்று கோரியிருக்கின்றன.

அரியானா மாநிலம் போன்ட்சி சிறையில் 154 தொழிலாளர்கள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது இ.பி.கோ 302, 307, 323, 147, 148, 149, 34, 114 உள்ளிட்ட பல பிரிவுகளில் பொய்வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. பெயர் குறிப்பிட முடியாத, ஆனால் கண்டால் அடையாளம் காணத்தக்க 500, 600 தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபட்டதாக முதல் தகவல் அறிக்கை கூறுகிறது.

சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள தொழிலாளர் குடியிருப்புகளுக்கு ஒரு நாளைக்கு மூன்று முறை போலீசு வருவதாகவும், தங்களை மிரட்டுவதாகவும் குடும்பத்தினர் கூறுகின்றனர். தலைமறைவாகியிருக்கின்ற தொழிலாளிகளைப் பிடிக்க, போலீசார் தபால்காரர்கள் போல வேடமணிந்து வந்து விசாரிப்பதாகவும் குடும்பத்தினர் கூறுகின்றனர்.

கைது செய்யப்பட்ட தொழிலாளர்கள் அனைவருமே போலீசால் கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டிருக்கின்றனர். நிர்வாகத்திலிருந்து வந்த அதிகாரிகள் போலீசுடன் சேர்ந்து விசாரணையில் ஈடுபட்டிருக்கின்றனர். அனைவருமே நிர்வாணப்படுத்தப்பட்டு, தலைகீழாகத் தொங்கவிடப்பட்டு அடிக்கப்பட்டுள்ளனர். மூச்சு முட்டித் தவிக்கும் வரை தலையைத் தண்ணீர் தொட்டிக்குள் அமுக்குவது, மின்சார ஷாக் கொடுப்பது போன்ற கொடிய சித்திரவதைகளுக்குப் பின், நிர்வாக அதிகாரிகள் தொழிலாளர்களிடம் வெள்ளைத் தாள்களில் கையெழுத்து வாங்கியுள்ளனர். ஒரு முன்னணித் தொழிலாளியை படுக்கவைத்து அவர் மீது 90 கிலோ உருளையை உருட்டியிருக்கின்றனர். போலீசு நிலையத்தில் இருக்கும் வரை தொழிலாளர்கள் யாரும் வழக்குரைஞர்களைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை.

சித்திரவதைகள் குறித்து தொழிலாளர்களின் வக்கீல் விவரித்த பின்னரும் நீதிமன்றம் அதைப் பதிவு செய்யவில்லை. போலீசு கையில் வைத்திருக்கும் தொழிலாளிகளின் பட்டியல், நிர்வாகம் எழுதிக் கொடுத்ததேயன்றி, போலீசு விசாரணை செய்து கண்டுபிடித்தது அல்ல என்பதைத் தொழிலாளர் தரப்பு வக்கீல் பதக் நீதிமன்றத்தில் நிறுவிய பின்னரும், அதனை நீதிபதி கண்டுகொள்ளவில்லை.

‘‘நிர்வாகம் கொடுத்திருக்கும் அந்தப் பட்டியலில் உள்ள தொழிலாளர்கள்தான், சுயேச்சையான தொழிற்சங்கம் ஒன்றைக் கட்டுவதற்காக கடந்த ஒரு ஆண்டாக இடைவிடாமல் போராடி வருபவர்கள். அடக்குமுறைகள் ஒவ்வொன்றின்போதும் அடங்கிப்போகாமல், நிர்வாகத்தை உறுதியாக எதிர்த்து நின்றவர்கள். வேலையிலிருந்து நீக்கப்பட்டாலும், வெளியில் இருந்தபடி மீண்டும் சங்கத்தைக் கட்டியமைக்கக் கூடியவர்கள். எனவே, மீண்டும் ஒரு சுயேச்சையான சங்கம் தலையெடுப்பதைத் தடுக்க வேண்டுமானால், இவர்கள் அனைவரும் சிறையில் இருந்தாக வேண்டும். நிர்வாகம் தனது கைக்கூலி சங்கம் ஒன்றை உருவாக்கி நிலைநிறுத்துவதும்கூட, இவர்கள் வெளியில் வந்து விட்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

மாருதி தொழிலாளர்கள் மீது ஏவிவிடப்படும் அடக்குமுறைகளைக் கண்டித்து டெல்லியில் தொழிலாளி வர்க்கம் நடத்திய ஆர்ப்பாட்டம்.






படிப்பகம்

www.padippkam.com

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 27 இதழ்: 11
செப்டம்பர் 2012

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: *முகிலன்*

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561

### அசாம் கலவரம்:

## ஆதாயம் தேட முயற்சிக்கும் காங்கிரசு-பா.ஜ.க.வின் நரித்தனங்கள்

கடந்த ஜூலை மாதத்தில் அசாமின் போடோலாந்து பிராந்தியத்தில் முஸ்லிம்கள் மற்றும் பழங்குடியினர் 78 பேர் கொல்லப்பட்டு, ஏறத்தாழ 400 கிராமங்கள் தீக்கிரையாக்கப்பட்டு, 4 இலட்சம் போடோ அல்லாத பழங்குடி மக்களும் முஸ்லிம்களும் வெளியேற்றப்பட்டுள்ளனர். போடோ அல்லாத மக்கள் மீது, குறிப்பாக முஸ்லிம்களைக் குறிவைத்து போடோக்கள் நடத்திய இந்தப் பயங்கரவாத வெறியாட்டமும் அட்டூழியங்களும் கேள்விமுறையின்றித் தொடர்ந்த போதிலும், அசாம் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதன் எதிர்விளைவுகள் கடுமையாக இருக்கும், உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்ற அச்சத்தால், தென்மாநிலங்களுக்குப் பிழைப்புத்தேடி வந்துள்ள தங்களது உறவினர்களை ஊருக்குத் திரும்பிவிடுமாறு அசாமியர்கள் அழைத்துள்ளனர். அதையொட்டி, வடகிழக்கிந்திய மாநிலத்தவர் அனைவரும் தாக்கப்படக்கூடும் என்ற அச்சமும் பீதியும் கைபேசி குறுந்தகவல்களாகப் பரப்பப்பட்டு, கர்நாடகம், தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களிலிருந்து வடகிழக்கிந்திய மாநிலத்தவர் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் பல்லாயிரக்கணக்கில் வெளியேறியுள்ளனர்.

அசாமின் போடோ சுயாட்சி கவுன்சில் பிராந்திய மக்கள் தொகையில் போடோ இனக்குழுவினர் மூன்றிலொரு பங்கினராக உள்ளனர். பாரம்பரியமாக வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் மூன்றிலொரு பங்கினராகவும், போடோ அல்லாத அசாமியர்கள், கூலித் தொழிலாளர்களாக பீகார், உ.பி. மாநிலங்களிலிருந்து குடியேறிய சந்தால், முண்டா முதலான பழங்குடியினர் மூன்றிலொரு பங்கினராகவும் உள்ளனர். இவர்கள் தவிர, வங்கதேசப் போரின் போது அகதிகளாகக் குடியேறிய வங்கதேச முஸ்லிம்களும் கணிசமாக உள்ளனர். ஆனால், தமது சமூகம் முன்னேறாததற்கு அகதிகளாக ஊடுருவியுள்ள வங்கதேச முஸ்லிம்களே காரணம் என்றும், முஸ்லிம்களும் இதரப் பழங்குடியினரும் நதிக்கரை, காட்டுநிலங்களை ஆக்கிரமிப்பதாகவும் வெறியூட்டப்பட்ட போடோக்கள் 90-களிலிருந்து அடுத்தடுத்து போடோ அல்லாதவர்கள் மீது கொடிய தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். பல ஆண்டுகளாக நீடித்த வடகிழக்கிந்திய தேசிய இனங்களின் போராட்டங்களைப் பழங்குடி இனரீதியில் பிளவுபடுத்தி மோதவிட்டு இரத்தம் குடிப்பது காங்கிரசின் அரசியல் நரித்தனம்; அந்த வகையில் அனைத்து அசாம் மக்களின், அனைத்து அசாம் மாணவர்களின் போராட்டத்துக்கு எதிராக போடோக்களை ஆயுதபாணியாக்கி, இனவெறிக் குழுக்களை உருவாக்கியதே காங்கிரசு அரசின் உளவுப்படையான ''ரா'' தான்.

இதுவரை சிதறிக்கிடந்த அசாமிலுள்ள முஸ்லிம்கள் இப்போது தனிக் கட்சியாக வளர்ந்துள்ளதால், முன்போல அவர்களை வளைத்து ஓட்டு வங்கியாகப் பயன்படுத்திக் கொள்ள காங்கிரசால் முடிவதில்லை. எனவே, பா.ஜ.க. வழியில் முஸ்லிம் அல்லாதோரின் ஓட்டுக்களைக் கைப்பற்றும் நோக்கத்துடன், அசாம் காங்கிரசு இப்போது போடோக்களுடன் புதிய கூட்டணி கட்டிக் கொண்டு அரவணைத்துச் செல்கிறது. போடோ இனவெறிக் குழுக்கள் இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு முஸ்லிம்கள் மீதும் பிற பழங்குடியினர் மீதும் தற்போதைய பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியுள்ளன.

போடோ இனவெறிக் குழுக்களின் பயங்கரவாதத் தாக்குதல் - அட்டூழியங்களுக்குத் தமது கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில் மும்பையில் முஸ்லிம்கள் பேரணி நடத்தியபோது, போலீசைக் குவித்து அச்சுறுத்தியதால், அக்கெடுபிடிகளை எதிர்த்து சில முஸ்லிம் இளைஞர்கள் போலீசு வாகனங்களைச் சேதப்படுத்தி எரித்தனர். இதைச் சாக்கிட்டு போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து, போலீசுக்குப் பாதுகாப்பில்லை, மும்பையில் குடியேறியுள்ள முஸ்லிம்கள்தான் வன்முறைக்குக் காரணம் என்று அவதூறு பரப்பி, இந்துவெறி-இனவெறி பாசிஸ்டான ராஜ்தாக்கரே திடீர் பேரணி நடத்தினார். அத்வானியோ, வங்கதேச முஸ்லிம்களின் ஊடுருவல்தான் போடோலாந்தில் நடந்துள்ள வன்முறைத் தாக்குதலுக்கு முதன்மைக் காரணம் என்கிறார்.

அசாமில் நடந்துள்ள இந்த பயங்கரவாதத் தாக்குதலை, பா.ஜ.க.- ஆர்.எஸ்.எஸ். கும்பலும் ராஜ்தாக்கரேவும் நாடு தழுவிய விவகாரமாக்கி, அனைத்து இஸ்லாமியருக்கும் எதிராகத் திருப்பிவிட்டுத் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளத் துடிக்கின்றன. இந்து ஓட்டுக்களை இழந்துவிடாதிருக்க காங்கிரசு அரசு இச்சக்திகளை அனுசரித்துப் போகிறது. அசாம் விவகாரத்தைத் தமது அரசியல் நோக்கங்களுக்குச் சாதுரியமாகப் பயன்படுத்திக் கொண்டு, நாட்டு மக்களை இனக்குழு அடிப்படையிலும் மதவாத அடிப்படையிலும் பிளவுபடுத்தி மோதவிட்டு , அரசு பயங்கரவாதத்தை ஏவி ஒடுக்க இந்துவெறியர்களும் காங்கிரசும் போட்டி போடுவதையே இந்நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. ●



படிப்பகம்

www.padippkam.com



பி.ஆர்.பழனிச்சாமி « துரை தயாநிதி « எம்.ஜி.ஆர். « ஜெயலலிதா « கருணாநிதி...
லெக்டர் » எஸ்.பி. » நீதிபதி » தாசில்தார் » கிராம நிர்வாக அலுவலர் » தலையாரி

**தமிழ்நாடு**



# மலைக்கள்ளன் அண்ட் கோ!

''பூமிப்பந்தின் மேலடுக்கான பாறை மனித வாழ்க்கையின் பிரிக்கவொண்ணாத அங்கமாக இருந்திருக்கிறது. மனிதன் தற்காப்புக்காகக் கற்களைப் பயன்படுத்திய கற்காலம் முதல் இன்றைய இணையப்புரட்சி காலம் வரை. இருப்பினும் கி.மு. 2600-இல்தான் மனிதகுலம் கிரானைட்டின் சிறப்பை உணர்ந்தது. காலத்தால் அழிக்க முடியாத பல கட்டுமானங்களை உருவாக்கியிருக்கிறது.''

இந்தத் தொகையறாவெல்லாம் எதற்காக என்று கேட்கிறீர்களா?

கிரானைட் திருட்டு கேசில் கைது செய்யப்பட்டு, வெள்ளையும் சொள்ளையுமாக, போலீசார் புடை சூழ மெல்ல மிதந்து வரும், பி.ஆர்.பழனிச்சாமி என்ற சொறி நாயின் சாதனைகளை விதந்து, இந்து ஆங்கில நாளேட்டில் வெளியிடப்பட்டுள்ள, செய்தி போல தோற்றம் தரும் விளம்பர வாசகங்கள். இன்றல்ல, டிசம்பர் 10, 2010 அன்று.

இஸ்தான்புல் விமானநிலையம், தோஹா மசூதி, துபாய் ரேஸ் கோர்ஸ், தமிழ்நாடு புதிய சட்டமன்றக் கட்டிடம், இன்னும் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, ரசியா, தென்கிழக்காசியா - என எல்லா இடங்களிலும் உள்ள மாபெரும் கட்டிடங்களை அலங்கரிப்பவை, மதுரை மாவட்டத்தையை கண்டதுண்டமாக வெட்டித்துண்டு போட்டு சாமியால் விற்பனை செய்யப்பட்ட கிரானைட்டுகள்தான் என்று பெருமை பொங்க கூறுகிறது அந்த செய்தி.

கிரானைட்டின் சிறப்பு பற்றி மனித குலத்துக்கு கி.மு. 2600 - இலேயே தெரிந்திருந்தாலும், அது பழனிச்சாமிக்கு 1980 - களின் பிற்பகுதியில்தான் தெரியவருகிறது. அப்போதுதான் மதுரைப் பாறைகளில் உள்ள அற்புதத்தை அவர் அடையாளம் கண்டாராம். நல்வாய்ப்பாக கி.மு. 2600 - இல் பழனிச்சாமி பிறக்கவில்லை. பிறந்திருந்தால் தமிழ்நாட்டைக் கடல் கொண்டிருக்கும்.

1980 - களில் பொதுப்பணித்துறையில் ஒரு சிறிய காண்டிராக்டராக இருந்து, நாங்குனேரியில் ஒரு வாய்க்கால் வேலையில் எல்லை மீறி மோசடி செய்ததால் காண்டிராக்டர் என்ற உரிமமே ரத்து செய்யப்பட்ட நபர்தான் பி.ஆர்.பழனிச்சாமி என்ற கிரிமினல். அதன்பின், மேலூர் வட்டத்தில் ஒரு கல் குவாரியை எடுத்துத் தொழில் செய்ய முனைந்தபோது, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிரானைட் தொழில் செய்துவந்த ஒரு வடநாட்டு சேட் தொடர்பு பி.ஆர்.பி.க்குக் கிடைக்கிறது. மதுரையில் இருப்பது உலகத்தரம் வாய்ந்த கிரானைட் என்பதும் தெரிகிறது. அது முதல் கொள்ளையடிக்கத் துவங்கி, மத்திய வர்த்தகத் துறை அமைச்சகத்திடம் 8 முறை ஏற்றுமதிக்கு அவார்டு வாங்குமளவுக்கு மாவட்டத்தையே வெடி வைத்துத் தகர்த்து விற்றிறிருக்கிறார் பழனிச்சாமி.

பழனிச்சாமி 'தொழிலுக்குள்' நுழைந்த காலம் என்பது தமிழகத்தைப் பொருத்தவரை, 'வரலாற்று ரீதியில்' முக்கியத்துவம் வாய்ந்த காலம். 1991 - இல் ஆட்சிக்கு வந்த புரட்சித்தலைவியும் உடன்பிறவாத் தோழியும், ''ஐந்தே



படிப்பகம்

www.padippkam.com



அடித்த கொள்ளையின் அடையாளம்: பி.ஆர்.பழனிச் சாமியின் மகன் சுரேஷ் குமாரின் கோலாகலத் திருமணம்.

ஆண்டுகளுக்குள் தமிழகத்தை முடிந்த வரை வாங்கிவிட வேண்டும், அல்லது விற்றுவிடவேண்டும்'' என்ற கொலைவெறியோடு களத்தில் இறங்கியிருந்த காலம் அது. பழனிச்சாமியின் கொள்கையும் அதுவாகவே இருந்தது. அவரது கொள்கையும் உடன் பிறவாதோழிகளின் கொள்கையும் ஒத்துப்போனதையும், பழனிச்சாமியின் சாதியும் சின்னம்மாவின் சாதியும் ஒத்துப்போனதையும் மட்டும் தற்செயல் என்றுதான் சொல்லவேண்டும். அன்று முதல் இன்றுவரை சின்னம்மாவுடன் ஹாட்லைன் தொடர்பில் இருப்பவர் பழனிச்சாமி.

கிரானைட் கொள்ளைக்கு மன்னார்குடி கும்பல் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது. பி.ஆர்.பி.க்கு அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கண்ணப்பன் குருநாதர் என்று சொல்லுமளவுக்கு தொழில் நெருக்கம். இன்னொரு முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் பரமசிவம் தனது மைத்துனர் கோட்டைவீரன் பெயரில் கீழையூரில் பிரம்மாண்ட கிரானைட் குவாரியை எடுத்து நடத்தினார். பின்னர் அதுவும் மன்னார்குடி கும்பல் தயவால் இன்று பி.ஆர்.பி. கைக்கு வந்துவிட்டது. பி.ஆர்.பி.யிடம் மேலூர் தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. சாமி, மதுரை அ.தி.மு.க. மேயர் ராஜன் செல்லப்பா, ஜெயா அமைச்சரவையில் இரண்டாவது இடத்திலுள்ள ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது பினாமிகள், தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. தமிழ்ச்செல்வன், மன்னார்குடி கும்பல் - எனப் பலரும் பல நூறு கோடிகள் பங்கு வாங்கியிருக்கின்றனர்.

தி.மு.க.வில் அழகிரிக்கும் பி.ஆர்.பி.க்கும் இடைத்தரகர் நாகேஷ் என்ற தி.மு.க. பிரமுகர். 1996 -2001 தி.மு.க. ஆட்சிக் காலத்தில் திருப்பத்தூரின் மறைந்த தி.மு.க. எம்.எல்.ஏ சிவராமன்தான், விலையுயர்ந்த கிரானைட்டுகள் கொண்ட கீழையூரில் அழகிரியின் மகன் துரை தயாநிதிக்குச் சொந்தமாக குவாரி ஏற்படுத்தி கொடுத்தவர்.

இது சென்ற தி.மு.க. ஆட்சியின் போதே, அழகிரியின் பினாமி பொட்டு சுரேசின் மகன் நாகராஜ் பெயருக்கு மாற்றப்பட்டுவிட்டது.

அனைவரையும்விட பழனிச்சாமியிடம் அதிகமாகப் பொறுக்கித் தின்றவர் அஞ்சா நெஞ்சன் அழகிரிதான். அவரது பினாமிகள் சூடாமணி, நாகராஜ், நாகேஷ், பொட்டு சுரேஷ், தனபால், பாலசுப்பிரமணி முதலானோரும் தனித்தனியே காசு பார்த்திருக்கின்றனர். அது மட்டுமின்றி, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பி.ஆர்.பி. விட்டெறியும் காசைப் பங்கு போட்டுக் கொள்வதற்கு, மாவட்ட ஆட்சியர்களாக இருந்த மதிவாணன், உதயசந்திரன் ஆகியோருடன் அஞ்சாநெஞ்சனின் உடன்பிறப்புகள் மல்லுக்கட்டியிருக்கின்றனர்.

மொத்தத்தில், தி.மு.க., அ.தி.மு.க. -வில் மேலிருந்து கீழ் வரை பழனிச்சாமியிடம் மொய் வாங்காத உடன்பிறப்போ, ரத்தத்தின் ரத்தமோ கிடையாது. இந்த 'மாமன்கள்' எல்லோருடைய பெயர்களையும் அச்சிடுவதற்கு பத்திரிகையில் இடமும் கிடையாது.

பூமிக்குக் கீழே உள்ள கனிம வளங்கள் அரசுக்குச் (சமூகத்துக்கு) சொந்தம் என்பது பொது நியதி. இந்த விதிக்கு உட்படாமல், பூமிக்கு அடியில் கிரானைட், லைம்ஸ்டோன் போன்றவை இருக்குமானால், அவை நிலத்தின் உரிமையாளருக்குச் சொந்தம் என்று சட்டம் அங்கீகரிப்பதால், ஒரு நிலத்தை வாங்கி, தனக்குச் சொந்தமான அந்த நிலத்தில் அரசு அனுமதிக்கின்ற அளவுக்கான ஆழத்துக்கு குவாரி வெட்டி கிரானைட்டுகளை எடுத்து விற்பது சட்டபூர்வ நடவடிக்கையாக அங்கீகரிக்கப்படுகிறது.

இதன்படி பாமர விவசாயிகளுடைய நிலங்களை ஏமாற்றி வாங்குவது, தரமான கிரானைட் உள்ள நிலத்தை யாரேனும் தர மறுத்தால், மிரட்டியோ, தாக்கியோ, பொய் வழக்கு போட்டோ, நாற்புறமும் உள்ள நிலங்களை வாங்கி அந்த விவசாயியை முடக்கியோ அவருடைய நிலத்தைப் பறிப்பது, பிறகு அங்கே குவாரி வெட்டுவது என்ற வழிமுறைகளை பி.ஆர்.பி; அழகிரியின் மகன் துரை தயாநிதி, தளி ராமச்சந்திரன் போன்று இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் மாஃபியாக்கள் அனைவருமே

கிரானைட் மாஃபியா கும்பலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் நட்ட ஈடு கோரியும், கொள்ளைக்குத் துணை நின்ற அரசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் மதுரை மாவட்ட ஆட்சியரிடம் முறையிடுகிறார்கள்.





படிப்பகம்

www.padippkam.com

கையாண்டு வருகின்றனர். இந்த அயோக்கியத்தனம் சட்ட பூர்வமானது என்று அங்கீகரிக்கப்பட்டிருப்பதால், இதைத் தான் 'நியாயமாகத் தொழில் செய்வது' என்று கூறு கிறார்கள்.

பி.ஆர்.பி. மற்றும் அழகிரியின் மகன் முதலானோ ருக்கு இந்த 'நியாயம்' போதவில்லை. டாமின் குவாரிக்கு அருகாமையில் ஒரு இடத்தை வாங்கிப்போட்டு, டாமின் குவாரியின் கற்களைத் திருடி, தனது குவாரியின் கற்களாக கணக்கு காட்டி விற்பது; அரசு அதிகாரிகளைக் கையில் போட்டுக் கொண்டு, பொது நிலங்கள், கண்மாய்கள், குளங்கள், மலைகள் ஆகியவற்றில் ஒரு பகுதியை அரசி டமிருந்து குத்தகையாக வாங்கிக் கொண்டு, அதைக் காட்டி அந்த வட்டாரம் முழுவதையும் ஆக்கிரமித்து கிரா னைட் கொள்ளையடிப்பது; எந்த ஆவணமும் இல்லா மல் பொதுநிலங்களை ஆக்கிரமித்துக் கொள்ளையிடுவது - எனத் தங்களுடைய கொள்ளையை நடத்தியிருக்கின்ற னர். அதாவது இலஞ்சத்தை 'நியாயமாக' கேட்டு வாங் கும் போலீசுக்கும், சட்டையில் கைவிட்டு எடுக்கும் போலீசுக்குமுள்ள வேறுபாடு!

இந்த வழியில் மக்களுக்குச் சொந்தமான 70 கண்மாய் கள், 50 ஊருணிகள், எண்ணற்ற சாலைகள், புறம்போக்கு நிலங்கள் - என அனைத்தையும் ஆக்கிரமித்திருக்கிறது பி.ஆர்.பி. நிறுவனம். மேலூர் வட்டத்தில் கீழையூர், கீழ வளவு, இ.மலம்பட்டி, செம்மணிப்பட்டி, திருவாதவூர் ஆகிய கிராமங்களிலுள்ள கிரானைட் குவாரிகளும்; மதுரை வடக்கு வட்டத்தில் புதுத்தாமரைப்பட்டி, இடையப் பட்டி ஆகிய கிரானைட் குவாரிகளும் முக்கியமானவை யாகும். செம்மணிப்பட்டியிலுள்ள உயர்ந்த புறாக்கூட்டு மலையும், ரெங்கசாமிபுரம் கீழையூர் மலையும், கீழவளவு பொக்கிச மலையும் இருந்த சுவடுகூடத் தெரியாமல் தரை மட்டமாக்கப்பட்டு, பல கோடி ரூபாய் மதிப்புள்ள கிரா னைட்டுகள் பி.ஆர்.பி.யால் பெயர்த்தெடுக்கப்பட்டுவிட் டன.

உரிமம் ஏதும் இல்லாமலே, அரசு நிலங்கள், புறம் போக்கு - என எல்லா இடங்களிலும் குவாரிகளைத் தோண்டிக் கொள்ளையடித்துள்ளனர். உதாரணமாக, மதுரை மாவட்டம் கீழவளவுக்கு அருகிலுள்ள பிள்ளை யார்குளம் கண்மாயில் குவாரி அமைக்க 99 வருடக் குத் தகைக்கு பி.ஆர்.பி. நிறுவனம் கேட்டபோது அரசு தர மறுத்ததால், அக்கண்மாயைத் தோண்டிக் கற்களனைத் தையும் எடுத்த பி.ஆர்.பி. நிறுவனம், பின்னர் மண்ணைப் போட்டு மூடியிருக்கிறது. ஆவணங்களில் மட்டும் இருக்கும் இக்கண்மாயை தற்போது வருவாய்த்துறை அதி காரிகள் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

தொல்லியல் மதிப்புள்ள புராதனச் சின்னங்களும் இவர்களது கொள்ளைக்குத் தப்பவில்லை. கீழையூர் சமணமலையில் சமணப்படுகைகள், கல்வெட்டுகள் இருப்பதால் அம்மலை பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறி விக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், அதற்கு வெகு அருகிலேயே கற்களை வெட்டி எடுத்துள்ளனர். அந்தப் பகுதி முழுவதும் வெட்டி எடுத்த கற்களை அடுக்கி சமணப் படுக்கையையே மறைத்துவிட்டனர்.

100 ஏக்கர் சுற்றளவுள்ள மேலூர் திருச்சுனை மலையில் சுரக்கும் நீர் பத்தாயிரம் ஏக்கருக்கு பாசனவசதி அளித்து வந்தது. வருவாய்த்துறையும் கனிமவளத்துறையும் இன்ன பிற துறைகளும் அந்த மலையின் மையத்தில் உச்சந்தலை யில் 0.2 ஹெக்டேரை பி.ஆர்.பி. பினாமிக்குக் குத்த கைக்கு விட்டிருக்கின்றனர். நினைத்தும் பார்க்க முடியாத இந்த வக்கிரத்தின் விளைவாக, இன்று மலை இல்லை. பல இடங்களில் மலைகள் மடுவாகிவிட்டன. விளை நிலங்களிலும் நீர்வரத்து கால்வாய்களிலும் கற்களை அடுக்கிவைத்துப் பாசனமும் இல்லை.

பல்லாயிரம் ஏக்கரில் விவசாயம் அழிக்கப்பட்டிருக் கிறது. மேய்ச்சல் நிலம் இல்லாததால் கால்நடைகள் இல்லை. விளைந்த பயிரின் மேல் கிரானைட் தூசு படிந்து பயிர்கள் அழிவதால் விவசாயம் இல்லை. பாறைகள் வெடி வைத்து தகர்க்கப்படுவதால், கிராமங்களில் வீடு கள் விரிந்து நொறுங்கியிருக்கின்றன.

மதுரை தெற்குத்தெரு கிராமத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கரை வளைத்துப் போட்டு 400 ஏக்கர் பரப்பில் பிரம் மாண்டமான கட்டிடங்களை எழுப்பி, இறக்குமதி செய் யப்பட்ட எந்திரங்களைக் கொண்டு மிகப் பெரிய கிரானைட் தொழிற்சாலையை நடத்துகிறது பி.ஆர்.பி. நிறுவனம். கற்களை அறுப்பது, பாலிஷ் போடுவது, கிரானைட் கற்களிலேயே விதவிதமான அழகு சாதனப் பொருட்கள், சோபா செட், நாற்காலிகள் போன்றவை தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி ஆகின்றன.

விதிகளின்படி குறிப்பிட்ட ஆழத்துக்கு மேல் கிரானைட்டுக்காகப் பூமியைத் தோண்டக்கூடாது. ஆனால், பி.ஆர்.பி. மற்றும் பிற கிரானைட் கும்பல்கள் பாதாளம் வரை தோண்டியிருக்கின்றனர். அந்த வட்டார மக்களுக்கு மின்சாரம் கிடைப்பது அத்திபூத்தாற் போலத் தான். மின்வாரிய அதிகாரிகள் ஒத்துழைப்புடன் தேவை யான அளவு மின்சாரத்தைத் திருடுகிறது இந்த கிரானைட் கொள்ளையர் கூட்டம்.

பி.ஆர்.பி. நிறுவனம் திருமோகூரில் தலித் மக்களுக் கான தொகுப்பு வீடுகளை இடித்து குவாரியாக்கியிருக் கிறது. ஊரக வளர்ச்சித்துறை உதவியுடன் இடையபட்டி யில் சத்துணவுக் கூடம், சமூகக் கூடம் போன்றவை இடிக் கப்பட்டு குவாரிகளாக்கப்பட்டிருக்கின்றன. கீழவளவில் குவாரிக்காகப் பள்ளிக்கூடத்தை இடித்துள்ளனர். இதனை மக்கள் கடுமையாக எதிர்த்திருக்கின்றனர். திரு வாதவூரில் தலித் மக்களுக்கான பஞ்சமி நிலம் நூற்றுக் கணக்கான ஏக்கர் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. கண் மாய், ஊருணி, புறம்போக்கு, மின்சாரம் ஆகியவற்றைத் திருடுவதை எதிர்த்த ஊர்த்தலைவர்கள் விலைக்கு வாங் கப்பட்டிருக்கிறார்கள். மீறிப் போராடிய விவசாயிகள் மர்மமான முறையில் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

அட்டைப்பட விளக்கம்:

*கிரானைட் கொள்ளையர்களால் 'கேக்' போல வெட்டிச் சிதைக்கப்பட்ட சக்கரமலை.*

நன்றி: ஜூனியர் விகடன்.



படிப்பகம்

பி.ஆர்.பழனிச்சாமிக்கு மேலூர் வட்டத்தில் மட்டுமின்றி, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், கோவை, நாமக்கல், சேலம், கரூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் 1500 ஏக்கர் நிலம் இருப்பதாகவும், தேனியில் மட்டும் 700 ஏக்கர் என்றும் பத்திரிகை செய்திகள் கூறுகின்றன. மிக முக்கியமான கிரானைட் குவாரி மாவட்டங்களான கிருஷ்ணகிரி, தருமபுரியில் பழனிச்சாமியின் சொத்து விவரங்கள் பற்றி தெரியாதது மர்மமாக இருக்கின்றது.

பி.ஆர்.பழனிச்சாமி நடத்தி வந்தது ஒரு அரசு. வருவாய்துறை, கனிமவளத் துறை, காவல்துறை உள்ளிட்ட எல்லாத் துறைகளையும் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிகாரிகள் பலர் பி.ஆர்.பி. யின் நிறுவனத்தில் வேலை செய்கின்றனர். நிலத்தை ஆக்கிரமிப்பது முதல் எதிர்ப்பவர்களை ஒழித்துக் கட்டுவது வரையிலான எல்லா அயோக்கியத்தனங்களுக்கும் திட்டம்போட்டுக் கொடுப்பது இவர்கள்தான். சொல்லப்போனால் பி.ஆர்.பி. கும்பல், இந்த 'ஓய்வு பெற்ற அரசை' வைத்துத்தான் ஓய்வின்றி உழைக்கும் அம்மாவின் அரசை இயக்கியிருக்கிறது.



## "கிரானைட் மாஃபியாக்களைச் சட்டம் தண்டிக்காது! மக்கள்படையே தண்டிக்கும்!!" - ஆர்ப்பாட்டங்கள்

''கிரானைட் மாஃபியாக்களான பி.ஆர்.பழனிச்சாமி, துரை தயாநிதி மற்றும் துணைநின்ற அரசு அதிகாரிகளைக் குண்டர் சட்டத்தில் சிறையிலடை! அவர்கள் கொள்ளையடித்த சொத்துக்களைப் பறிமுதல் செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குப் பிரித்துக்கொடு!'' - எனும் முழக்கங்களுடன் ம.க.இ.க; பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து 20.08.2012 அன்று யா.ஒத்தக்கடையிலும்; மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் மதுரை மாவட்டக் கிளை 21.08.2012 அன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாகவும் ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

கடந்த 20 ஆண்டுகளாகத் தொடரும் கிரானைட் கொள்ளையில் அனைத்து ஓட்டுக் கட்சிகளும் அரசுத்துறைகளும் போலீசும் நீதித்துறையும் கூட்டுக் களவாணிகளாக உள்ளதையும், மதுரை உயர் நீதிமன்றக் கிளைக்கு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி வந்த போது பி.ஆர்.பி.யின் ஆடம்பர பென்சு கார் பயன்படுத்தப்பட்டுள்ளதை அம்பலப்படுத்தியும், தற்போதைய அரசும் சட்டமும் நீதியும் இச்சட்டவிரோத - சமூகவிரோத கும்பலைத் தண்டிக்காது என்பதால், உழைக்கும் மக்கள் பெரும்படையாகத் திரண்டெழுந்து இக்கும்பலைத் தண்டிக்க வருமாறு அறைகூவியும் நடந்த இவ்விரு ஆர்ப்பாட்டங்களும், பொதுச்சொத்தை அரசின் ஆதரவோடு கொள்ளையடிப்பதுதான் தனியார்மயத்தின் ஆன்மா என்பதைப் பொதுமக்களின் மனதில் பதிய வைத்தன.

– பு.ஜ.செய்தியாளர், மதுரை.

கிரானைட் தோண்டும் பகுதிகளிலுள்ள கிராம உதவியாளர்களுக்கு (தலையாரி) ரூ.1000. கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ரூ.5000; வருவாய் ஆய்வாளர்களுக்கு ரூ.8000; மண்டல துணை வட்டாட்சியர்களுக்கு ரூ.10,000; வட்டாட்சியர்களுக்கு ரூ.20,000; கோட்டாட்சியர்களுக்கு ரூ.30,000; மாவட்ட வருவாய் அலுவலருக்கு ரூ.50,000; கலெக்டருக்கு ரூ. 1லட்சம் முதல் 2 லட்சம்வரை - என மாதந்தோறும் தவறாமல் வேன் மூலம் உரிய நபர்கள் மூலம் பட்டுவாடா நடந்திருக்கிறது. கனிமவளத்துறை ஊழியர்கள், அதிகாரிகளுக்கு பி.ஆர்.பி. நிறுவனம் தாய் வீடு போல. ஒன்று கேட்டால் இரண்டு கிடைக்கும். தலையாரிகளைப் பொருத்தவரை, சுவரில் கிரானைட் பதித்திருப்பவர்களெல்லாம் உண்டு.

இதைப்போன்றே காவல் துறையில் 'ஏட்டய்யா', சார் ஆய்வாளர், ஆய்வாளர், துணைக் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், டி.ஐ.ஜி; ஐ.ஜி. முதலானோருக்கும் மாதந்தோறும் பணப்பட்டுவாடா நடந்து வந்துள்ளது. கீழ்நிலை நீதிமன்றம் முதல் உயர் நீதிமன்றம் வரை 'நீதி அரசர்'களுக்குத் தகுந்த முறையில் மாதந்தோறும் பணப்பட்டுவாடா செய்யப்பட்டு வந்துள்ளது. ஒரு உயர் நீதிமன்ற நீதிபதிக்கு கார் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

கட்சிகளைப் பொருத்தவரை, காங்கிரசு, பா.ஜ.க., ம.தி.மு.க, பா.ம.க., சி.பி.எம்., சி.பி.ஐ., வி.சி., புதிய தமிழகம் - என விதிவிலக்கின்றி அனைத்து ஓட்டுக் கட்சிகளும் தத்தம் தகுதிக்கேற்ற 'அன்பளிப்பு'களைச் சுருட்டியிருக்கின்றனர். மறைந்த மார்க்சிஸ்டு கட்சியின் மதுரை எம்.பி. மோகன், தேர்தல் செலவுக்கென ஒரு கோடி ரூபாயை பி.ஆர்.பி. யிடம் வாங்கியிருப்பதாகவும், இதுவன்றி சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி. உள்ளிட்ட அனைத்து பிழைப்புவாத தொழிற்சங்கங்களும் தத்தம் மாநாடுகள், கருத்தரங்குகளுக்கு இலட்சக் கணக்கில் பி.ஆர்.பி.யிடம் பணம் பெற்றுள்ளனர் என்றும் அப்பகுதியைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் எவ்விதத் தயக்கமுமில்லாமல் சாதாரணமாக கூறுகின்றனர். இரண்டு வருடங்களுக்கு முன் அழகர்கோவிலில் நடைபெற்ற மார்க்சிஸ்டு கட்சியினர் தலைமை தாங்கும், மதுரை மாவட்ட வருவாய்த்துறை அலுவலர்சங்க மாநாட்டில் பரிமாறப்பட்ட ஆடு, கோழி, மீன், முட்டை முதல் பீடா வரையிலான அனைத்தும் பி.ஆர்.பி. யின் செலவுதான் என்றும் இவர்கள் கூறுகின்றனர். தலையாரி முதல் தாசில்தார் வரையிலான 'தோழர்கள்' தனித்தனியாக மாதாமாதம் கைநீட்டும்போது, எல்லா கைகளும் இணைந்து ஒற்றுமையாக, ஒரே சங்க



படிப்பகம்

www.padippkam.com



**பி.ஆர்.பி.க்குப் புறம்போக்கை அளந்து கொடுத்த அதே தலையாரிகள், அதே இடத்தை, அதே இஞ்சு டேப்பை வைத்து இப்போது கலெக்டர் தலைமையில் அளந்து கொண்டிருக்கிறார்கள். பொதுப்பணித்துறை அதிகாரிகள் இதற்கு முன் பெரியாறு கால்வாயைப் பார்த்திராதவர்கள் போலத் தேடுகிறார்கள். விபத்து என்று பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் போஸ்ட் மார்ட்டம் அறிக்கைகளை ஆராய்வது போல போலீசார் பாவ்லா காட்டுகிறார்கள்.**

தற்போது விசாரணை நடத்தி வரும் மாவட்ட ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா, பி.ஆர்.பி. நிறுவனத்தில் மட்டுமின்றி, சோதனையிட்ட 175 குவாரிகளில் 89- இல் எல்லாவித மான முறைகேடுகளும் நடந்திருப்பதாகவும், பொது இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதாகவும் கூறுகிறார். ஆக்கிரமித்த புறம்போக்குகளைத் தலையாரிகள் அளந்து கொண்டிருக்கிறார்கள். தோண்டப்பட்ட குழிகளை டாமின் அதிகாரிகள் அளந்து கொண்டிருக்கிறார்கள்.

பெரியாறு பாசனக்கால்வாய் கோட்டத்தை சேர்ந்த பொதுப்பணித்துறை உயர் அதிகாரிகள் காணாமல் போன கால்வாய்களைத் தேடுகிறார்கள். குவாரிகளில் மர்மமான முறையில் இறந்தவர்கள் பற்றி டி.எஸ்.பி. அசோக் குமார் தலைமையிலான குழு மருத்துவமனை போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டுகளை ஆராய்ச்சி செய்கிறதாம்.

இந்த விசாரணையை நடத்தி வரும் மாவட்ட ஆட்சியரைச் சந்தித்த விவசாயிகள், கிரானைட் கொள்ளையர்கள் மீது மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது, கொள்ளைக்குத் துணை நின்ற அனைவர் மீதும், குறிப்பாக எல்லா அரசுத்துறை அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியிருக்கின்றனர். ஆனால், ஒன்றிரண்டு வி.ஏ.ஓ., தலையாரி, தாசில்தார்கள் மட்டுமே தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

மாக, கை நீட்டுவதில் புதிதாக என்ன மானக்கேடு வந்து விடப் போகிறது என்று அவர்கள் எண்ணியிருக்கலாம்.

குவாரிகளைத் தாரைவார்த்த டாமின் அதிகாரிகளுக்கு, சிட்டா அடங்கல் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் தங்களிடம் ஒப்படைத்து ஆக்கிரமிப்புக்கு ரூட்டு போட்டுத்தந்த வருவாய்த்துறைக்கு, கால்வாய்கள் - ஊருணிகளை விழுங்க உதவிய பொதுப்பணித்துறைக்கு, சமணமலை, திருவாதவூர் போன்றவற்றை த் தோண்ட அனுதித்த தொல்லியல் துறைக்கு, மற்றவர் நிலத்தையும் புறம்போக்கையும் பதிவு செய்து தருவதற்காக பத்திரப் பதிவுத்துறைக்கு, சத்துணவுக்கூடம், பள்ளி, சமூகக்கூடங்களைக்கூட இடித்து குவாரியாக்க உதவிய ஊரக வளர்ச்சித் துறைக்கு, ஒரு நம்பர் பிளேட்டில் எட்டு கன்டெயினர் லாரிகள் வீதம் ஓட்டுவதற்கு உதவி புரிந்த வட்டாரப் போக்குவரத்துத்துறைக்கு, கணக்கில் வராமல் விற்பனை செய்வதற்குத் துணை புரிந்த வணிகவரித்துறைக்கு, கணக்கில் வராத கள்ள ஏற்றுமதிக்கு துணை நிற்கும் சுங்கத்துறைக்கு, அனைத்துக்கும் துணை நின்று அருள் புரியும் எல்லாம் வல்ல அன்னைக்கு… என்று சகலருக்கும் அவரவர் பங்களிப்புக்கு ஏற்ப ‘அன்பளிப்பு’ வழங்கப்பட்டுள்ளது. ஜூலை 31, 2012 வரை அனைவருக்கும் மாமூல் முறையாக விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

எல்லாம் ‘நல்லபடியாக’ போய்க்கொண்டிருந்த நேரத்தில், அனைவரின் கண்ணிலும் மண்ணைத்தூவும் விதத்தில் ஆட்சியர் சகாயம் எழுதிய கடிதம் அம்பலத்துக்கு வந்துவிட்டது.

மற்றபடி பி.ஆர்.பி.க்குப் புறம்போக்கை அளந்து கொடுத்த அதே தலையாரிகள், அதே இடத்தை, அதே இஞ்சு டேப்பை வைத்து இப்போது கலெக்டர் தலைமையில் அளந்து கொண்டிருக்கிறார்கள். பொதுப்பணித்துறை அதிகாரிகள் இதற்கு முன் பெரியாறு கால்வாயை பார்த்திராதவர்கள் போலத் தேடுகிறார்கள். விபத்து என்று பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் போஸ்ட்மார்ட்டம் அறிக்கைகளை ஆராய்வது போல போலீசார் பாவ்லா காட்டுகிறார்கள். மற்றபடி, பி.ஆர்.பி. அலுவலகங்களில் நடந்த சோதனைகள் பலவற்றில் கணினிகள் கைப்பற்றப்பட்டன, வன்தகடுகள் இல்லை. பீரோக்கள் உள்ளன, கோப்புகள் இல்லை என்று கூறுகின்றன நாளேடுகள். மலைகளையும் கால்வாய்களையுமே தொலைக்கத் தெரிந்த அதிகாரிகள் கொண்ட அரசில் கோப்புகள் காணாமல் போவதா பெரிய அதிசயம்?

இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து கொண்டிருக்கிறது இந்தக் கொள்ளை. கொள்ளையின் மதிப்பு பன்மடங்கு - சில இலட்சம் கோடிகளாக இருக்கு



படிப்பகம்

www.padippkam.com

மென்பதில் ஐயமில்லை. பண மதிப்பைக் குறிப்பதற்காக இதனைக் கொள்ளை என்று நாம் குறிப்பிட்டாலும், ‘கொள்ளை’ என்ற சொல் இந்தக் குற்றத்தின் முழுப் பரிமாணத்தையும் சுட்டவில்லை. இந்தக் கொள்ளைக்குள் கொலை, இலஞ்சம், மோசடி, நம்பிக்கைத் துரோகம், தேசத்துரோகம், சூழல் நாசம், இயற்கைவளம், விவசாய அழிப்பு உள்ளிட்ட எல்லாப் பாதகங்களும் அடங்கியுள்ளன.

பி.ஆர்.பழனிச்சாமி என்றொரு திருடன் முதன்மைக் கொள்ளையனாக இருந்த போதிலும், பழனிச்சாமி, துரை தயாநிதி போன்றவர்கள் மட்டுமே இந்தக் குற்றவாளிகள் கூட்டத்தின் முழுமையைக் காட்டவில்லை. தலையாரியில் தொடங்கி ஆட்சியர், அமைச்சர்கள் வரையிலான எல்லாத்துறை அதிகாரிகள் மற்றும் எல்லா ஓட்டுப்பொறுக்கிகளும் குற்றக்கூண்டில் நிற்கிறார்கள்.

மக்கள் மீதோ, இந்த மண்ணின் மீதோ, நம் தொன்மை மரபின் மீதோ, இயற்கை வளங்கள் மீதோ, அறநெறிகளின் மீதோ எவ்வித மதிப்புமற்ற ஒரு பெரும் கூட்டம் இந்தச் சூறையாடலில் ஈடுபட்டிருக்கிறது. குவாரிகளின் வெடிச்சத்தத்தில் தூக்கியெறியப்பட்டுப் புழுதியைப் போலக் காற்றில் கலந்து காணாமல் போய்விட்டது அந்தப் பகுதி விவசாயிகளின் வாழ்க்கை. இந்தக் குற்றத்தின் கொடூரத்தை உணர்த்தும் சாட்சியமாக வெட்டுப்பட்ட கழுத்தைப் போல, இரத்தம் கசிய நிற்கிறது சக்கரமலை.

பிரெஞ்சுப் புரட்சியின் கிலெட்டினில் வெட்டுப்பட்டுச்சரிந்த முண்டங்களின் ஓவியம் நினைவுக்கு வருகிறது. ஒவ்வொருவராகத் தண்டிக்க முடியாத அளவுக்கு பிரபுக்குல குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால், அன்று கிலெட்டின் பயன்படுத்தப்பட்டதென்று கூறுவார்கள். குற்றவாளிகளின் எண்ணிக்கை மட்டுமல்ல, குற்றவாளிகளுக்கு எதிரான மக்கள் கோபத்தின் வடிவமாகவும் கிலெட்டின் இருந்தது. இருக்கிறது.

• தொரட்டி

# மலைக்கள்ளன் அண்ட் கோ உருவாகி வளர்ந்த வரலாறு!

மலைக்கள்ளன் பி.ஆர். பழனிச்சாமி கைது செய்யப்பட்டுவிட்டாராம். கைது என்று குறிக்கும் முகமாக போலீசார் கைதியின் கையைப் பற்றுவது வழக்கம். பழனிச்சாமி கைது காட்சியைப் பார்த்தால், பதவியேற்பு விழாவுக்கு அமைச்சர் செல்வது போல இருக்கிறது. போலீசு உயரதிகாரிகள் பயபக்தியாக உடன் நடந்து வருகிறார்கள். கைது செய்து 24 மணிநேரத்தில் நீதிமன்றத்திற்குக் கொண்டுவராமல், 6 மணிநேரம் அதிகம் எடுத்துக் கொண்டது ஏன் என்று சீறுகிறார் நீதிபதி. நீதிமன்றத்தில் பழனிச்சாமிக்கு நாற்காலி போடப்படுகிறது. போலீசின் கட்டுப்பாட்டில் இருக்கும்போதே அவருடைய தனிப்பட்ட மருத்துவர் வந்து சோதனை செய்கிறார். போலீசு விசாரணையின் போது தனக்குத் தூக்கம் வருவதாக பி.ஆர்.பி. கூறியவுடன் விசாரணைக்கு இடைவேளை விடப்படுகிறது. சிறையில் முதல்வகுப்பு கொடுக்குமாறு நீதிபதி நினைவுபடுத்துகிறார். பி.ஆர்.பி. யின் மகன்கள், துரை தயாநிதி ஆகியோர் மீது வழக்கிருந்தும் போலீசு அவர்களைத் தேடவில்லை. அவர்கள் முன் ஜாமீன் போட்டிருக்கிறார்கள். கைது செய்யமாட்டோம் என்று உயர் நீதிமன்றத்துக்கு அரசாங்கம் உறுதி அளிக்கிறது.

இதற்குப் பெயர் அம்மாவின் கடுமையான நடவடிக்கையாம். ‘‘யாராயிருந்தாலும் விடவேண்டாம்’’ என்று அம்மா கூறிவிட்டதால், பழனிச்சாமியுடன் தொடர்புள்ள ஓ.பி.எஸ். போன்ற அ.தி.மு.க. வினர் பீதியில் இருக்கிறார்களாம். துக்ளக், ஜூவி முதலான பார்ப்பனப் பத்திரிகைகள் எழுதுகின்றன. சகாயத்தின் கடிதத்தைக்கூட அதிகாரிகள் அம்மாவுக்கு மறைத்து விட்டதாகவும், சகாயம் மாற்றப்பட்டதுகூட அம்மாவின் கவனத்துக்கே வராமல் நடந்து விட்டதாகவும் கூச்சமே இல்லாமல் புளுகுகிறது ஜூவி.

ஓராண்டிற்கு முன்பே தினபூமி நாளிதழ் ஆதாரப்பூர்வமாக இந்தக் கொள்ளையை வெளியிட்டது. உடனே தி.மு.க. ஆட்சி தினபூமி ஆசிரியரை வழிப்பறி வழக்கில் கைது செய்தது. சகாயத்தின் கடிதத்தை அன்பழகன் என்றொரு பத்திரிகையாளர், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் வாங்கி பத்திரிகையில் வெளியிட்ட பின்னர் தான், வேறு வழியின்றி தற்போதைய நடவடிக்கைகள் அரங்கேறுகின்றன.

நில அபகரிப்பு வழக்கில் தி.மு.க.வின் முக்கிய புள்ளிகளை ரவுண்டு கட்டிச் சிறையிலடைத்த ஜெயலலிதா, இன்று கருணாநிதியின் குடும்பம் நேரடியாகச் சிக்கியுள்ள இந்தக் கொள்ளையைப் பயன்படுத்திக் கொள்ளாமலிருப்பதற்குக் காரணம், இதில் அ.தி.மு.க. வினரும் சம்மந்தப்பட்டிருப்பது மட்டுமல்ல, மொத்த அதிகாரவர்க்கமும் இதில் சம்மந்தப்பட்டிருப்பதுதான்.

கிரானைட் கொள்ளைவழக்கில் அம்மாதான் பி.ஆர்.பி.யை விடவும் மூத்த ‘அக்யூஸ்டு’. தமிழகத்தின் கிரானைட் சுரங்கங்கள் அனைத்தும் தமிழ்நாடு மினரல்ஸ் (டாமின்) நிறுவனத்திற்குச் சொந்தமாக இருந்தன. ஜெயலலிதாவின் முதலாவது ஆட்சிக்காலத்தில் தான், ‘‘ரெய்சிங் அண்டு சேல்’’ முறையில் தனியார் முதலாளிகள் சொந்தமாக கிரானைட் குவாரிகள் அமைத்துக்கொள்ள ஏதுவாகச் சட்டம் இயற்றப்பட்டு, இவர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டது. அன்று ‘‘37 கோடி ரூபாய் இலஞ்சம் வாங்கிக் கொண்டு, டாமினுக்குச் சொந்



படிப்பகம்

www.padippkam.com



பி.ஆர்.பழனிச்சாமியின் கைது காட்சி, பதவியேற்பு விழாவுக்கு அமைச்சரை அழைத்துச் செல்வதை நினைவுபடுத்துகிறது.

தமான சுரங்கங்களின் உரிமத்தை, முறைகேடாகத் தனியாருக்கு கொடுத்தார்'' என்று ஜெ. மீதும், அன்றைய டாமின் தலைமை அதிகாரி தியானேஸ்வரன் மீதும் 1997-இல் தி.மு.க. அரசு வழக்கு தொடர்ந்தது. ஆனால், மீண்டும் ஜெயலலிதா முதல்வரானதும் 2004 - இல் இந்த வழக்கு ஊத்தி மூடப்பட்டது. அண்ணன் அழகிரி கிரானைட் கொள்ளையில் இறங்கிவிடவே, மீண்டும் ஆட்சிக்கு வந்த தி.மு.க. இந்த வழக்கு விவகாரத்தை கிளறவில்லை.

ஒரிஜினல் மலைக்கள்ளன் எம்.ஜி.ஆரிடமிருந்துதான் கிரானைட் கொள்ளையின் வரலாறு துவங்குகிறது. சாராய உடையாரையும், ஜேப்பியாரையும் உருவாக்கிய எம்.ஜி.ஆர், கிரானைட் மலைகளை உடைத்து விற்பதற்கு 1978-இல் டாமின் நிறுவனத்தைத் தொடங்கி, அதற்குத் தனது நண்பரான நிலவியல் துறை பேராசிரியர் சரவணன் என்ற திருடனை தலைவராக நியமித்தார். தமிழ்நாடு முழுவதும் இருந்த கிரானைட் சுரங்கங்களை 'டைகோ' என்ற வெளிநாட்டு நிறுவனத்திற்குக் குத்தகைக்கு விட்டுப் பல கோடிகளைக் கொள்ளையடித்தார் சரவணன்.

1989-இல் கருணாநிதி ஆட்சியில் இவர் மீது வழக்கு பதியப்பட்டுத் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டார். ஆனால் 1991-இல் ஜெயலலிதா வந்தவுடன் சரவணன் மீண்டும் டாமின் தலைவராக்கப் பட்டார். பின்னர் சரவணனை விருப்ப ஓய்வில் அனுப்பி விட்டு, தொழிலை தொடர்வதற்கு தியானேசுவரனை நியமித்தார் அம்மா.

கிரானைட் கொள்ளையை அம்பலப்படுத்தியதால், தினபூமி ஆசிரியர் மணிமாறனைப் (தொப்பி அணிந்திருப்பவர்) பொய் வழக்கில் கைது செய்தது, கடந்த தி.மு.க. ஆட்சி.



ஓய்வு பெற்ற பின் 'மாபெரும் பக்திமானாக', சென்னை அசோக் நகரில் செட்டிலாகி இருந்த சரவணன், 2008-ஆம் ஆண்டு மர்மமான முறையில், அவரது வீட்டிலேயே கொலை செய்யப்பட்டு, நகைகளும் வெளிநாட்டு கரன்சிகளும் களவு போயின. சரவணனுக்கு ஸ்விஸ் வங்கியிலெல்லாம் பணமிருப்பதாகவும் அப்போது நாளேடுகளில் செய்தி வந்தது. அந்த திருட்டுச் சொத்துக்கள் யாருக்குச் சேர்ந்தன என்பது போலீசுக்குத்தான் வெளிச்சம்.

ஆட்சி மாறியவுடன் பேருந்து நிலைய சைக்கிள் நிறுத்தம், கட்டணக் கழிப்பறை போன்றவற்றில் சம்பாதிக்கும் உரிமையை சுமுகமாக அடுத்த கட்சிக்கு கைமாற்றிக் விடுவதைப் போல, மணல், கிரானைட் போன்ற இயற்கை வளங்களைக் கொள்ளையிடும் பி.ஆர்.பி. போன்றோரிடம் பங்கு வாங்குவதிலும், தொழில் கூட்டுச் சேர்ந்து கொள்வதிலும், பங்கு பிரித்துக் கொள்வதிலும் சர்வ கட்சிகளும் ஒரு சுமுகமான கூட்டினைப் பேணி வருகின்றனர். தனியார்மயம் இந்தக் கொள்ளைகளில் பெரும்பகுதியை சட்டபூர்வமாக்கிவிட்டது.



அம்மாவின் கருணையால், இன்னும் கைதாகாமல் இருக்கும் அழகிரியின் மகன் துரை தயாநிதி.

மதுரையின் வடக்கு எல்லையில் உள்ள ஆனை மலை என்ற குன்று மக்களின் அபிமானத்துக்குரியது. கடந்த தி.மு.க. ஆட்சியின்போது அந்தக் குன்றை அறுத்து விற்பனை செய்ய முயன்றது பி.ஆர்.பி.-அழகிரி கூட்டணி. ஆனால், மக்கள் போராட்டத்தால் தடுத்து நிறுத்தப்பட்டது. இமயமோ, பொதிகையோ எதுவானாலும், அது நோட்டுக்கட்டின் உருவமாகவே மலைக்கள்ளர்களுக்கு தெரிகிறது. ''அக்கா, தங்கச்சி, பெண்டாட்டி, பிள்ளைகூட உனக்கு ரூவா நோட்டாகத்தான் தெரியுமா?'' என்று அழகிரியையோ பி.ஆர்.பி.யையோ மக்கள் கேட்டால், ''அதுக்கெல்லாம் கிரானைட் அளவுக்கு விலை வராது'' என்று அவர்கள் கோபப்படாமல் பதிலளிக்கக்கூடும்.

இயற்கை வளங்கள் உள்ளிட்ட பொது சொத்துக்களைத் தமது சொந்த சொத்தாக எண்ணி, அவற்றைப் பாதுகாக்க மக்கள் அணிதிரண்டு இந்தக் கொள்ளையர்களை மோதி அழிக்காத வரை இந்தக் கொள்ளை தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.

● அன்பு



படிப்பகம்





# சென்னை பு.மா.இ.மு. தோழர்கள், மக்கள் மீது காக்கி ரவுடிகள் தாக்குதல்!

**செ**ன்னை பு.மா.இ.மு. தோழர்கள் மீது போலீசு தாக்குதல் என்பது தொடர்கதையாகி வருகிறது. ஆகஸ்டு 25 அன்று சென்னை மதுரவாயல் ஏரிக்கரை பகுதியில் ஒரு கொலை நடந்திருந்தது. போலீசு விசாரிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த மக்களை விரட்டிய போலீசு, திடீரென்று வேடிக்கை பார்த்த சில இளைஞர்களை இழுத்து வண்டியில் ஏற்றியது. உடனே அங்கிருந்த பு.மா.இ.மு.-வைச் சேர்ந்த மாணவர்கள் திவாகரும், குமரேசனும் ''சம்பந்தமேயில்லாத அப்பாவி இளைஞர்களை எதற்காக கைது செய்கிறீர்கள்'' என்று எஸ்.ஐ. இடம் எதிர்ப்பு தெரிவித்தனர். 'எதுன்னாலும் நீங்க தான் ஆளா?' என்று கத்தியபடியே கேள்வி கேட்ட இருவரையும் இழுத்து வண்டியில் திணித்துக் கொண்டு அந்த இடத்தை விட்டுப் பறந்தது போலீசு.





''உங்க ஆளுங்க எஸ்.ஐ.யை அடிச்சிருக்காங்க, அதுனால தான் கைது பண்ணிருக்கோம்'' என்று தொலைபேசியில் புளுகினார் இன்ஸ்பெக்டர். கைது செய்யப்பட்டவர்கள் மதுரவாயல் போலீசு நிலையத்தில் இல்லை. மறுநாள் காலை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவும் இல்லை. உடனே, தோழர்களும் பகுதி மக்களுமாக சுமார் 100 பேர் போலீசு நிலையம் சென்றனர். 'அனைவரையும் கைது செய்வேன்' என்று மிரட்டினார் உதவி கமிசனர் சீனிவாசன். ''இரண்டு பேரையும் காட்டாதவரை போகமாட்டோம்'' என்று மக்கள் முழக்கமிட்டனர். மறுகணம் வெறிநாய்களைப் போல பாய்ந்து தடியடி நடத்த தொடங்கியது போலீசு.

மணிகண்டன், பிரேம், வெங்கடேஷ்,ராஜா, பாபு, வீரா, ஆகியோர் படுகாயம் அடைந்தனர். கிருஷ்ணகுமார், விவேக் ஆகிய தோழர்களுக்கு எலும்பு முறிவு. முன்னணித் தோழர் கார்த்திகேயனைச் சூழ்ந்து கொண்டு தாக்கினர். மாணவிகள் சிலரை ஸ்டேசனுக்குள் தூக்கிச் சென்று, ''வெளியில வச்சி அடிச்சா தானடீ ஊர்க்காரன் பார்ப்பான். வா. ஒங்க ஆயி அப்பன் உங்களயெல்லாம் ஊர் மேயிரத்துக்குத்தான் பெத்து வுட்றுக்கானுங்களா?'' என்று மாண்புமிகு அம்மாவின் ஆட்சிக்குப் பொருத்தமான வார்த்தைகளில் ஏசியபடி, கீழே தள்ளி பூட்ஸ் காலால் கழுத்தில், முதுகில் மிதித்திருக்கின்றனர். நள்ளிரவு 2 மணிக்கு பெண்கள் விடுவிக்கப்பட்டனர். ஆண்கள் 50 பேர் வேலூர் சிறையில் ரிமாண்டு. கொடூரமாகத் தாக்கப்பட்டிருந்த திவாகரும் குமரேசனும் பொய்வழக்கில் சிறைப்படுத்தப்பட்டனர்.

பெண்கள் - சிறுவர்கள் என்றெல்லாம் பாராமல் போலீசு தாக்குவதையோ, ஏசுவதையோ கண்டு தோழர்கள் அதிர்ச்சிக்கு உள்ளாகவில்லை. இதைத்தவிர வேறு நாகரிகமான, கவுரவமான நடத்தையை போலீசிடம் நாங்கள் ஒருபோதும் எதிர்பார்க்கவுமில்லை. உழைக்கும் மக்கள் மீது பாய்ந்து பிடுங்கும் போலீசு, கிரானைட் திருடன் பி.ஆர்.பி.யின் காலை நக்குவதைப் பார்த்த பிறகும் மக்களுக்குப் புரியாதா என்ன, போலீசு என்பது பங்களா நாய் படை என்று!

– பு.மா.இ.மு, சென்னை.



படிப்பகம்

www.padippkam.com

## தென்னாப்பிரிக்கச் சுரங்கத் தொழிலாளர் படுகொலை:

# ஆப்பிரிக்கத் தேசிய காங்கிரசின் சாயம் வெளுத்தது!

தென்னாப்பிரிக்காவில், கடந்த ஆகஸ்ட் 16 அன்று வேலை நிறுத்தம் செய்த பிளாட்டினச் சுரங்கத் தொழிலாளர்கள் மீது அந்நாட்டு போலீசுப் படை கண்மூடித் தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தி 34 தொழிலாளர்களைப் படுகொலை செய்துள்ளது.78 தொழிலாளர்கள் படுகாயமடைந்துள்ளனர். 259 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஜாலியன்வாலாபாக்கில் நடந்த படுகொலையை நினைவூட்டும் வகையில், நாற்புறமும் அரண்களை ஏற்படுத்தி தப்பி ஓட முடியாதபடி சுற்றி வளைத்துக்கொண்டு, தானியங்கித் துப்பாக்கிகள் மூலம் ஒரு சில நிமிடங்களில் இந்தப் பயங்கரவாதப் படுகொலையை நடத்தி முடித்திருக்கிறது தென்னாப்பிரிக்கக் கொலைகாரப் போலீசுப் படை.

ஜோகன்ஸ்பர்க்கிலிருந்து ஏறத்தாழ 100 கி.மீ. தொலைவிலுள்ள ரஸ்டன்பர்க் அருகில் மரிக்கானாவிலுள்ள இந்த பிளாட்டினம் சுரங்கத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் லோன்மின் நிறுவனம், உலகத்தில் பிளாட்டினம் உற்பத்தி செய்யும் ஏகபோக நிறுவனங்களில் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. பிளாட்டினத்தின் விலை உயர்வால் அந்நிறுவனத்தின் வருமானம் பல மடங்கு உயர்ந்துள்ள போதிலும், தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு கொடுக்க மறுக்கிறது. கடந்த ஆண்டில் மட்டும் 40 தொழிலாளிகள் விபத்துகளில் கொல்லப்பட்டுள்ள போதிலும், இலாபம் குறையும் என்பதால் சுரங்கத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேம்படுத்தாமல் தொடர்ந்து புறக்கணித்து வருகிறது.

இவற்றால் குமுறிக் கொண்டிருந்த தொழிலாளர்கள், மாதச் சம்பளத்தை தென்ஆப்பிரிக்க ராண்ட் 4000-லிருந்து 12,500 ஆக உயர்த்துமாறும், பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாமல் வேலை செய்யுமாறு நிர்வாகம் கட்டாயப்படுத்துவதை எதிர்த்தும் ஆகஸ்டு 10-ஆம் தேதி முதலாக வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர் .





இச்சுரங்கத்தில், ஆளும் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசு அரசுக்கு ஆதரவான, ஆளும் காங்கிரசு கட்சியின் சுரங்கத் தொழிலாளர்களின் தேசிய சங்கம் (NUM) எனும் கருங்காலி சங்கத்தின் துரோகத்தை எதிர்த்து, சுரங்க மற்றும் கட்டுமானத் தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு (ACMU) என்ற சங்கம் பெரும்பான்மைத் தொழிலாளர்களை அணி திரட்டி இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்துகிறது. ஆளும் கட்சியின் கைக்கூலி சங்கத்தினர் போராடும் தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்த, போராடும் தொழிலாளர்கள் தற்காப்புக்காகத் திருப்பித் தாக்க, இந்த மோதலில் 8 தொழிலாளிகளும் இரு போலீசாரும் கடந்த ஆகஸ்ட் மாதத் தொடக்கத்தில் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து, ஆட்சியாளர்களின் கைக்கூலி சங்கத்தின் தாக்குதலிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளப் போராடும் சங்கத்தின் தொழிலாளர்கள் 3000 பேருக்கு மேல் திரண்டு, சுரங்கத்தை ஒட்டியுள்ள சிறிய குன்றின் மீது தடிகளுடன் அமர்ந்து வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்தபோது, அவர்களைச் சுற்றிவளைத்துக் கண்மூடித்தனமாகச் சுட்டுக் கொன்றுள்ளது போலீசு.



படிப்பகம்

www.padippkam.com

வெள்ளை நிறவெறி அரசாங்கத்தை அகற்றிவிட்டு கருப்பினத்தவரின் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசு ஆட்சிக்கு வந்த போதிலும், நாட்டின் தங்க, வைர, பிளாட்டினச் சுரங்கங்களும் பொருளாதாரமும் ஏகாதிபத்திய நிறுவனங்களின் இரும்புப் பிடியில்தான் உள்ளன. ஏகாதிபத்திய முதலாளிகளுக்குச் சேவை செய்வதில் முந்தைய நிறவெறி ஆட்சிக்கும், தற்போதைய ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் ஆட்சிக்கும் சாராம்சத்தில் எந்த வேறுபாடும் இல்லை. தென்னாப்பிரிக்க கருப்பின அதிபர் ஜாக்கோப் ஜுமா, போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களை வன்முறையாளர்கள் என்று சாடி, அவர்களைக் கைது செய்யுமாறு போலீசுக்கு உத்தரவிட்டுள்ளார். ஆட்சியாளர்களின் விசுவாசக் கருங்காலி சங்கம், போலீசுக்கு ஆள்காட்டி வேலையைச் செய்து கொண்டிருக்கிறது. இப்படுகொலையின் மூலம் தொழிலாளி வர்க்கத்தின் மீது அப்பட்டமாக பாசிச பயங்கரத்தை ஏவிவிட்டு, மறுகாலனியாக்கக் கொள்ளைக்குத் தேவையான உத்திரவாதத்தை நிலைநாட்டி, தன்னைப் பன்னாட்டு நிறுவனங்களின் விசுவாச எடுபிடிதான் என்பதைக் கருப்பினத்தவரின் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசு அரசும், அதன் கொலைகாரப் போலீசுப்படையும், ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் தொழிற்சங்கமும் மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளன.

இப்பயங்கரவாதப் படுகொலையை எதிர்த்து தென்னாப்பிரிக்கா மட்டுமின்றி, லோன்மின் நிறுவனத்தின் தலைமையகமான இலண்டனிலும் உலகின் பல நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன. 1960-இல் வெள்ளை நிறவெறி அரசை எதிர்த்துப் போராடிய 69 கருப்பின மக்கள் போலீசால் கொல்லப்பட்ட ஷார்ப்வில்லே படுகொலைக்கு நிகரான இந்தப் பச்சைப் படுகொலையானது, முதலாளித்துவ பயங்கரவாதத்தை உலகெங்கும் வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது.

● குமார்

# “எது வன்முறை? யார் வன்முறையாளர்கள்?”

## - முதலாளித்துவ பயங்கரவாதத்துக்கு எதிராக புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம்

கடந்த ஜூலை மாதம் அரியானா மாநிலத்தின் மானேசரிலுள்ள மாருதி ஆலைத் தொழிலாளர்கள் முதலாளித்துவ பயங்கரவாதத்துக்கு எதிராக நடத்திய போராட்டத்தை வாழ்த்தி பு.ஜ.தொ.மு. சார்பில் தமிழகமெங்கும் சுவரொட்டிப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.




இதைத் தொடர்ந்து முதலாளிகளின் ஊதுகுழலான ‘‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’’ என்ற ஆங்கில நாளேடு, தமிழகத்தில் வன்முறையைத் தூண்டித் தொழில் அமைதியைக் குலைக்க பு.ஜ.தொ.மு. முயற்சிப்பதாகவும், இது ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாத அமைப்பு என்றும் ஒரு அவதூறு செய்தியை கடந்த ஜூலை 29 அன்று வெளியிட்டது.

இதுவொருபுறமிருக்க, தீவிரவாத பு.ஜ.தொ.மு. மற்றும் அதன் தோழமை அமைப்புகள் சிறீபெரும்புதூர், மறைமலை நகர், ஓசூர், கோவை மற்றும் பிற பகுதிகளில் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும், இதனால் மாநிலத்தில் தொழிலமைதி பாதிக்கப்படுவதாகவும், இவ்வமைப்புகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறும் தென்னிந்திய முதலாளிகள் கூட்டமைப்பு ஜெயலலிதாவிடம் ஜூலை 31 அன்று மனு கொடுத்துள்ளது.

டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேட்டின் அவதூறைச் சாடியும், குறிப்பாக மாருதி தொழிலாளர்களின் போராட்டத்தை வன்முறை, தீவிரவாதம் என்றெல்லாம் அவதூறு செய்து பொய்ப்பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளதை எதிர்த்தும், ‘‘உழைக்கும் மக்களின் போராட்டங்களை இழிவுபடுத்தும் டைம்ஸ் ஆஃப் இந்தியா கும்பலுக்குப் பாடம் புகட்டுவோம்! புரட்சிகர அமைப்புகளை ஒடுக்கச் சொல்லும் முதலாளி சங்கங்களின் சதிகளை முறியடிப்போம்!’’ - என்ற முழக்கங்களுடன் 4.8.2012 அன்று புதுச்சேரியிலும், 6.8.2012 அன்று சென்னையிலும், 9.8.2012 அன்று ஓசூரிலும் பு.ஜ.தொ.மு. சார்பில் பெருந்திரளான தொழிலாளர்களின் பங்கேற்புடன் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

தனியார்மய - தாராளமயத்தால் தொழிலாளிகளை வரைமுறையின்றிச் சுரண்டி முதலாளிகள் ஒடுக்குவதையும், எவ்விதப் பாதுகாப்புமின்றி தொழிலாளிகள் விபத்துகளில் படுகொலை செய்யப்படுவதையும், முதலாளித்துவ பயங்கரவாதத்தின் எதிர்விளைவுதான் மாருதி தொழிலாளர்களின் போர்க்குணமிக்க தாக்குதல் என்பதை விளக்கியும், முதலாளித்துவ பயங்கரவாதத்துக்கு எதிராகவும், தனியார்மய - தாராளமயத் தாக்குதலுக்கு எதிராகவும் அனைத்து உழைக்கும் மக்களும் ஓரணியில் திரண்டு போராட அறைகூவியும் இந்த ஆர்ப்பாட்டங்களில் முன்னணியாளர்கள் எழுச்சியுரையாற்றினர்.

தொடரும் முதலாளித்துவ பயங்கரவாதத்துக்கு எதிராகத் தொழிலாளர்களையும் உழைக்கும் மக்களையும் அணிதிரட்டும் நோக்கத்துடன், ‘‘திரண்டெழுந்தனர் மாருதி தொழிலாளர்கள்! தீக்கிரையானது முதலாளித்துவ பயங்கரவாதம்! எது வன்முறை? யார் வன்முறையாளர்கள்?’’ என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரங்களுடன் தமிழகம் தழுவிய பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டுள்ள ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகள், தாங்கள் செயல்படும் பகுதிகளில் தொடர்ச்சியாக கருத்தரங்குகளை நடத்தி வருகின்றன.

- பு.ஜ. செய்தியாளர்கள்



படிப்பகம்

www.padippkam.com

## அரசுப் பள்ளிகள்:

# ஆங்கிலவழிக் கல்வி வந்தது முன்னே! தனியார்மயம் நுழையும் பின்னே!!

**அரசுப் பள்ளிகளைப் படிப்படியாகத் தனியார்வசம் ஒப்படைக்கும் நோக்கத்தோடுதான் அரசுப் பள்ளிகளில் ஆங்கிலவழி வகுப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுகிறது.**

தமிழகத்தில் சுமார் 320 அரசுப் பள்ளிகளில் இந்த ஆண்டில் இருந்து ஆங்கிலவழிக் கல்வி அமல்படுத்தப்படும் என அரசு அண்மையில் அறிவித்திருந்தது. ஏற்கெனவே ஆங்கிலவழிக் கல்வி ஒருசில அரசுப் பள்ளிகளில் மட்டுமே இருந்த நிலையில், மாவட்டந்தோறும் 10 பள்ளிகள் வீதம், 24 ஆயிரம் மாணவர்களைத் தமிழ் வழிக்கல்வியில் இருந்து ஆங்கிலவழிக் கல்விக்கு மாற்றி, அரசு உடனடியாகச் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. உயர்கல்வி நிறுவனங்கள், தொழில்துறை ஆகியவற்றின் தேவைக்காக என்றும், பெற்றோர்கள் விரும்புகிறார்கள் என்றும் அரசு இதற்குக் காரணம் சொல்லுகிறது.

ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு பிரிவுகள் என அறிமுகமாகியுள்ள ஆங்கிலவழிக் கல்வி, வெகுவிரைவில் தமிழ்வழிக் கல்வியை அரசுப் பள்ளிகளிலிருந்து ஒழித்துக் கட்டப் போகிறது. அரசின் நடவடிக்கை ஆங்கிலவழிக் கல்வியை வலிமைப்படுத்தி தமிழ்நாட்டில் தமிழ் மொழிக்கு இடமில்லாமல் செய்துவிடும் என்ற கோணத்தில் இருந்து குமரி அனந்தன், பொன்வைக்கோ போன்றவர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஆங்கிலவழிக் கல்வி என்பது மொழிப் பிரச்சினை மட்டும் அல்ல. அரசுப் பள்ளிகளில் வீழ்ச்சியடைந்து வரும் மாணவர் சேர்க்கை விகிதத்தை உயர்த்திக் காட்டி, அப்பள்ளிகளைத் தனியார் முதலாளிகளிடம் ஒப்படைக்கும் நயவஞ்சகத் திட்டத்தின் ஒருபகுதிதான் இது.

இந்நயவஞ்சகத் திட்டத்தை மூன்றாண்டுகளுக்கு முன்பே சென்னை மாநகராட்சி பள்ளிகளில் ஆரம்பித்து விட்டனர். பல்வேறு பெயர்களில் இயங்கிவந்த அப்பள்ளிகளை ''சென்னைப் பள்ளி'' என மாற்றி, 70 பள்ளிகளில் ஆங்கிலவழிக் கல்வியைக் கொண்டுவந்தனர். பின்னர் தனியார் நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் உதவியுடன் பள்ளிகளின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்தி, மாணவர்களின் சேர்க்கை விகிதத்தை அதிகரித்தனர். அவற்றில் 10 பள்ளிகளைத் தேர்வு செய்து தனியார் வசம் ஒப்படைப்பது என்பது அரசின் திட்டம். தற்போது அரசுப்பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வியைத் தொடங்கியிருப்பதும் தனியார்மயமாக்கலை நோக்கமாகக் கொண்டதுதான்.

தனியார்துறை - பொதுத்துறை கூட்டு என்பது உலக வங்கியால் வழிகாட்டப்படும் தனியார்மயத்தின் ஒரு வடிவம். இது முழுமையான தனியார்மயத்தைக் காட்டிலும் நயவஞ்சகமானது. சுகாதாரம், துறைமுகம், விமானத்தளம், ரயில்வே, கல்வி போன்றவற்றை பொதுத்துறை - தனியார்துறை கூட்டு எனும் வடிவத்துக்கு மாற்ற வேண்டுமென்று 11-ஆவது ஐந்தாண்டுத் திட்டம் கோருகிறது. மத்திய மனிதவளத்துறையும், நாடெங்கும் பொதுத்துறை-தனியார்துறை கூட்டு முறையில் உயர்நிலைப்பள்ளிகளை உருவாக்க பொதுக்கொள்கையை வகுத்துள்ளது.

சித்தலப்பாக்கம் அரசுப்பள்ளி-தெருவே வகுப்பறை(கோப்புப் படம்). அரசுப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளைச் செய்து தருவதைப் புறக்கணித்து வரும் அரசு, ஆங்கிலவழிக் கல்வியைக் கொண்டு வருவதேன்?



தனிநபர்களோ, அறக்கட்டளைகளோ பள்ளிக் கட்டடங்களைக் கட்டி, ஆசிரியர்களை நியமிப்பதும், அப்பள்ளிகளைக் குறிப்பிட்ட சில காலம் நடத்திய பின்னர், அரசு அவற்றை 'அரசு உதவிபெறும்' பள்ளிகளாக அங்கீகரித்து ஆசிரியர்களுக்கு அரசே ஊதியம் வழங்குவதும்தான் இதுவரை இருந்த நடைமுறை.

இதை அப்படியே தலைகீழாக்கியுள்ளது, புதிய கொள்கை. இதன்படி, அரசே பள்ளிகளைக் கட்டிவைத்து கார்ப்பரேட் நிறுவனங்களை ஏற்று நடத்தச் சொல்லும். ரூ.25 இலட்சம் முன்பணம்



படிப்பகம்

www.padippkam.com

செலுத்தும் வசதிகொண்ட எந்த நிறுவனமும் இதற்குத் தகுதிபடைத்ததாகும். நாடெங்கும் 3000 பள்ளிகள் இவ்வாறு உருவாக்கப்பட்டு, ஒவ்வொரு பள்ளியும் சுயமாகவே கட்டணங்களை நிர்ணயித்துக் கொள்ளும். ஆசிரியர்களுக்கான ஊதியத்தையும் அப்பள்ளிகளே தீர்மானிக்கும். பாடத்திட்டம் ஒன்று இருந்தாலும், பள்ளி நேரம் முடிந்த பின், தனியார் முதலாளிகள் தமக்குத் தேவையானதுறைகளில் தேவையான மாணவர்களைப் பயிற்றுவித்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர். காலப் போக்கில் பாடத்திட்டத்தையும் தனியார் முதலாளிகளே முடிவு செய்வதை நோக்கிச் செல்வதற்கான முதல் படியாகும் இது.




அசாம் மாநிலத்திலுள்ள அரசுப்பள்ளிகளில் தொழிற்படிப்புகளை பியர்சன் என்ற தனியார் கார்ப்பரேட் நிறுவனத்துடன் இணைந்து நடத்த போடப்பட்ட ஒப்பந்தத்தை, அந்நிறுவனத்தின் தலைவரிடம் அளிக்கிறார், அசாம் முதல்வர் கோகாய். (இடமிருந்து இரண்டாவது)

'அரசுப் பள்ளிகள்' என்றே அழைக்கப்படும் இந்தப் பள்ளிகள் ஏழை மாணவர்களிடம் மாதம் ரூ.25-ம், பிற மாணவர்களிடம் மாதம் ரூ.1000மும் வசூலிக்கலாம். இதில் ஏழை மாணவர்களுக்கான மானியத்துக்கு அரசு டோக்கன்களை வழங்கிவிடும். பள்ளி ஒன்றுக்கு 1000 மாணவர்களுக்கு டோக்கன் தர 2017-ஆம் ஆண்டுவரை அரசு ரூ.10ஆயிரம் கோடி வரை செலவிட உள்ளதாகக் கூறுகிறது.

மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் தனியார் மருத்துவமனைகளை வாழ வைப்பதைப் போல, இந்தப் பணம் பள்ளிகளை நடத்தும் தனியார் முதலாளிகளுக்கு வழங்கப்படும் மானியமாகவே இருக்கும். அதற்கு மேல் கட்டணம் செலுத்துமாறு ஏழை மாணவர்கள் நிர்ப்பந்திக்கப்படுவார்கள். இல்லையேல் ஒதுக்கப்படுவார்கள். தற்போது தனியார் பள்ளிகளில் 25% ஒதுக்கீடு தரும் கல்வி உரிமைச் சட்டம் அமலாகும் யோக்கியதையிலிருந்தே இதனைப் புரிந்து கொள்ள முடியும்.

இப்படி கரையான் புற்றெடுத்து கருநாகத்திடம் ஒப்படைக்கும் இந்த அற்புதத் திட்டத்தில் தலைநகர் தில்லிதான் முன்னிலை வகிக்கிறது. அரசுப் பள்ளிகளை தாங்கள் ஏற்று நடத்த வேண்டுமானால், அக்கட்டிடத்தை தங்களது வணிக நோக்கத்துக்கு பயன்படுத்திக் கொள்வோம் என்று கூறுகின்றன கார்ப்பரேட் நிறுவனங்கள். ஆரம்பத்திலேயே இவ்வாறு செய்வது அரசாங்கத்தை அம்பலப்படுத்திவிடும் என்பதால், இது இன்னும் நடைமுறைக்கு வராமல் இழுபறியில் உள்ளது.

நகரின் மையப் பகுதிகளில் இருக்கும் அரசுப் பள்ளிக் கட்டிடங்களைத் தனியாரிடம் தருவது மட்டுமின்றி, பள்ளியை நடத்தப்போகும் முதலாளிகளுக்கு இலாபம் கிடைக்கும் வகையில் மாணவர் எண்ணிக்கை இருப்பதையும் அரசு உத்திரவாதப்படுத்த வேண்டியிருக்கிறது. தற்போது அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் சேர்க்கைவிகிதம் வீழ்ச்சியடைந்து வருகிறது. இந்நிலையில் மாணவர்களே வராத பள்ளியை ஏற்பதற்கு எந்த கார்ப்பரேட் நிறுவனந்தான் ஒப்புக்கொள்ளும்? எனவே சேர்க்கை வீதத்தைக் கூட்ட, மாணவர்களை ஈர்த்தாக வேண்டும். இந்தக் காரணத்துக்காகவும் ஆங்கில வழிக் கல்வியைத் திணிக்கிறது அரசு.

கல்வி தனியார்மயமாவதும், தாய்மொழிக் கல்வி புறக்கணிக்கப்படுவதும் ஒன்றோடொன்று இணைந்தவை. தாய் மொழி என்பது ஒரு சமூகத்தின் பண்பாடு, விழுமியங்கள், பாரம்பரிய அறிவு, வரலாற்று உணர்வு ஆகியவற்றோடு தொடர்பு கொண்டதாகும். சுயசார்புப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட ஒரு சமூகம்தான் தனது உற்பத்தி மற்றும் பிற சமூகத்தேவைகளுக்கு உகந்தவாறு, மக்களுக்கு தாய்மொழியிலேயே கல்வியைக் கொடுக்கும்.

தற்போதைய உலகமயமோ, பன்னாட்டு நிறுவனங்களின் தேவைக்குச் சேவை செய்யும் உள்கட்டமைப்பையே இங்கு உருவாக்குகிறது. அமெரிக்க - ஐரோப்பிய முதலாளிகளுக்கான அவுட்சோர்ஸிங் மையமாக இந்தியப் பொருளாதாரம் கட்டமைக்கப்படுவதால், அதற்கு ஆங்கிலம் அறிந்த, அடிமைத்தனமான, தமிழ் மண்ணின் வாசனை அற்ற மூளைகளே தேவைப்படுகின்றன.

எனவே, கல்வியின் நோக்கமும் மாறுகிறது. சொந்த மண்ணையும் மக்களையும் பற்றித் தெரியாத, அவர்களுடைய வாழ்க்கையை - பண்பாட்டைப் புரிந்து கொள்ளக்கூட முடியாத ஒரு கூட்டம் உருவாக்கப்படுகிறது. தேசிய உணர்வு, மொழியுணர்வு, பண்பாடு, வரலாற்றறிவு, சமூகப் பொறுப்புணர்ச்சி, குடிமை உணர்வு போன்ற மனிதத்தன்மைகள் ஏதுமற்றவர்களாக இளைஞர்களைப் பயிற்றுவிப்பதே தமது எதிர்காலத்துக்கு நல்லது என்று பன்னாட்டு முதலாளிகளும் தரகு முதலாளிகளும் கருதுகின்றனர்.

ஒருபுறம் ஆங்கில மோகம், இன்னொருபுறம் தமிழ் வழியில் படித்தால் வேலை கிடைக்காது என்ற அச்சம் - இரண்டும் பிடித்தாட்டுவதால், மக்கள் ஆங்கிலவழிக் கல்வியில் விழுகிறார்கள். இந்த அடிமை மோகத்தை எதிர்த்து விடாப்பிடியாக நாம் போராடித்தான் ஆகவேண்டும்.

● கதிர்



படிப்பகம்

www.padippkam.com

## சிரியா:

# அமெரிக்க பயங்கரவாதத்தின் மற்றுமொரு சோதனைச்சாலை!

**தனது மேலாதிக்க நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ள, அமெரிக்கா முசுலீம் பயங்கரவாதத்தை ஊட்டி வளர்க்கும் என்பதற்கு சிரியா இன்னுமொரு உதாரணமாக உள்ளது.**

ஆப்கானிஸ்தான், இராக், லிபியா - அமெரிக்கா தலைமையிலான மேற்குலக ஏகாதிபத்திய நாடுகளால் ஆக்கிரமிக்கப்பட்டு, மறுகாலனியாக்கப்பட்டுள்ள இந்த நாடுகளின் வரிசையில் அடுத்ததாக சிரியா குறிவைக்கப் பட்டுள்ளது. வடக்கே துருக்கியையும், கிழக்கே இராக்கையும், மேற்கே இசுரேல் மற்றும் லெபனானையும் எல்லைகளாகக் கொண்ட சிரியா, மேற் காசியாவின் தொன்மையான நாகரிகம் கொண்ட நாடு களில் ஒன்றாகும். 1960 - களில் சிரியாவில் பாத் கட்சியின் தலைமையில் ஒரு கட்சி சர்வாதிகார ஆட்சி நிறுவப் பட்டு, ஹஃபேஸ் அல் அஸாத் சிரியாவின் அதிபரானார். அவர் இறந்த பின் அவரது மகனான பஷார் அல் அஸாத் சிரியாவின் அதிபராக முடிசூட்டப்பட்டார். சன்னி பிரிவைச் சேர்ந்த முசுலீம்கள் பெரும்பான்மையாகவும், ஷியா முசுலீம்களில் ஒரு பிரிவான அலாவி முசுலீம்கள் மற்றும் கிறித்தவர்கள், குர்து இனத்தவர்கள் சிறுபான்மை யினராகவும் வசிக்கும் சிரியாவில் விவசாயமும், கச்சா எண்ணெய் ஏற்றுமதியும் முக்கியத் தொழில்களாக உள்ளன.

பாத் கட்சியின் ஆட்சி நிறுவப்பட்ட பிறகு, சிரியாவில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக அவசரநிலை பாசிச காட் டாட்சிதான் நடந்து வருகிறது. பெயரளவிலான முத லாளித்துவ சீர்திருத்தங்கள், உரிமைகள்கூட அந்நாட்டு மக்களுக்கு பாத் கட்சி ஆட்சியின்கீழ் வழங்கப்பட வில்லை என்பதெல்லாம் உண்மைதான். அதே சமயம், பாத் கட்சியின் ஆட்சியை எதிர்க்கும் எதிர்த் தரப்பு ஒன்றும் சொக்கத் தங்கம் கிடையாது. மன்ன ராட்சி நடைபெறும் சவூதி அரேபியா, இராணுவ சர்வா திகார ஆட்சி நடைபெறும் துருக்கி, மத அடிப்படை வாதக் கட்சியான முசுலீம் சகோதரத்துவக் கட்சி, ஜிஹாதிகள் உள்ளிட்ட ஒரு கும்பல்தான் - பிற்போக்குத் தனமும் ஏகாதிபத்திய அடி வருடித்தனமும் நிறைந்த கும்பல்தான் சிரியாவில் உள் நாட்டுப் போரைத் தூண்டிவிட்டு நடத்தி வருகிறது. சிரி யாவில் பஷார் அல் அஸாத் ஆட்சியைத் தூக்கியெறிந்து, அங்கு அமெரிக்கா மற்றும் இசுரேலின் நலன்களைப் பாது காக்கும் பொம்மையாட்சியொன்றை நிறுவ வேண்டும் என்பதைத் தாண்டி, இக்கும்பலுக்கு வேறு நோக்கமும் கிடையாது.




சிரியாவில் பாத் கட்சியின் தலைமையில் உள்ள அரசு, இரானில் இசுலாமியப் புரட்சி ஏற்பட்டதிலிருந்தே அந் நாட்டினை ஆதரித்து வருவதோடு, இரானுடன் நெருக்க மான அரசியல், இராணுவ உறவுகளைப் பேணி வருகிறது. இன்னொருபுறம், இசுரேலின் பிராந்திய மேலாதிக்கத்தை எதிர்த்துப் போராடி வரும் லெபனானைச் சேர்ந்த ஹெஸ் புல்லா போராளிக் குழுவையும் பாலஸ்தீன விடு தலைக்காக ஆயுதமேந்திப் போராடி வரும் ஹமாஸ் குழுவையும் ஆதரித்து வருகிறது. சிரியாவின் பாரம்பரியப் பகுதியான கோலான் மலைக் குன்றின் ஒரு பகுதியை இசுரேல் ஆக்கிரமித்து வைத்திருப்பதால், இசுரேலுடன் சமாதானமாகச் செல்லுவதற்கும் அந்நாட்டு அரசு மறுத்து வருகிறது.

இந்தக் காரணங்களால்தான் அமெரிக்காவும் இசு ரேலும் சிரியாவில் ஒரு ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்பதில் தீவிரம் காட்டுகின்றன. மேலும், மேற்காசியாவில் இரானின் செல்வாக்கை மட்டுப்படுத்தி, அதைத் தனிமைப்படுத்துவதற்கும், எதிர்காலத்தில் இரானில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதற்கும் சிரி யாவில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவருவதை முதல் படியாகக் கருதுகின்றன. சிரி யாவும் இரானும் வீழ்ந் தால், கச்சா எண்ணெய் வளம் நிறைந்த மேற்காசியா தொடங்கி மத்திய ஆசியா வரை தனது மேலாதிக் கத்தை எஃகு போல உறுதிப் படுத்திக் கொண்டு, அப்



படிப்பகம்

www.padippkam.com

பகுதியிலிருந்து ரசியா - சீனாவின் செல்வாக்கையும் அப்புறப்படுத்தி விடலாம் என்பதுதான் அமெரிக்கா வின் திட்டமாக உள்ளது.

அமெரிக்கா, சிரியாவில் ஆட்சி கவிழ்ப்பை நடத்த இன்று நேற் றல்ல, கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாகவே பல திரைமறைவு வேலைகளைச் செய்துவருகிறது. பத்தாண்டுகளுக்கு முன்பு அமெ ரிக்கா தீவிரவாதத்துக்கு எதிரான போரை நடத்தத் தொடங்கிய சம யத்திலேயே, அப்பொழுது அமெ ரிக்க அதிபராக இருந்த ஜார்ஜ் புஷ் சிரியாவைத் தீய நாடுகளுள் ஒன் றாகக் குறிப்பிட்டு, அமெரிக்காவின் மேலாதிக்கப் போர் இலக்குகளுள் ஒன்றாக வைத்தார். இராக் மீதான ஆக்கிரமிப்புப் போரை அமெரிக்கா நடத்தி வந்த சமயத்தில் நேடோ படைகளின் தலைவராக இருந்த ஜெனரல் வெஸ்லி கிளார்க், ''இராக் போர் முடிந்த பிறகு அமெரிக்கா ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வர விரும்பும் ஏழு நாடுகளுள் சிரியாவும் ஒன்று'' எனக் குறிப்பிட்டார். ''2009-ஆம் ஆண்டு அமெரிக்க அரசு சிரியாவின் எதிர்தரப்பிற்கு உளவு பார்க்கும் தொலைதொடர்புச் சாதனங்களைக் கொடுத் ததை'' விக்கிலீக்ஸ் இணையதளம் அம்பலப்படுத்தி யிருக்கிறது.


சிரிய அதிபர் பஷார் அல் அஸாத்

அரபு நாடுகளில் சர்வாதிகார ஆட்சிகளுக்கு எதிராக வீசுவதாகச் சொல்லப்படும் ''அரபு வசந்தம்'' அமெரிக் காவிற்கு சிரியாவில் நேரடியாகத் தலையீடு செய்யும் வாய்ப்பை வழங்கியது. கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் சிரியாவின் டேரா பகுதியில் அதிபர் பஷாருக்கு எதிராக ஒரு திடீர் ஆர்ப்பாட்டம் நடந்தவுடனேயே, சவூதி அரே பியாவின் ஆதரவைப் பெற்ற சன்னி பிரிவைச் சேர்ந்த ஜிஹாதிகள், ஜோர்டானிலிருந்து சிரியாவுக்குள் நுழைந்து தாக்குதலைத் தொடங்கினர். கடந்த ஒன்றரை ஆண்டு களாக அமெரிக்காவின் ஆதரவு பெற்ற ஆயுதந்தாங்கிய எதிர்த்தரப்பு நடத்தும் தாக்குதல்கள் சிரியாவில் வசிக்கும் சிறுபான்மை மத, இன பிரிவினருக்கு எதிரான வன்மு றையாகயும், அரசின் நிலைகளைத் தாக்கி விட்டு ஓடும் பயங்கரவாத நடவடிக்கை யாகவும்தான் இருந்து வரு கின்றன.

சிரிய அதிபரை எதிர்த்து இன்று ஆயுதத் தாக்குதல் களை நடத்தி வரும் கூட் டணியில் உள்ள குழுக்களி லேயே முசுலீம் சகோதரத்து வக் கட்சிதான் ஓரளவு பெரி யதும் அமைப்புரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட கட் சியாகும். இது, சவூதி அரேபியா வின் மன்னர் குடும்பத்தின் ஆத ரவைப் பெற்றுள்ள, சன்னி முசுலீம் பிரிவைச் சேர்ந்த மத அடிப்படை வாத அமைப்பாகும். இந்தக் கட் சியையும், அஸாத்துடன் நடந்த பதவி - அதிகாரத்திற்கான போட்டி யில் தோற்று நாட்டைவிட்டு ஓடிப் போய் துருக்கியிலும், மேற்குலக நாடுகளிலும் தஞ்சமடைந்துள்ள முன்னாள் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட பலரையும் ஒன்றிணைத் துதான் மேற்குலக ஏகாதிபத்தியங் கள் ''சிரியா தேசிய கவுன்சில்'' என்ற பெயரில் ஒரு கதம்பக் கூட் டணியையும், ''சுதந்திர சிரிய இராணுவ''த்தையும் அமைத் துள்ளன.

அரபு வசந்தம் பற்றிய நூலொன்றை எழுதிவரும் மும் பையைச் சேர்ந்த அலியா அல்லானா என்ற பத்திரிகை யாளர், ''சிரியா தேசிய கவுன்சிலில் இடம் பெற்றுள்ள தலைவர்களுக்கும் சிரிய மக்களுக்கும் எவ்விதத் தொடர் பும் கிடையாது. அவர்கள் அனைவரும் துருக்கியின் இஸ் தான்புல் நகரிலுள்ள ஐந்து நட்சத்திர விடுதிகளில் உட் கார்ந்துகொண்டு, தமது எஜமானர்கள் வீசியெறியும் காசைப் பங்கு போட்டுக் கொள்வதில் ஒருவருக்கொரு வர் குடுமிப்பிடி சண்டை போட்டுக் கொள்வதாக'' அம் பலப்படுத்துகிறார் (தி ஹிந்து, 24.07.2012, பக்.9). மேலும், சுதந்திரசிரிய இராணுவம் அமெரிக்காவுக்கு நெருக்கமான அல் காய்தா பிரிவைச் சேர்ந்த ஜிஹாதிகளையும் லிபியா விலிருந்து கொண்டுவரப்படும் கூலிப்படையினரையும் கொண்டு கட்டப்பட்டிருப்பதை இங்கிலாந்தைச் சேர்ந்த டைம்ஸ் இதழின் நிருபர் ஜாஃப்ரி கேட்டல்மேனும் ஜோர்டான் நாட்டைச் சேர்ந்த பத்திரிகைகளும் அம்பலப் படுத்தியுள்ளன.

சிரியாவின் முக்கிய நகரங்களுள் ஒன்றான அலெப் போவில் மட்டும் ஏறத்தாழ 12,000 சுதந்திர சிரிய இராணு வத்தினர் ஊடுருவியிருப்பதாகவும், இவர்களுள் சரிபாதிப் பேர் ஆப்கான், செசன்யா, லிபியா, சூடான் ஆகிய நாடு களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள ஜிஹாதிகள்

**அமெரிக்காவால் ஆதரிக்கப்படும், இக்கூலிப்பட்டாளத்திற்கான பயிற்சியினை துருக்கி வழங்குகிறது. இதற்குத் தேவைப்படும் நிதியை சவூதி அரேபியாவும் கத்தாரும் வழங்குகின்றன. இவர்களுக்குத் தேவைப் படும் ஆயுதங்களை அமெரிக்கா கொடுக்கிறது. இக்கூலிப்பட்டாளம் சிரியாவினுள் நடத்திவரும் தாக்குதல்களை, எல்லை தாண்டிய பயங்கரவாத மாகத்தான் கருதமுடியுமே தவிர, அதனை ஜனநாயக உரிமைகளுக்கான ஆயுதப் போராட்டமாகவோ, மக்கள் இயக்கமாகவோ கருதமுடியாது.**



படிப்பகம்

www.padippkam.com

எனக் குறிப்பிடுகிறார், பிரேம் சங்கர் ஜா என்ற இந்தியப் பத்திரிகையாளர். (தி ஹிந்து, ஆக்.7, பக்.8)

அமெரிக்கா-இசுரேலின் கூலிப்படையாக உருவாக்கப்பட்டிருக்கும் இந்த சுதந்திர சிரிய இராணுவம், ''ஷியா பிரிவு அலாவி முசுலீம்களைக் கல்லறைக்கும் கிறித்தவர்களை பெய்ரூட்டுக்கும் அனுப்புவோம்'' என வெளிப்படையாகவே மதவெறிப் பிரச்சாரத்தை நடத்தி வருகிறது. இக்கூலிப்பட்டாளத்திற்கான பயிற்சியினை துருக்கி வழங்குகிறது. இதற்குத் தேவைப்படும் நிதியை சவூதி அரேபியாவும் கத்தாரும் வழங்குகின்றன. இவர்களுக்குத் தேவைப்படும் ஆயுதங்களை அமெரிக்கா கொடுக்கிறது. இக்கூலிப்பட்டாளம் சிரியாவினுள் நடத்திவரும் தாக்குதல்களை, எல்லை தாண்டிய பயங்கரவாதமாகத்தான் கருதமுடியுமே தவிர, அதனை ஜனநாயக உரிமைகளுக்கான ஆயுதப் போராட்டமாகவோ, மக்கள் இயக்கமாகவோ கருதமுடியாது.

•••

மார்ச் 2011-க்குப் பின் அமெரிக்கா தலைமையிலான மேற்குலக ஏகாதிபத்தியங்கள் அஸாத் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காகப் பல்வேறு சதித் திட்டங்களை நடைமுறைப்படுத்தத் தொடங்கியதையடுத்து, அதிபர் அஸாத், ''அவரசநிலைச்சட்டத்தைத் திரும்பப் பெறுவது; எதிர்க்கட்சிகளின் மீதான தடைகளை விலக்கிக் கொள்வது; புதிய அரசியல் சாசன சட்டத்தை உருவாக்கி, அதனைப் பொதுமக்களின் வாக்கெடுப்புக்கு விடுவது; புதிய அதிபர் தேர்தலை 2014 - இல் நடத்துவது'' உள்ளிட்டுப் பல்வேறு சீர்திருத்தங்களை அறிவித்ததோடு, அவற்றைச் செயல்படுத்தவும் முனைந்தார். மேலும், ஐ.நா.வின் முன்னாள் தலைவர் கோஃபி அன்னான் அளித்த அமைதி திட்டத்தின்படி 300 ஐ.நா. பார்வையாளர்கள் நாட்டு நடப்புகளைக் கண்காணிக்க அனுமதிக்கப்பட்டனர். அரபு லீக் கூட்டமைப்பு கோரியபடி, சிறிய நகரங்களிலிருந்து இராணுவம் திரும்பப் பெறப்பட்டது.

இந்த அரசியல் சீர்திருத்தங்களும் சலுகைகளும், ''தான் ஆட்சியில் தொடருவதற்கு அமெரிக்காவின் சம்மதத்தைப் பெற்றுத் தரும்'' என எதிர்பார்த்தார், பஷார் அல் அஸாத். ஆனால், அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் ஆட்சி மாற்றத்திற்குக் குறைவாக எதையும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டன. அது மட்டுமின்றி, கோஃபி அன்னானின் அமைதித் திட்டத்தைச் சீர்குலைக்கும் சதிகளிலும், சிரிய அதிபருக்குப் பல்வேறு முனைகளில் நெருக்கடி கொடுக்கும் நடவடிக்கைகளிலும் இறங்கின.

அரபு நாடுகளின் கூட்டமைப்பிலிருந்தும், முசுலீம் நாடுகளின் கூட்டமைப்பிலிருந்தும் சிரியா இடைக்கால நீக்கம் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டது. அரபு நாடுகளின் கூட்டமைப்பும் அமெரிக்காவும் சேர்ந்துகொண்டு சிரியாவின் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் மூன்று முறை தீர்மானங்களைக் கொண்டு வந்தன. அதிபர் பஷார் அல் அஸாத்தை ஆதரிக்கும் சீனாவும், ரசியாவும் தமது ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி இத்தீர்மானங்களைத் தோற்கடித்தன. மூன்றாவது முறையாகவும் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டவுடனேயே, ''நாங்கள் ஐ.நா.விற்கு அப்பாற்பட்டுச் செயல்படுவோம்'' என அமெரிக்கா அறிவித்தது. அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளான ஐரோப்பிய யூனியனும், துருக்கியும் ஒருதலைப்பட்சமான பொருளாதாரத் தடைகளை சிரியா மீது விதித்தன.

இந்த அரசியல் நெருக்கடிகள் ஒருபுறமிருக்க, ''சுதந்திர சிரிய இராணுவத்தினருக்கு அமெரிக்காவின் உளவு அமைப்புகள் பயிற்சி அளிக்கும்'' என அமெரிக்க அரசு வெளிப்படையான உத்தரவை வெளியிட்டது. சிரியாவின் பிரதமர் உள்ளிட்டு, பல இராணுவ உயர் அதிகாரிகள் விலைக்கு வாங்கப்பட்டு, சிரிய அரசிலும் இராணுவத்திலும் பிளவை உண்டாக்கும் சதிகள் அரங்கேற்றப்பட்டன. ஹோம்ஸ் மற்றும் ஹௌலா நகரங்களில் பொதுமக்களைக் கொத்துக் கொத்தாகப் படுகொலை செய்தது எந்தத்தரப்பு என்பதை உறுதிப்படுத்துவதற்கு முன்பாகவே, மேற்குலக ஊடகங்கள் அஸாத் அரசின் மீது பழியைப் போட்டு, இந்த மனிதப் பேரழிவைத் தடுப்பதற்கு சிரியா மீது அமெரிக்கா போர் தொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற பிரச்சாரத்தை முடுக்கிவிட்டன. எனினும் அந்நகரங்களில் இப்படுகொலையை நடத்தியது சுதந்திர சிரிய இராணுவத்தைச் சேர்ந்த கூலிப்படையினர் என்பதும், கோஃபி அன்னானின் அமைதித் திட்டத்தைச் சீர்குலைக்கும் நோக்கத்துடன்தான் ஹௌலா படுகொலை நடத்தப்பட்டது என்பதும் பின்னர் அம்பலமானது.

அமெரிக்காவால் ஆயுதப் பயிற்சியளிக்கப்பட்ட எதிர்த்தரப்பு, சிரியாவின் ஹௌலா நகரில் நடத்திய பயங்கரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்ட சிறுவர்கள்.





படிப்பகம்

www.padippkam.com



சிரியாவிலிருந்து இராக்கிற்குத் தப்பியோடும் சிறுபான்மை குர்து இனத்தவருக்காக, இராக்கின் தோஹுக் நகருக்கு அருகே அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம்.

சுதந்திர சிரிய இராணுவத்துக்கும் அரசுப் படைகளுக்கும் இடையே கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நடந்துவரும் மோதல்கள் மற்றும் சன்னி பிரிவைச் சேர்ந்த ஜிஹாதிகள் நடத்திவரும் பயங்கரவாதத் தாக்குதல்கள் காரணமாக, இதுவரை ஏறத்தாழ 20,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், இறந்தவர்களுள் கணிசமான பேர் சிறுபான்மையினரான அலாவி முசுலீம்களும் கிறிஸ்தவர்களும் தானென்றும் கூறப்படுகிறது. சுதந்திர சிரிய இராணுவக் கும்பல் நடத்திய தாக்குதல் காரணமாக ஹோம்ஸ் நகரிலிருந்து மட்டும் 50,000 கிறித்தவர்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர். கிறித்தவர்களைக் குறிவைத்துத் தாக்குவது இப்பொழுது சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸ் மற்றும் அலெப்போ, மிடன் நகரங்களுக்கும் பரவியிருக்கிறது. டமாஸ்கஸிலும், அலெப்போவிலும் நடந்த பல்வேறு பயங்கரவாதத் தாக்குதல்களுக்கும் படுகொலைகளுக்கும் அல் காய்தா அமைப்பின் ஒரு பிரிவான அல் நுஸ்ரா வெளிப்படையாகவே பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

பஷார் அல் அஸாத் அரசு அமெரிக்கா-இசுரேல் கூட்டணியை எதிர்த்து இன்று போரிட்டு வந்தாலும், பாத் கட்சியின் அமெரிக்க எதிர்ப்பை முரணற்றதாகப் பார்க்க முடியாது. சதாம் உசேன், கடாஃபி போலவே அஸாத் அரசின் அமெரிக்க எதிர்ப்பிலும் இரட்டைத் தன்மை இருப்பதைக் காணமுடியும். அமெரிக்கா நிர்பந்தம் கொடுத்த பிறகும் இசுரேலுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ள மறுத்துவிட்ட அஸாத் அரசுதான், 2000-க்குப் பின் மேற்குலகைச் சேர்ந்த தேசங்கடந்த தொழிற்கழகங்களுக்குச் சாதகமாகத் தனியார்மய-தாராளமயப் பொருளாதாரக் கொள்கையை சிரியாவில் அமல்படுத்தியது. சவூதியின் மன்னர் குடும்பம் போல அஸாத் அமெரிக்க அடிவருடியாக, கைக்கூலியாக இல்லாவிட்டாலும், தனது குடும்ப ஆட்சியின் நலன், ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தித் தனது குடும்பம் திரட்டிக் கொண்ட சொத்தின் நலன் ஆகியவற்றைப் பொருத்தே, அஸாத் அரசு அமெரிக்கா மற்றும் மேற்குலக ஏகாதிபத்தியங்களுடன் உறவு கொண்டாடி வந்திருக்கிறது.

ஒரு கட்சி சர்வாதிகார ஆட்சி, ஏகாதிபத்தியங்களுடான உறவில் இரட்டைத் தன்மை என்ற பலவீனங்கள் ஒருபுறம் இருந்தபோதும், பஷார் அல் அஸாத்தின் அரசு மதச்சார்பற்ற அரசாக இருந்துவருகிறது. பல்வேறு மதம், இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்து வரும் சிரியாவில் பாத் கட்சியின் ஆட்சியின் கீழ் மத - இன மோதல்கள் நடந்ததில்லை என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

சிரியாவின் மீது ஒரு நேரடியான தாக்குதலை நடத்துவதற்கு ஏற்ப இராணுவத்தை ஒதுக்குவதில் மேற்குலக ஏகாதிபத்தியங்களிடேயே ஒத்த கருத்து ஏற்படாததால், ரசியாவும் சீனாவும் நேரடித் தாக்குதலை நடத்துவதற்கு முட்டுக்கட்டை போட்டு வருவதால், பிரித்தாளும் சூழ்ச்சியினையும் பயங்கரவாதத் தாக்குதல்களையும் தீவிரப்படுத்துவதன் மூலம் பஷார் அல் அஸாத் ஆட்சியைக் கவிழ்த்துவிட முயன்று வருகின்றன, மேற்குலக ஏகாதிபத்தியங்கள்.

சிரியாவில் பஷார் அல் அஸாத் ஆட்சி வீழ்த்தப்பட்டால், அங்கு ஜனநாயகம் மலரப் போவதில்லை. சன்னி பிரிவைச் சேர்ந்த மதவாத அமைப்புகளின் சர்வாதிகார ஆட்சிதான் நிறுவப்படும்; மத - இனரீதியாக நாடு துண்டாடப்படும். தனது மேலாதிக்க நலன்களுக்காக ஜிஹாதிகளை, முசுலீம் பயங்கரவாதிகளை அமெரிக்கா ஊட்டி வளர்க்கத் தயங்காது என்பதற்கு சிரியா இன்னொரு உதாரணமாக அமைந்துள்ளது. விடுதலைப் புலிகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைப் பயங்கரவாத அமைப்புகளாக முத்திரை குத்தித் தடை செய்த அமெரிக்கா, சிரியாவில் அதிகாரத்தைக் கைப்பற்ற பயங்கரவாதத்தைத் தூண்டிவிடுவது, பயங்கரவாதம் குறித்த அதன் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்திக் காட்டுகிறது.

‘‘முசுலீம் பயங்கரவாதத்தால், எல்லை தாண்டிய பயங்கரவாதத்தால் தேசத்திற்கு ஆபத்து‘‘ என மூச்சுக்கு முன்னூறு தடவை கூச்சல் போட்டு வரும் இந்தியா, துருக்கியிலிருந்து சிரியா மீது ஏவிவிடப்படும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைக் கண்டிக்க மறுக்கிறது. மாறாக, முசுலீம் அடிப்படைவாதிகளையும் ஜிஹாதிகளையும் தூண்டிவிட்டுப் பயங்கரவாதத்தின் மூலம் சிரியாவில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவரத் துடிக்கும் அமெரிக்காவின் தீய நோக்கத்திற்கு வாலாட்டி வருகிறது.

● செல்வம்



படிப்பகம்

www.padippkam.com

# தாழ்த்தப்பட்ட மக்கள் வேண்டுவது சீர்திருத்தமா? புரட்சியா?

**இடஒதுக்கீடு உள்ளிட்டு தாழ்த்தப்பட்டோரின் சமூக, அரசியல், பொருளாதார முன்னேற்றத்திற்காகக் கொண்டுவரப்பட்ட சீர்த்திருத்தங்கள் அனைத்தும் படுதோல்வியடைந்துவிட்டன.**

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக ஆதிக்க சாதியினரின் வன்கொடுமைத் தாக்குதல்கள் நாள்தோறும் பன்மடங்கு பல்கிப் பெருகி வருகின்றன. இதில் மாறுபட்ட கருத்தோ இருவேறு கருத்தோ கிடையாது. அத்தாக்குதல்களைத் தொடுப்பவர்களின் தரப்பை பல்வேறு வகைகளிலும் அளவுகளிலும் நியாயப்படுத்துபவர்களும் கூட, இந்த உண்மையை ஒப்புக் கொள்கிறார்கள். ஆதிக்க சாதியினரின் வன்கொடுமைத் தாக்குதல்களுக்கு இணையாக அரசு எந்திரத்தின் ஆயுதப் படையாகிய போலீசும் இந்தக் கிரிமினல் குற்றச் செயல்களை நடத்துகின்றன.

இத்தாக்குதல்கள் எல்லாம் இப்போது புதுப்புது, ஆபாசமான, வக்கிரமான, குரூரமான பயங்கரவாத வடிவங்களை எடுக்கின்றன. தாழ்த்தப்பட்ட பெண்களானால் நிர்வாணப்படுத்தித் தெருத்தெருவாக இழுத்துச் செல்வது; பலர் கூடி நிற்க கும்பலாகத் திரண்டு பாலியல் வன்புணர்ச்சி கொள்வது; ஆண்களானால் மலம் திண்ண வைப்பது, மூத்திரம் குடிக்க வைப்பது என்று நடக்கிறது. சிறுவர்-சிறுமிகளைப் படுகொலை செய்வதோ, கால்களைப் பிடித்து பாறைகளில் மோதி அடித்துக் கொன்ற காட்டுமிராண்டி கால இனக்குழுச் சண்டைகளின் வெறிச் செயலை நினைவுபடுத்துகின்றன.

முற்போக்கு எண்ணம் கொண்டவர்களுக்கு மட்டுமல்ல; மனித உணர்வு கொண்ட நாகரிக காலத்து மனிதர்கள் எவரையும், அதிர்ச்சியும் ஆத்திரமும் பொங்கச் செய்வன இந்த வன்கொடுமைச் செய்திகள். ஆனால், வன்கொடுமைக் குற்றச் செயல்களுக்கு போலீசும், அதிகார வர்க்கமும் காட்டும் பாராமுகமும், குற்றவாளிகளைத் தண்டனையின்றி விடுவிப்பதற்கு உயர்நீதி - உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் கூறும் விளக்கங்களும் மேலும் அதிர்ச்சியும் ஆத்திரமும் பொங்கச் செய்வனவாக உள்ளன. சாதிவெறியர்களால் வெட்டப்படும் தாழ்த்தப்பட்ட மக்களின் காயங்களில் அமிலத்தை ஊற்றுவதாக உள்ளன.

ஆதிக்க சாதிவெறியர்கள் கலப்பு மண இணையர்களைப் படுகொலை செய்யும் கொடுங்குற்றங்களுக்கு ''கௌரவக் கொலைகள்'' என்று நீதியரசர்கள் பட்டஞ் சூட்டிக் கொண்டாடும் வெட்கக்கேடுகள் இந்த நாட்டில்தான் நடக்கின்றன. இவ்வாறான போக்கால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான வன்கொடுமைகளை கிரிமினல் குற்றச் செயல்களாகக் கருதி சாதி வெறியர்கள் அஞ்சி இரகசியமாகச் செய்வதில்லை. சமூக மதிப்புக்குரிய வீரதீரச் செயல்களாகவும், தாழ்த்தப்பட்ட சமூகம் முழுவதையும் அஞ்சி நடுநடுங்கச் செய்யும் பயங்கரவாத நடவடிக்கையாகவும் கருதி நடத்துகின்றனர்.

புதிய பொருளாதாரக் கொள்கை புகுத்தப்பட்ட பிறகு, பொருளாதாரத்துறையிலும் வேறு பிற துறைகளிலும் நாடு மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வருவதாக ஆட்சியாளர்கள் கூறிக் கொள்கிறார்கள். அவர்கள் கூறும் வளர்ச்சி - முன்னேற்றத்துக்கு ஏற்ப தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான வன்கொடுமைகள் நேர் விகிதத்தில் அதிகரித்து வருகின்றன. சாதிவெறிச் சக்திகளும் ஆதிக்க பலம் பெற்று வருகின்றன. பொதுவில் பழங்குடியினர், பெண்கள், மதச் சிறுபான்மையினருக்கு எதிரான வன்கொடுமைகளும் அளவிலும் தன்மையிலும் பெருகி வந்தாலும், குறிப்பாக, சாதிய அடுக்குகளின் படிநிலையில் அடித்தட்டில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள்தாம் தமக்கு மேலிருக்கும் அனைத்துச் சாதிகளாலும் வன்கொடுமை ஆதிக்கத்துக்குப் பலியாகின்றனர்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் குறித்து மதுரையில் உள்ள 'எவிடன்ஸ்' (சாட்சியம்) என்ற தன்னார்வக் குழு நடத்திய ஆய்வுகளின் அடிப்படையில், ''தமிழ்த் தேசத்தில் சேரித் தமிழர்களின் நிலை!'' என்ற கட்டுரையை டிசம்பர், 2011 ''தலித் முரசு'' இதழ் வெளியிட்டிருக்கிறது. அதில் காணக் கிடைக்கும் ஆதாரங்களின் படி, 2008-ஆம் ஆண்டு 34 படுகொலைகளையும் 30 பாலியல் தாக்குதல்களையும் உள்ளடக்கிய 1545 வன்கொடுமைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக நடந்துள்ளன. 2009-ஆம் ஆண்டு 27 படுகொலைகளையும் 30 பாலியல் தாக்குதல்களையும் உள்ளடக்கிய 1264 வன்கொடுமைகள் நடந்துள்ளன. 2010-ஆம் ஆண்டு முதல் ஒன்பது மாதங்கள் 22 படுகொலைகளையும் 24 பாலியல் தாக்குதல்களையும் உள்ளடக்கிய 1633 வன்கொடுமைகளைக் கண்டுள்ளன. 2011-ஆம் ஆண்டு 44 படுகொலைகளும் 20 பாலியல் வல்லுறவும், 12 பாலியல் வல்லுறவு முயற்சிகளும் உள்ளடக்கிய 336 வன்கொடுமைத் தாக்குதல்கள் நடந்துள்ளன. அந்த ஆண்டு படுகொலை செய்யப்பட்ட 44 பேரில் 4 வயது, 6 வயது, 11 வயது, 16 வயது சிறுமிகள் உட்பட 8 பேர் சிறுவர் - சிறுமியர். இந்த ஆண்டு முதல் மூன்று வாரங்களில் மட்டும் எட்டு தாழ்த்தப்பட்டவர்கள் ஆதிக்க சாதியினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

''தமிழகத்தில் நடக்கக்கூடிய சாதியரீதியான வன்கொடுமை வழக்குகளின் எண்ணிக்கை குறைந்த



படிப்பகம்

www.padippkam.com



வன்கொடுமையின் பல்வேறு வடிவங்கள்: உத்தப்புரத்திலிருந்த தீண்டாமை சுவர் (இடது); ஆதிக்க சாதிவெறிக் கும்பலால் தாக்கப்பட்ட தாழையூத்து ஊராட்சி மன்றத் தலைவி கிருஷ்ணவேணி (கோப்புப் படங்கள்)

அளவே பதிவு செய்யப்பட்டாலும் தண்டனை வெறும் 5 சதவிகிதமே உள்ளன. குறிப்பாக, கொலை (3.9%), பாலியல் வன்கொடுமை (5.8%) உள்ளிட்ட கொடுங் குற்றங்களில் ஈடுபடுகிற குற்றவாளிகளில் 95 சதவிகிதத்தினர் தப்பித்துக் கொள்கின்றனர்.

''இத்தகைய துயரப் போக்கிற்கு காவல் துறையும், நீதித் துறையும் முக்கியப் பொறுப்பு என்றாலும் அத்துறைகளை சரியாக இயக்க வைப்பதற்கான அரசியல் அழுத்தம் அண்மைக் காலங்களில் பெரிய அளவில் இல்லை.

''தலித் அரசியல் கட்சிகள், இயக்கங்களாக இருக் கின்ற போது இத்தகைய படுகொலைக்கு எதிராக வீறு கொண்டு ஜனநாயகப் போராட்டங்களை கடந்த 5 ஆண்டு களுக்கு முன்பு நடத்தி வந்தனர். ஆனால், தற்போது இது போன்ற எதிர்ப்பு போராட்டங்களோ, குறைந்தபட்சம் இப் படுகொலைகளைக் கண்டித்து அரசுக்குக் கொடுக்கக் கூடிய அழுத்தங்களோ முற்றிலும் இல்லாமல் போனது கெடுவாய்ப்பானது. தலித் படுகொலைகளை தலித் அல் லாத அரசியல் கட்சிகளும் கண்டிக்க வேண்டும் என்கிற ஜனநாயகப் பண்பு இருந்தாலும், தலித் தலைமையிலான அரசியல் கட்சிகளுக்குக் கூடுதல் கடமையும் பொறுப்பும் உள்ளது. ஆனால், இன்று அரசு நிறுவனங்களோடு சம ரசம் செய்து கொண்டு, விலை போய்க் கொண்டு அல்லது இத்தகைய படுகொலைகளைக் கண்டிக்கிற செயல்பாட்டில் ஒருவிதமான சலிப்போடு தலித் அரசியல் கட்சிகள் உள்ளன. இந்நிலையில் இதுபோன்ற படுகொலைகளைக் கண்டித்து ஆங்காங்கே பாதிக்கப்பட்ட மக்களும் மக்கள் இயக்கங்களும் வலிமையான அளவில் குரல் கொடுத் தாலும் அத்தகைய போராட்டங்கள் வெளியே தெரியாமல் போய் விடுகின்றன. (தலித் முரசு, டிசம்பர் 2011)

இவையெல்லாம் நம்முடைய சொந்த ஆய்வு முடிவுகள் அல்ல. தலித் அரசியல் கட்சிகள் மீதான கருத் துக்களும் 'எவிடன்ஸ்' அமைப்பின் செயல் இயக்குநர் ஆ.கதிர் எழுதி, ''தலித் முரசு'' ஏட்டில் வெளிவந்திருப் பவை. இதே கருத்தை ''புதிய ஜனநாயகம்'' ஏட்டில் நாம் எழுதியிருந்தால், ''தலித் அரசியல் தலைவர்கள்'' என்று சொல்லிக் கொள்பவர்கள் நம்மீது பாய்ந்து குதறியிருப் பார்கள்.

1989-ஆம் ஆண்டு வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டு 22 ஆண்டுகள் கடந்த பின்னரும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக ஆதிக்க சாதிவெறியர் களின் வன்கொடுமைத் தாக்குதல் தடுத்து நிறுத்தப்பட்ட தாகவோ அல்லது குறைந்ததாகவோ சொல்ல முடியாது. மிகக் கடுமையான இச்சட்டத்தால்கூடத் தாழ்த்தப்பட்ட மக்களின் உயிருக்குப் பாதுகாப்பையும் வாழ்வுரி மையையும் உறுதிப்படுத்த முடியவில்லை.

அதேசமயம், வன்கொடுமைத் தாக்குதல்களைவிட மோசமாக தாழ்த்தப்பட்ட மக்களை அடக்கி ஒடுக்கி வைக்கக்கூடிய புதிய சூழ்ச்சிகளையும் தந்திரங்களையும் ஆதிக்க சாதிகள் இப்போது மேற்கொண்டு வருகின்றன. அதாவது, தீண்டாமைக்குப் புதிய வடிவம் கொடுக்கப்படு கிறது.

- மதுரை மாவட்டம் உத்தபுரத்தில் சேரிக்கும் ஊருக்கும் இடையில் எழுப்பப்பட்டிருந்த தீண்டாமைச் சுவர் நீண்ட ''போராட்டம்'' - முயற்சிக்குப் பிறகு அகற் றப்பட்ட போதும் அங்கு இன்னமும் ஆதிக்க சாதியினர் தாழ்த்தப்பட்ட மக்களுடன் ''இணைந்து வாழ முடியாது'' என்று அடம் பிடிக்கின்றனர். அருகிலுள்ள மலைமீது குடி புகுந்து ஊர்ப் ''புறக்கணிப்பு'' என்ற புதிய முறையில் தீண் டாமையைத் தொடர்ந்தனர். அதேமுறையில் இப்போது ஈரோடு மாவட்டம், கொடுமுடி அருகே உள்ள நகப் பாளையம் கிராமத்தில் ஒரு தீண்டாமைச் சுவர் எழுப்பப் பட்டிருக்கிறது.

- திருவண்ணாமலை மாவட்டம் ஆடையூர் கிரா மத்தில் தாழ்த்தப்பட்ட இரு குழந்தைகளை ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் சேர்த்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆதிக்க சாதியினர் தங்கள் குழந்தைகளை அந்தப் பள்ளிக்கு அனுப்பாமல் நிறுத்திக்கொண்டனர். இதனால் அந்தப் பள்ளியையே மூடிவிடும்படி நிர்ப்பந்தித்தனர்.

- விருதுநகர் மாவட்டம் கம்மாபட்டி பஞ்சாயத்து ஒன்றியப் பள்ளியில் மதிய உணவு சமைப்பதற்கு இரு தாழ்த்தப்பட்ட பெண்கள் நியமிக்கப்பட்டனர். இதை அறிந்த அவ்வூர் கம்பளத்து நாயக்கர் சாதியினர் தமது 50 சிறுவர்களைப் பள்ளிக்கு அனுப்புவதை நிறுத்திக் கொண் டனர். பிற சாதியினர் சமைத்த உணவை உண்ணுவதில்லை



படிப்பகம்

www.padippkam.com

என்பது தமது சாதிவழக்கம் என்பதால் (உணவு விடுதிகளில் என்ன செய்வார்களோ; கோவில் பிரசாதத்தைக்கூட உண்ணமாட்டார்களோ!) இப்படிச் செய்கிறோம் என்று கம்பளத்து நாயக்கர்கள் செய்த முறையீட்டின் பேரில், அத்தாழ்த்தப்பட்ட பணியாளர்களை இடமாற்றம் செய்துள்ளார் வட்டார வளர்ச்சி அதிகாரி. ''இது அந்த சமூகத்தின் தனிச்சிறப்பான வழக்கம்தான்'' என்று நியாயப்படுத்தும் மாவட்ட ஆட்சியர், அடுத்தமுறை கம்பளத்து நாயக்கர் சாதியினரையே பணியமர்த்தப் போவதாக வாக்குறுதியும் கொடுத்திருக்கிறார்.

★ சமூகத்தின் பொதுவான கோவில்களில் தாழ்த்தப்பட்ட மக்களின் வழிபாட்டு உரிமையை ஏற்கும்படி நிர்பந்திக்கப்படும் கிராமங்களில், ஆதிக்க சாதியினர் தமக்கெனத் தனியார் கோயில்களைக் கட்டிக் கொள்வதும், அக்கோவில்களில் தாழ்த்தப்பட்ட சாதியினர் நுழைவதற்குத் தடை விதிப்பதும் இப்போது புதுப் போக்காகத் தலையெடுத்துள்ளது. இந்த வகையான கோவில்கள் தனியாருக்குச் சொந்தமானவை என்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் வழிபாட்டுரிமையை அரசு உட்பட யாரும் கோர முடியாது என்றும் ஆதிக்க சாதியினர் வாதிடுகின்றனர்.

தாழ்த்தப்பட்ட மக்களுடனான காதல்-மண உறவை மறுப்பதற்காகவும், சாதியத்தின் இறுக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ளவும் ஆதிக்க சாதிகளைச் சேர்ந்தவர்கள் நடத்தும் சாதிவெறிக் ''கௌரவக் கொலைகள்'' அப்பட்டமான பயங்கரவாத-வன்கொடுமைப் படுகொலைகள் என்றால், மேற்கண்டவை மாதிரியான ஆதிக்க சாதிகளின் நடவடிக்கைகள் தாழ்த்தப்பட்ட மக்களைச் சமூக விலக்கம் செய்யும் வக்கிரமான, நரித்தனமான தீண்டாமைக் குற்றங்கள் ஆகும்.

• • •

**தா**ழ்த்தப்பட்ட மக்களின் சமூக, பொருளாதார ''அவலநிலை'' கண்டு, கிறித்தவப் பாதிரியார்கள் கண்டுபிடித்தத் தீர்வுதான் இலவசக் கல்வி வாய்ப்பு. கிறித்தவ மதத்தைப் பரப்பவும் மதமாற்றம் செய்யவும் ஒரு வாய்ப்பாக அது அமைந்தது. ஆங்கிலேயக் காலனிய ஆட்சியாளர்கள் கண்டுபிடித்த இன்னொரு தீர்வுதான் இடஒதுக்கீடு. ஆங்கிலேயக் காலனிய ஆட்சியாளர்கள் புகுத்திய இந்த இடஒதுக்கீடு கொள்கையைத்தான் ''சமூக நீதிக் கொள்கை'' என்ற பெயரில் ''பார்ப்பனரல்லாத இயக்கம்'' நிறுவிய வேளாள, வேளம, நாயர், வொக்கலிகா, லிங்காயத்து, நாயுடு, ரெட்டி ஆகிய சாதி இந்துத் தலைவர்கள் கையிலெடுத்துக் கொண்டார்கள். (ஆதாரம்: 1945 சேலம் திராவிடர் கழக நிறுவன மாநாட்டு அண்ணா உரை. பார்த்தசாரதி எழுதிய தி.மு.க.வின் வரலாறு) பின்னாளில் இதையே ''சமூகப் புரட்சிக் கொள்கை''யாக பெரியாரியவாதிகளும் அம்பேத்கரியவாதிகளும் வரித்துக் கொண்டார்கள்.

சமூக நீதி, சமூகப் புரட்சிக் கொள்கையை மேலும் விரிவுபடுத்துவது- ஆழப்படுத்துவது என்கிற பெயரில் புகுத்தப்பட்டவைதாம் வன்கொடுமை தடுப்புச்சட்டம், மண்டல் பரிந்துரை அமலாக்கம், உள்ளூராட்சி அமைப்புகளுக்கும் இடஒதுக்கீடுகள், வன்கொடுமை தடுப்புச்சட்டம், கல்வி உரிமையை அடிப்படையாக்கும் சட்டம் ஆகியன. இவற்றில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் அமலாக்கப்படும் இலட்சணத்தை இதுவரைப் பார்த்தோம்.

கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் இடஒதுக்கீடு அமலாக்கப்பட்டு ஒரு நூற்றாண்டுக்கு மேலாகிறது. புதிய பொருளாதாரக் கொள்கை புகுத்தப்படும் வரை, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீடு கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் ஓரளவு இருந்தது. அதிலும் உயர் கல்வியிலும், ஆசிரியர் மற்றும் நிர்வாகத்திலும் தாழ்த்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டில் தொடர்ந்து வஞ்சனை செய்யப்படுவதை கிருஷ்ணசாமியும் திருமாவளவனும் பலமுறை சுட்டிக் காட்டி வெள்ளை அறிக்கை கோரி வருகின்றனர். ஆனால், அரசுகள் எதுவானாலும் செவி சாய்ப்பதே கிடையாது.

புதிய பொருளாதாரக் கொள்கை புகுத்தப்பட்ட பிறகோ கல்வித்துறையில் அரசின் பொறுப்புகள் படிப்படியே குறைக்கப்பட்டு, பள்ளி, கல்லூரி, தொழிற்கல்வி மற்றும் உயர்கல்வி ஆராய்ச்சி நிறுவனங்கள் அனைத்தும் தனியார்மயமாக்கப்பட்டு வருகின்றன. எங்கும் மேட்டுக்குடி ஆதிக்க சாதிப் பிள்ளைகள் மட்டுமே படிக்கக் கூடிய ஆங்கில வழிப் பொதுப்பள்ளிகள் (மெட்ரிக்) அதையும் விட ''உயர்தரம்'', ''உலகத்தரத்தில்'' சீமான்வீட்டுப் பிள்ளைகள் தங்கிப் படிக்கும் பள்ளிகள் பல்கிப் பெருகி வருகின்றன. கல்விக்கான அடிப்படை உரிமைச் சட்டத்தின் கீழ் இப்பள்ளிகளில் ஏழை மாணவர்க்கு 25 சதவீத இடஒதுக்கீடு என்பதும், தனியார் - பொதுத்துறை கூட்டுப் பங்கேற்பு என்ற பெயரிலும் புதிய மனுதர்ம அடிப்படையில் நவீன தீண்டாமை பின்பற்றப்படுகிறது. பழைய அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கப்பட்டு பாழடைந்த நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டன. அடிப்படைக் கட்டுமான வசதிகளும் இல்லை; தகுதி வாய்ந்த ஆசிரியர்களும் இல்லை. அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இதே நிலையில்தான் உள்ளன. இந்த வகைப் பள்ளிகள் - கல்லூரிகளில் பயின்ற மாணவர்கள் தனியார்துறைத் தொழில் மற்றும் நிர்வாகக் கல்வியிலும் வேலைகளிலும் பணிகளிலும் புறக்கணிக்கப்பட்டு, ஒருவகைத் தீண்டாமைக் கொள்கை பின்பற்றப்படுகிறது.

பொறியியல், மருத்துவம், நிர்வாகம், சட்டம் போன்ற தொழிற்சார் கல்வி நிறுவனங்கள், மிகப் பெரும்பாலும் சுயநிதித் தனியார் துறையில் புற்றீசல்களாகப் பல்கிப் பெருகி வருகின்றன. இக்கல்வி நிறுவனங்களில் அரசுக்கான இட ஒதுக்கீடுகள் இருப்பினும், சாமானிய தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தொடர்ந்து கல்வி பயில முடியாதவாறு கட்டாயக் கட்டணம் கடுமையாக வசூலிக்கப்படுகிறது. பொதுத்துறைத் தொழில்கள் தனியார்மயமாக்கப்படுவதோடு, உள்நாட்டு - வெளிநாட்டு கார்ப்பரேட் தரகு முதலாளிகளின் ஏகபோகமாக தொழிற்துறை மாறிவிட்டது. ஆகவே, தாழ்த்தப்பட்டோருக்குத் தொழில்துறை வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு என்பது



படிப்பகம்

www.padippkam.com



வன்கொடுமைச் சட்டத்தைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தக்கோரி அருந்ததியர் சாதியைச் சேர்ந்த பெண்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம் (இடது); அரசின் வன்கொடுமை: பரமக்குடியில் தாழ்த்தப்பட்டோர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு. (கோப்புப் படங்கள்)

வெறுங்கனவாகி வருகிறது. மேற்படிக் கல்வியிலும் பணிகளிலும் தனிநபர் என்கிற முறையில் ஒரு சிலரின் ‘‘சாதனைகள்’’ முன்னேற்றங்கள் மட்டும் எடுத்துக்காட்டுகளாக செய்தி ஊடகங்களில் பிரபலப்படுத்தப்படுகின்றன. மற்றபடி ஒரு சமூகம் என்கிற முறையில் பெரும் எண்ணிக்கையில் தாழ்த்தப்பட்ட மக்கள் பலனடைந்து வருவதாகக் கூற முடியாது. ஆக, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் இடஒதுக்கீடு மூலம் சமூக நீதி என்பது கானல் நீராக உள்ளதென்பதே உண்மையாகும்.

ஆனால், கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் இடஒதுக்கீடு பெற்றதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறிவிட்டதாகவும், சமூக நீதி நிலைநாட்டப்பட்டு விட்டதாகவும், அதை அரசியல் ரீதியில் விரிவுபடுத்த வேண்டியதுதான் குறைபாடாக நிலவுவதாகவும் கற்பிக்கும் ஆளும் கட்சிகள் ஜனநாயகத்தைப் பரவலாக்குவது, சமூக நீதியை உறுதி செய்வது என்ற பெயரில் உள்ளூராட்சி வரை தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பெண்களுக்கும் இடஒதுக்கீடு செய்து அதிகாரப் பகிர்வு கொண்டு வந்தன. உள்ளூராட்சிகளில் அதிகாரப் பகிர்வு, இடஒதுக்கீடு என்ற ஏற்பாட்டைக் கேலிக்கூத்தாக்கி விடும் வகையில் ஆதிக்க சாதியினர் கடும் எதிர்ப்பைக் காட்டி வருகின்றனர். முக்குலத்தோரின் கடும் எதிர்ப்பையும் மீறி உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற மேலவளவு முருகேசன் படுகொலை நாடு தழுவிய அளவில் தெரிந்த விவகாரம். கீரிப்பட்டி, பாப்பாபட்டி, நாட்டார்மங்கலம் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தவிடாமல் ஆதிக்க சாதியினர் தடுத்து நிறுத்தியிருந்ததும் அனைவரும் அறிந்ததே. ஆனால், தேர்தல்கள் நடத்தப்பட்டு உள்ளூராட்சித் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும் தாழ்த்தப்பட்ட மக்கள் ‘‘ஆட்சி’’ நடத்த முடியாமல் முடக்கி வைத்து அவமானத்துக்குள்ளாக்கும் நிகழ்வுகள் பலவும் நடந்து வருகின்றன.

நெல்லை மாவட்டம் தாழையூத்து ஊராட்சி மன்றத் தலைவர் கிருஷ்ணவேணி, ஈரோடு மாவட்டம் சென்னிமலை ஊராட்சி மன்றத் தலைவர் வள்ளி தெய்வானை போன்றவர் மீது ஆதிக்க சாதியினர் நடத்திய தாக்குதல் வன்முறைகள் தொடர்கதைகளாக உள்ளன. விருதுநகர் மாவட்டம் கொட்டக்கச்சியேந்தல் கிராம ஊராட்சித் தலைவர் கருப்பன் கொடுத்துள்ள புகாரின்படி, அவர் தொடர்ந்து சாதியின் பெயரால் இழிவுபடுத்தப்படுகிறார்; மன்றக் கூட்டங்களின்போது தரையில் உட்கார வைக்கப்படுகிறார்; தொகை நிரப்பப்படாத காசோலைகளில் கையொப்பமிடும்படி நிர்பந்திக்கப்படுகிறார்; மன்ற ஆவணங்கள், கணக்கேடுகள் காட்டப்படுவதில்லை; ஆதிக்க சாதியைச் சேர்ந்த ஊராட்சி மன்றத் துணைத் தலைவரின் கணவனும் அலுவலக எழுத்தருமே தலைவரை ஒடுக்கி வைக்கின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி ஒன்றியம் கருவடத்தெரு ஊராட்சி மன்றத் தலைவர் அ.கலைமணியை குடியரசு நாளில் தேசியக் கொடி ஏற்றவிடாமல் தடுத்துத் தாக்கியுள்ளனர், ஊராட்சி மன்ற ஆதிக்கசாதித் துணைத்தலைவரின் மகனும் 20 ரௌடிகளும். இவ்வாறு செய்வதென்று கள்ளர் சாதியினர் திட்டமிட்டிருந்ததை அறிந்து போலீசிடம் முன்கூட்டியே கலைமணி புகார் அளித்தும் பாதுகாப்புக் கோரியதும் அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது.

ஊராட்சிமன்றத் தலைவர்கள் கருப்பனுக்கும் கலைமணிக்கும் கிருஷ்ணவேணி மற்றும் வள்ளி தெய்வானைக்கும் நேர்ந்துள்ளது தனிப்பட்ட ஒரு சில சம்பவங்கள் அல்ல. தமிழ்நாடு மகளிர் பஞ்சாயத்துத் தலைவர்கள் கூட்டமைப்பு, தமிழ்நாடு - புதுச்சேரி தலித் பஞ்சாயத்துத் தலைவர்கள் கூட்டமைப்பு ஆகியவை சார்பாக உண்மை அறியும் குழு கடந்த இரண்டாண்டுகள் மதுரை, சிவகங்கை மாவட்டங்களில் தலித் ஊராட்சித் தலைவர்கள் மீது ஆதிக்கச் சாதியினர் தொடுக்கும் வன்கொடுமைத் தாக்குதல்களைப் பற்றிப் பல உண்மைகளை அம்பலப்படுத்தியிருக்கிறது. பல கிராமங்களில் ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த துணைத் தலைவர்கள், எழுத்தர்கள், மக்கள் நலப் பணியாளர்களே



படிப்பகம்

www.padippkam.com

அதிகாரத்தைப் பறித்துக் கொள்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றத்துக்கென்று அரசு ஒதுக்கும் நிதியை அம்மக்களுக்கென்று தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்து தலைவர்களேகூட பயன்படுத்த முடியாத நிலைதான் உள்ளது. அவர்கள் கொடுக்கும் புகார்களைப் பதிவுகூட செய்ய மறுக்கும் அதிகாரவர்க்கமும் போலீசும் நீதித்துறையும் ஆதிக்க சாதியினரின் முழுக் கட்டுப்பாட்டிலும் உள்ளன. இவையே ஒடுக்குமுறை வன்கொடுமை அமைப்புகளாகவும் உள்ளன.

இடஒதுக்கீடு மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமூக நீதி என்ற ஏற்பாடு கொண்டு வரப்பட்டு ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேலாகி விட்டது. காந்தி - அம்பேத்கருக்கிடையே ஏற்பட்ட பூனே ஒப்பந்தம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கான பிரதிநிதித்துவ ஜனநாயக உரிமையைக் கொண்டு வந்து முக்கால் நூற்றாண்டு கால சாதனையாகப் போற்றப்படுகிறது. உள்ளூராட்சி அமைப்புகளில் தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர், மகளிருக்கான இடஒதுக்கீடு செய்யும் 73-வது அரசியல் சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டு முப்பதாண்டுகளுக்கும் மற்றும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 22 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. இத்தனை ஆண்டுகளில் இத்தகைய சட்டங்களும், அவற்றின் அமலாக்கங்களும் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்வில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள், விளைவுகள், முன்னேற்றங்கள் பற்றிய ஆய்வும் தொகுப்பும் செய்யப்படவே இல்லை.

அரசும், அரசு சார்பு அமைப்புகளும் இதைச் செய்யாததில் வியப்பு ஒன்றும் இல்லை. இந்த வகையில் அவற்றின் தோல்வியையும் செயலற்ற தன்மையையும் சார்புத்தன்மையையும் அத்தகைய ஆய்வும், தொகுப்பும் சொல்லிவிடும். தாழ்த்தப்பட்டோருக்கான கட்சிகள், அமைப்புகள், தொண்டு நிறுவனங்களும்கூட இதைச் செய்வதில்லை. தனிப்பட்ட சம்பவங்களாக மட்டுமே இவை கையாளுகின்றன. தமது கையாலாகாத்தனம் அப்பட்டமாகி விடும் என்பதாலேயே தொகுப்பான ஆய்வுகளுக்கும் முடிவுகளுக்கும் இவை வர மறுக்கின்றன. முற்போக்கு சிந்தனையாளர்களாகக் காட்டிக் கொள்ளும் பின்நவீனத்துவ, பின் மார்க்சிய அறிஞர்கள், இவை பற்றிய தொகுப்பான ஆய்வுகளுக்கும் முடிவுகளுக்கும் வருவதே தவறான அணுகுமுறை என்றும், பெருங்கதையாடல் என்றும் ஒதுக்கிவிட்டுத் தனித்தனி நிகழ்வுகளாக மட்டுமே பார்த்து, மனித உரிமை மீறல்களாகக் கருதி, உண்மை அறியும் குழுக்களை அமைத்துக் கொண்டுபோய் 'கள' நிலைமைகளை ஆய்வு செய்து அரசுக்கு சில கோரிக்கைகளை முன்வைத்தாலே போதும் என்றிருக்கின்றனர்.

இதுவரை இத்தனை ஆண்டுகளாக தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரசு மேற்கொண்ட சமூகநீதிக்கான இடஒதுக்கீடுகள் போன்ற ஏற்பாடுகளும், சீர்திருத்தச் சட்டங்களும், வளர்ச்சி-முன்னேற்றத்துக்கான திட்டங்களும் நிதி ஒதுக்கீடுகளும் இம்மக்கள் வாழ்வில், சமூகத்தில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்துவிட்டன என்று யாராலும் துணிந்து கூற முடியாது. மாறாக, இத்தகைய முயற்சிகள் மூலம் சாதிய சமத்துவத்தை ஒருக்காலும் ஏற்படுத்தி விட முடியாது என்பதையே நாட்டில் நாளும் பெருகிவரும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான வன்கொடுமைத் தாக்குதல்கள் திரும்பத் திரும்பக் காட்டுகின்றன.

புகார்களும், முறையீடுகளும் முன்வைக்கப்படும் இடங்களில், விவகாரங்களில் மட்டுமே பிரச்சினைகள் இருப்பதாகவும் அவற்றில் தலையிட்டுச் சரிசெய்து விட்டால் போதுமானது என்றும் அரசு மாய்மாலம் போடுகிறது. மற்ற இடங்களில், விவகாரங்களில் பிரச்சினைகள் ஏதும் இல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்கள் சீரான முன்னேற்றம் கண்டு வருகிறார்கள் என்றதொரு தோற்றம் உருவாக்கப்படுகிறது.

''தாழ்த்தப்பட்ட மக்களைப் பாதுகாப்பதற்கான சட்டங்களை மேலும் கடுமையாக்க வேண்டும். சமூக நீதிக்கான இடஒதுக்கீடுகளை மேலும் உறுதியாக்க வேண்டும், இம்மக்களின் நலன்களுக்கான திட்டங்களையும் நிதி ஒதுக்கீடுகளையும் அதிகமாக்க வேண்டும்'' என்பதற்கு மேல் செல்வதில்லை. ''தலித்'' அமைப்புகளின் முறையீடுகள், புகார்கள் எல்லாம் அதிகாரிகள் மற்றும் காவல்துறையினர் ஆகியோரின் பாராமுகச் செயல்பாடுகள் மீது குறை காண்பதோடு நின்று விடுகின்றன. ஆனால், இத்தகைய கோரிக்கைகள், முறையீடுகள், புகார்கள் எல்லாமும் ஒட்டு மொத்த அரசு அமைப்பின் மீது நம்பிக்கை ஏற்படுத்துவதாகவே உள்ளன.

''தலித்'' அமைப்புகளுக்கு மட்டுமல்ல; அவற்றின் பேராசானாக கருதப்படும் அம்பேத்கருக்கே கூட அரசு மூலமாக மேற்கொள்ளப்படும் சட்டபூர்வ, அதிகாரபூர்வ நடவடிக்கைகளைக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்கள் சமூக, அரசியல் ,பொருளாதார முன்னேற்றத்தைக் கண்டு விட முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. அம்பேத்கரியவாதிகள் ஒவ்வொரு விவகாரத்திலும் திரும்பத்திரும்பக் கூறும் குற்றச்சாட்டு, ''தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்கும் பாதுகாப்புக்கும், உரிமைக்கும் பெரும் இடையூறாகவும் கேடு விளைவிப்பதாகவும் இருப்பது ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த அதிகார வர்க்கத்தினரும் காவல்துறையினரும்'' என்பதுதான்.

ஆங்கிலேயக் காலனியவாதிகளால் கட்டியெழுப்பப் பட்டு, ஆதிக்க சாதிகள் மற்றும் தரகு முதலாளிகள் அடங்கிய ஆளும் வர்க்கங்களின் அரசியல் பிரதிநிதிகளான காந்தி-நேரு காங்கிரசினால் வரித்துக் கொள்ளப்பட்ட **இந்திய அரசுக் கட்டமைப்பு என்பது, சாதிய சமுதாய அமைப்பு குலைந்து போகாமல் காப்பதற்கானதுதான். இதன் அங்கங்களான அதிகார வர்க்கம், இராணுவம், போலீசு, நீதிமன்றங்கள் எல் லாம் சாதிய சமுதாய அமைப்பைக் கட்டிக் காப்ப தற்காக உள்ளவைதாம்.**

**இந்த நோக்கத்துக்காகவே போதனையும் பயிற் சியும் அளிக்கப்பட்டு, ஊட்டி வளர்க்கப்படும் மேற்**



படிப்பகம்

www.padippkam.com





**பெரியார், அம்பேத்கார் முதலியவர்களுக்கு எவ்வளவுதான் நேர்மையான, உயரிய நோக்கங்கள் இருந்தபோதும், அவர்கள் முன்வைத்த தீர்வுகள் இந்தக் கட்டமைவைத் தகர்த்துப் புதிய கட்டுமானத்தை நிறுவுவதற்கான புரட்சிகர உள்ளடக்கத்தையும் வழிமுறைகளையும் கொண்டவையாக இல்லை.**

**படி அரசு அமைப்பினரே ஒரு தனிவகை சாதியினர். சமத்துவத்தையோ, ஜனநாயகத்தையோ இந்தத் தனிவகை சாதிய அமைப்பு ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. இத்தகைய அரசு அமைப்பை, தனி ஒரு சாதியினை தாக்கித் தகர்த்து விட்டு, தமக்கென ஒரு புதிய அரசுக் கட்டுமானத்தை நிறுவிக் கொள்வதுதான் அரசியல் புரட்சி; இவ்வாறான அரசியல் புரட்சி ஒன்றின்றி சமூகப் புரட்சி சாத்தியமே கிடையாது. பழைய கட்டுமான அமைப்பை அப்படியே தக்க வைத்துக் கொண்டு உழைக்கும் மக்கள் - ஒடுக்கப்படும் சாதியினர் தமது நலன்களுக்கான சமத்துவம், ஜனநாயகம், சமூக நீதியை நிறுவுவதற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியாது.**

இதுதான் புரட்சிகரக் கண்ணோட்டம். ஆனால், புரட்சி பற்றிய இத்தகைய பார்வையின்றி, நமது நாட்டில், தமிழகத்தில் எத்தனையோ 'புரட்சிகள்' அவதாரமெடுத்துள்ளன. அம்பேத்கர் தலைமையில் கொண்டு வரப்பட்ட அரசியல் சட்டமும், அதன் பிறகு இடஒதுக்கீட்டை உறுதி செய்த முதலாவது அரசியல் சட்டமும்கூட இந்திய அரசியலமைப்பின் மேற்படி குணத்தை (சாதிய - வர்க்கத் தன்மையை) மாற்றி அமைத்துவிடவில்லை. ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதியினர் இடஒதுக்கீடு ஏற்பாடு மூலம் இந்த அரசு இயந்திர அமைப்பில் சேருவதனால், அவ்வாறான மாற்றம் எதுவும் ஏற்பட்டு விடுவதில்லை. மாறாக, இவர்களும் அந்தப் புதிய, தனிவகை சாதியினராக மாறிவிடுகின்றனர். அவர்களுக்கான போதனை, பயிற்சி, குடியிருப்பு, வாழ்க்கைமுறை, பண்பாடு, அதிகாரம் எல்லாமும் இத்தகைய மாற்றத்தைக் கொண்டு வந்து விடுகின்றன. குடியரசுத் தலைவரான கே.ஆர். நாராயணன், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணன் முதல் தமிழகத் தலைமைப் போலீசு அதிகாரிகளான காளிமுத்து, முத்துக்கருப்பன் வரை இதுதான் பொதுவிதியாக உள்ளது. அரசு அமைப்புக்குள்ளாகவே ஆதிக்க சாதி அதிகாரிகளால் ஒடுக்கப்படும் சாதி அதிகாரிகள் சமமாக நடத்தப்படுவதில்லை, இழிவுபடுத்தப்படுகிறார்கள் என்கிற உண்மையும் கூட இந்தப் பொதுவிதியை மறுப்பதில்லை. சாதிய அமைப்பைக் கட்டிக் காப்பதற்காக நிறுவப்பட்டுள்ள அரசு அமைப்புக்குள் மட்டும் சாதிய சமத்துவம் நிலவுமா, என்ன? உமாசங்கர், சிவகாமி போன்றவர்களுக்கு மட்டும் நீதியும் சமத்துவமும் கொடுக்கப்படுமா, என்ன?

தாழ்த்தப்பட்டவருக்கான இடஒதுக்கீடு மூலம் சமூக நீதி ஏற்பாடுகள், முன்னேற்றத்துக்கான திட்டங்கள், நிதி ஒதுக்கீடுகள், பாதுகாப்புக்கான சட்டங்கள், ஆட்சி அதிகாரப் பகிர்வுக்கான உள்ளூராட்சி ஒதுக்கீடுகள் - இவை எல்லாமும் ஏற்கெனவே உள்ள அரசியல், சமுதாய, பொருளாதாரக் கட்டமைவுக்குள்ளாகவே செய்யப்படும் சீர்திருத்தங்கள் தாமே தவிர, இக்கட்டமைப்பைத் தகர்ப்பதற்கான, இதற்கு வெளியே மேற்கொள்ளப்படும் முயற்சிகள் எதுவும் கிடையாது. பெரியார், அம்பேத்கார் முதலியவர்களுக்கு எவ்வளவுதான் நேர்மையான, உயரிய நோக்கங்கள் இருந்தபோதும், அவர்கள் முன்வைத்த தீர்வுகள் இந்தக் கட்டமைவைத் தகர்த்துப் புதிய கட்டுமானத்தை நிறுவுவதற்கான புரட்சிகர உள்ளடக்கத்தையும் வழிமுறைகளையும் கொண்டவையாக இல்லை. அம்பேத்கர் உயர்த்திப் பிடித்த சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகத் தத்துவம்கூட மேற்கத்திய முதலாளியக் கண்ணோட்டம்தானே தவிர, உழைக்கும் மக்களின் ஜனநாயகம் அல்ல.

மார்க்சிய ஆசான்களாலேயே முன்வைக்கப்படாத, உலகில் வேறெங்கும் இல்லாத தனிச்சிறப்பான சாதியாதிக்க சமூகத்தைக் கொண்டது இந்திய நாடு என்கிற பேருண்மையைப் பெரியாரும் அம்பேத்கரும் மட்டுமே கண்டுபிடித்து விட்டதாக அம்பேத்கரிய, பெரியாரியவாதிகளால் உரிமை பாராட்டப்படுகிறது. ஆனால், அச்சாதி ஆதிக்க சமூகத்தைத் தகர்க்கவும், சமத்துவ, ஜனநாயக சமுதாயத்தை உருவாக்கவும் கூடிய, உலகில் வேறெங்கும் இல்லாத தனிச்சிறப்பான புரட்சிகரமான தீர்வுகளையும் வழிமுறைகளையும் அவர்கள் முன்வைத்துள்ளார்களா?

அடுக்கடுக்கான படிநிலை சாதிய சமுதாயத்தில், சாதி இந்துக்களுக்கு மட்டுமே சாதி ஆதிக்கமும் அதிகாரமும் உள்ளது. அவை பலவீனமடைவதாக உணரும்போதெல்லாம் ஆதிக்க சாதிகள் கூட்டுச் சேர்ந்து புதுப்புது நடைமுறைகளைக் கண்டுபிடித்து மீண்டும் அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் நிலைநிறுத்திக் கொள்கிறார்கள். **ஆகவே, வேண்டுவது மேலும் மேலும் சீர்திருத்தங்கள் அல்ல! கெட்டி தட்டிப் போயிருக்கும் சாதியாதிக்க சமுதாயத்தை உலுக்கித் தலைகீழாகப் புரட்டிப் போடும் உழைக்கும் மக்கள் தலைமையிலான சமூக அரசியல் புரட்சி! 'தலித்' தலைவர்களும் அமைப்புகளும் அத்தகைய புரட்சிக்குத்தான் பணியாற்றுகிறார்களா?**

**• ஆர்.கே.**



படிப்பகம்

www.padippkam.com

## கூடங்குளம்:

# எரிபொருள் நிரப்பும் அனுமதிக்காகச் செய்யப்பட்ட மோசடிகள்

**கூடங்குளம் அணுஉலையில் காணப்படும் பல்வேறு பாதுகாப்புக் குறைபாடுகள் ஒவ்வொன்றாக அம்பலமாகி வருகின்றன.**

கூடங்குளம் அணுஉலையை மூடக் கோரி இடிந்த கரை பகுதி மக்கள் நடத்திவரும் போராட்டம் ஓராண்டு நிறைவெய்திய அதே தருணத்தில், கூடங்குளம் அணு மின்நிலையத்தின் முதல் அணு உலையில் எரிபொருட்களை நிரப்பி, அதனை இயக்கும் அனுமதியை அளித்திருக்கிறது, அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம். இதனையடுத்து, கடந்த ஐந்து மாத காலமாக கூடங்குளம் அணு உலையைச் சுற்றி 7 கி.மீ. தூரத்துக்குப் போட்டு வைத்திருக்கும் 144 தடையுத்தரவை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீட்டித்துள்ள ஜெயா அரசு, அப்பகுதியில் மீண்டும் போலீசைக் கொண்டுவந்தும் குவித்திருக்கிறது. இந்த 144 தடையுத்தரவை நீக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் தொடுத்த வழக்கில் வாய்தா வாங்கியே வழக்கை இழுத்தடித்து வருகிறது, தமிழக அரசு.

கூடங்குளம் அணுஉலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் உரிய முறையில் செய்யப்பட்டிருப்பது குறித்து ஆய்வு நடத்தி உறுதிசெய்துகொண்ட பிறகுதான் எரிபொருள் நிரப்ப அனுமதி அளித்திருப்பதாகக் கூறுகிறது, அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம். இக்கூற்று எந்த அளவிற்கு உண்மையானது? கூடங்குளம் அணுஉலையின் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்கும் இரு வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் நடந்துவருகின்றன. சென்னை உயர் நீதிமன்றம் இவ்வழக்கு தொடர்பாக சமீபத்தில் அளித்திருக்கும் ஒரு உத்தரவு, பாதுகாப்பு ஏற்பாடுகளில் சமரசங்கள் செய்துகொள்ளப்பட்டிருப்பதை அம்பலப்படுத்துகிறது.

அணுஉலையிலிருந்து கடலுக்குள் கொட்டப்படும் கழிவுகளின் வெப்பநிலை 37 டிகிரி சென்டிகிரேடுக்குள் தான் இருக்க வேண்டும் என்ற விதிமுறையைத் தளர்த்தி, கூடங்குளம் அணுமின் நிலைய நிர்வாகம் தமது கழிவுகளை 45 டிகிரி சென்டிகிரேடு கொதிநிலையில் கடலில் கொட்டுவதற்குத் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அனுமதி அளித்திருந்தது. மேலும், கடல்சார் ஒழுங்குமுறைச் சட்டங்களிலிருந்தும் கூடங்குளம் அணு உலைக்கு மைய அரசால் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவ்விதிவிலக்குகள் கடல்சார் சுற்றுச் சூழலுக்குக் கேடுவிளைவிக்கும் வகையில் கூடங்குளம் அணுஉலை இயங்குவதைச் சட்டபூர்வமானதாக்கும் குறுக்கு வழியன்றி, வேறெதுவுமில்லை.

இவ்விரு விதிவிலக்குகளில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அளித்திருக்கும் விதிவிலக்கை நீக்கச் சொல்லிவிட்டது, சென்னை உயர் நீதிமன்றம். எனினும், அணுக் கழிவுகளை எத்தனை டிகிரி சென்டிகிரேடில் வெளியேற்றும் வண்ணம் கூடங்குளம் அணுஉலை வடிவமைக்கப்பட்டிருக்கிறது? அதில் குறைபாடு இருப்பது தெரியவந்து, அதன் காரணமாகத்தான் இந்த விதிவிலக்கு அளிக்கப்பட்டதா? இந்த உத்தரவுக்குப் பின் அணுஉலை நிர்வாகம் 37 டிகிரி சென்டிகிரேடுக்குள்தான் அணுக்கழிவுகளை வெளியேற்றும் என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது? அதனை யார் தொடர்ந்து கண்காணிப்பது? - என்பது போன்ற கேள்விகளை விசாரணையின் பொழுது நீதிபதிகள் எழுப்பவில்லை. மாறாக, விதிவிலக்கை நீக்கிவிட்டு, அணு உலை இயங்க மாசு கட்டுப்பாடு

கூடங்குளம் அணு உலையில் எரிபொருள் நிரப்பக் கொடுக்கப்பட்டுள்ள அனுமதியை எதிர்த்தப்போராட்டத்தில் சிறுவர்கள்.





படிப்பகம்

வாரியம் அனுமதி வழங்கலாம் எனக் காதைக் குடைந்தபடி உத்தரவிட்டுள்ளனர். அணுக்கழிவு பிரச்சினையை, ஏதோ குப்பையை அகற்றும் பிரச்சினையைப் போல பார்க்கும் அலட்சியம்தான் நீதிமன்றத்தின் உத்தரவில் தெரிகிறது.

**‘‘ஃபுகுஷிமா விபத்திற்கு சுனாமியைவிட, மனிதத் தவறுதான் பிரதான காரணம். பாதுகாப்பு ஏற்பாடுளை நிர்வாகம் அலட்சியப் படுத்தியதுதான் காரணம்’’ என ஜப்பான் நாடாளுமன்றம் உறுதி செய்துள்ள நிலையில், இத்துணை பாதுகாப்பு குறைபாடுகளோடு கூடங்குளம் அணுஉலை இயங்க அனுமதிக்கப்படுகிறதென்றால், ஆளும் கும்பல் தெரிந்தே தமிழகத்தை அழிவுப் பாதைக்குள் தள்ளி விட முயலுகிறது என்ற முடிவுக்குத்தான் வர முடியும்.**

‘‘ஜப்பான் ஃபுகுஷிமா விபத்திற்குப் பிந்தைய இந்திய அணுஉலைகள் பாதுகாப்பு குறித்த நிபுணர் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்திய பிறகே கூடங்குளம் அணுஉலை செயல்படுத்தப்படும்’’ என அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையம் உயர் நீதிமன்றத்திடம் உறுதி அளித்திருந்தது. ஆனால், நீதிமன்றத்திடம் அளித்த அந்த உறுதிமொழியை நடைமுறைப் படுத்தாமலேயே எரிபொருள் நிரப்ப அனுமதி அளிக்கப் பட்டுள்ளதாகப் பூவுலகின் நண்பர்கள் என்ற சுற்றுப்புறச் சூழல் அமைப்பு தற்பொழுது நீதிமன்றத்திடம் முறையிட்டுள்ளது.

அணுஉலையில் எரிபொருள் நிரப்ப அனுமதி அளிக்கும் முன்பாக, அணு உலை அமைந்துள்ள பகுதியில் 30 கி.மீ. சுற்றளவில் வசிக்கும் மக்களுக்குப் பேரிடர் மேலாண்மை பயிற்சி மிகவும் வெளிப்படையாக அளிக்கப்பட வேண்டும் என்பது விதி. ஆனால், திருநெல்வேலி மாவட்ட நிர்வாகம், யாருக்கும் எந்த விவரத்தையும் சொல்லாமல், பத்திரிகைகளையும் அழைக்காமல், நக்கநேரி கிராமத்தில் மிகவும் இரகசியமான, மோசடியான ஒரு பயிற்சியை நடத்தி முடித்திருக்கிறது. அணுஉலையில் எரிபொருள் நிரப்பும் அனுமதியை வழங்க, ஒப்புக்காக நடத்தப்பட்ட இப்பயிற்சியை அணுசக்தி ஒழுங்கு முறை வாரியமும் அங்கீகரித்திருக்கிறது.

எரிபொருள் நிரப்பப்படும் பகுதியான அணுஉலை அழுத்தக் கலனில் இரண்டு பற்றவைப்புகள் (welding) இருப்பதாக அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம் 2008-இல் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது. எனினும், இந்த பற்றவைப்புகள் அணுக்கதிர் வீச்சைத் தாங்கும் திறன் குறித்த சோதனைகள் நடத்தப்படாமலேயே எரிபொருள் நிரப்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இப்படி பாதுகாப்பு குறைபாடுகள் குறித்து வெளியே கசிந்துவரும் ஒவ்வொரு உண்மையும், இந்த அனுமதி பல்வேறு விதிமுறைகளை மீறித்தான் அளிக்கப்பட்டுள்ளது என்பதை அம்பலப்படுத்துகின்றன.

‘‘ஃபுகுஷிமா விபத்திற்கு சுனாமியைவிட, மனிதத் தவறுதான் பிரதான காரணம். பாதுகாப்பு ஏற்பாடுளை நிர்வாகம் அலட்சியப்படுத்தியதுதான் காரணம்’’ என ஜப்பான் நாடாளுமன்றம் உறுதி செய்துள்ள நிலையில், இத்துணை பாதுகாப்பு குறைபாடுகளோடு கூடங்குளம் அணு உலை இயங்க அனுமதிக்கப்படுகிறதென்றால், ஆளும் கும்பல் தெரிந்தே தமிழகத்தை அழிவுப் பாதைக்குள் தள்ளிவிட முயலுகிறது என்ற முடிவுக்குத்தான் வர முடியும்.

ஃபுகுஷிமா அணுஉலை விபத்தின் பின், மேற்குலக நாடுகள், குறிப்பாக ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற ஏகாதிபத்திய நாடுகளே அணுமின் திட்டங்களை மூடுவது, குறைப்பது, கைவிடுவது போன்ற நடவடிக்கைகளில் இறங்கி வருகின்றன. சூரியமின்சக்தி, காற்றாலை போன்ற சுற்றுப்புறச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத மாற்று மின்திட்டங்களை அமல்படுத்த முனைகின்றன. தமிழகத்திலும் இப்படிபட்ட மாற்று மின்உற்பத்திக்கான வாய்ப்புகள் இருப்பதை - மேலும் 1,500 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய காற்றாலைகளை அமைப்பது, தனுஷ்கோடி கடற்பரப்பில் காற்றாலைகள் அமைப்பது - வல்லுநர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மாற்று மின்திட்டங்களுக்கான வாய்ப்புகள் உள்ள நிலையில், இந்திய ஆளும் கும்பலோ ஆபத்தும், பெருஞ்செலவும் நிறைந்த அணுஉலை தொகுப்புகளை வங்காள விரிகுடா கடற்கரையையொட்டி அமைக்கத் திட்டம் போடுகின்றன. இந்திய மக்களின் உயிர், நல்வாழ்வை



www.padippkam.com

விட, இந்திய ஆளும் கும்பலுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு போட்டுக் கொண்டுள்ள அணுஉலை வியாபார, இராணுவ ஒப்பந்தங்கள்தான் பெரிதாகத் தெரிகிறது.

நமது நாட்டில்தற்பொழுது இயங்கிவரும் அணுஉலைகளில் ஏதேனும் விபத்து ஏற்பட்டால், அவ்வுலையை இயக்கி வரும் நிறுவனத்திற்குச் சட்டப்படி விதிக்க முடிந்த அபராதம் வெறும் 500 ரூபாய்தான் எனத் தலைமைக் கணக்கு அதிகாரியின் சமீபத்திய அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. கடந்த 2010-ஆம் ஆண்டில் மன்மோகன் சிங் அரசு கொண்டு வந்த அணுசக்தி கடப்பாடு சட்டமோ இதைவிடக் கேவலமாக உருவாக்கப்பட்டுள்ளது. அணுஉலையை விற்கும் நிறுவனங்கள் இந்த 500 ரூபாய் அளவிற்குக்கூட அபராதமோ, நட்ட ஈடோ அளிக்கத் தேவையில்லை எனச் சலுகை அளிக்கிறது, அச்சட்டம்.

தற்பொழுது கூடங்குளத்தில் எரிபொருள் நிரப்ப அனுமதிக்கப்பட்டுள்ள அணுஉலை எண் 1 மற்றும் 2-இல் விபத்து ஏற்பட்டால், இந்த அணுஉலைகளை விற்ற ரசியா அதற்குப் பொறுப்பேற்று நட்ட ஈடு வழங்கத் தேவையில்லை என மன்மோகன் சிங் அரசு, நாடாளுமன்றத்திற்கே தெரியாமல் ரசியாவிற்குக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துள்ளது. இதே போன்ற விலக்கை கூடங்குளத்தில் நிறுவப்படவுள்ள அணு உலைகள் 3 மற்றும் 4-க்கும் தர வேண்டும் என்கிறது, ரசியா. ''அது சாத்தியமா?'' என யோக்கியர் போல அதிகாரிகளிடம் ஆலோசனை கலக்கிறார் மன்மோகன்.

அணுஉலையை ஆதரிப்பதில் ஜெயா வேறு கட்சி, மன்மோகன் சிங் வேறு கட்சி அல்ல. இடிந்தகரை மக்களின் முதுகில் குத்தி ஜெயா இதனை நிரூபித்திருக்கிறார். எனினும், அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கத் தலைமை, ''புதிய பேச்சுவார்த்தைத் தொடங்க விரும்புவதாகவும், கூடங்குளம் மின் திட்டத்தை மக்களுக்கு உகந்த, இயற்கையோடு இணைந்த திட்டமாக மாற்ற நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்'' வேண்டுகோள் விடுத்து, தமிழக முதல்வர் ஜெயாவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது (தினமணி 27.8.2012, பக்.9). வெளக்குமாறுக்குப் பட்டுக் குஞ்சம் கட்டுவது தகுமா?

● குப்பன்

# வி.வி.மு.வின் துணையுடன் ஏரி ஆக்கிரமிப்பை அகற்றிய கிராம மக்களின் போராட்டம்!

விழுப்புரம் மாவட்டம், பண்ருட்டி வட்டாரத்தில் பல ஏரிகள் பல்வேறு ஆதிக்க சக்திகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இது குறித்து அவ்வப்போது நாளேடுகளில் செய்திகள் வந்துள்ள நிலையில், இப்பகுதியில் இயங்கிவரும் விவசாயிகள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர்கள் கடந்த ஜூன்-ஜூலை மாதங்களில் கிராமங்கள்தோறும் ஆய்வு செய்தபோது, பண்ருட்டி வட்டாரத்தில் மட்டும் அரசியல்வாதிகள், அதிகாரிகளின் துணையோடு 40 ஏரிகள் ஆக்கிரமிக்கப்பட்டு, ஏறத்தாழ ஒன்றரை லட்சம் ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதைக் கண்டறிந்தனர். இதை அம்பலப்படுத்தி, ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றி, ஏரிகளைத் தூர்வாரி ஆழப்படுத்தி விவசாயத்துக்குப் பயன்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரி கடந்த ஜூலையில் சுவரொட்டி பிரச்சாரத்தை மேற்கொண்டனர். ஆக்கிரமிப்புகளால் விவசாயம் பாதிக்கப்பட்டு வேதனையில் துவண்டிருந்த இவ்வட்டார விவசாயிகள், இப்பிரச்சாரத்தை வரவேற்று தங்கள் ஆதரவையும் மகிழ்ச்சியையும் தெரிவித்தனர்.




பண்ருட்டி வட்டம் ஒரையூர் கிராமத்தில் கடந்த 20 ஆண்டு காலமாக 96 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஏரியில் ஏறத்தாழ 80 ஏக்கர் அளவுக்கு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதற்கெதிராக இக்கிராம மக்கள் அதிகாரிகளிடம் பலமுறை புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில், வி.வி.மு.வின் சுவரொட்டிப் பிரச்சாரத்தால் உற்சாகமடைந்து, கடந்த ஆகஸ்டு முதல் நாளன்று தங்கள் சொந்த செலவில் மூன்று மண்வாரும் எந்திரங்களை வரவழைத்து அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்து ஆக்கிரமிப்பை அகற்ற வருமாறு கோரினர். நில அளவை செய்துவிட்டுச் சென்ற அதிகாரிகள், வருவதாகச் சொல்லிவிட்டு ஒரு நாள் முழுக்கவும் வரவில்லை. இதில் முன்முயற்சியுடன் செயல்பட்ட தே.மு.தி.க.வைச் சேர்ந்த கவுன்சிலர் கார்த்திக், காளிதாஸ் ஆகிய தன்னார்வலர்கள் வி.வி.மு. தோழர்களைத் தொடர்பு கொண்டு, நீங்களே வந்து இந்த ஆக்கிரமிப்பு அகற்றலைத் தொடங்கி வைக்குமாறு கோரினர். அதன்படி வி.வி.மு. தோழர்கள் ஆகஸ்டு 2-ஆம் தேதியன்று செஞ்சட்டையுடன் அணிதிரள, ஆக்கிரமிப்பாளர்கள் அரண்டு போயினர். ஏரியில் கால் வைக்கக் கூட முடியாமல், ஆடு-மாடுகள் கூட மேய்ச்சலுக்குச் செல்ல முடியாமல் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதைக் கண்டு குமுறிக் கொண்டிருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராம மக்கள் அணிதிரண்டு தாங்களே முன்வந்து ஆக்கிரமிப்புகளை அகற்றினர். அதைத் தொடர்ந்து ஏரியின் கரை மடிக்கப்பட்டது. இந்தச் செய்தி காட்டுத் தீ போல அருகிலுள்ள கிராமங்களுக்கும் பரவியதால், பலரும் தங்கள் கிராமத்திலும் ஆக்கிரமிப்புகளை அகற்ற துணை நிற்குமாறு வி.வி.மு.விடம் தொடர்பு கொண்டு வருகின்றனர்.

வி.வி.மு. தோழர்களின் துணையோடு கிராம மக்கள் ஒற்றுமையாக அணிதிரண்டு ஏரியை மீட்ட இச்சம்பவம், இவ்வட்டாரமெங்கும் பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளதோடு வி.வி.மு. மீது புதிய நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

-பு.ஜ.செய்தியாளர்



படிப்பகம்

www.padippkam.com

# அடாவடி உத்தரவால் அல்லற்படும் ரேசன் அட்டைதாரர்கள்
# ரேசன் கடைகளை மூடுவதற்கான சதியை எதிர்த்து ஆர்ப்பாட்டம்




தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டத்தில் கடந்த ஓராண்டு காலமாக ரேசன் கடைகளில் அரிசி, மண்ணெண்ணெய் முதலான உணவுப் பொருட்களைப் பெறுவது குதிரைக் கொம்பாகிவிட்டது. குடும்பத் தலைவர் வந்தால் மட்டுமே ரேசன் பொருட்களைத் தர முடியும் என்றும், வாக்காளர் அடையாள அட்டையைக் கொண்டுவர வேண்டும் என்றும் ரேசன் கடைகளில் கெடுபிடி செய்கின்றனர். வறுமை - வேலையின்மையால் வெளி மாநிலங்களுக்குக் கூலி வேலைக்குச் சென்றுள்ள குடும்பத் தலைவர் இதற்காக வர முடியுமா? அப்படிக் குடும்பத் தலைவரே வந்தாலும், ரேசன் பொருட்களைப் பெறுவதற்கு முதல்நாள் இரவிலிருந்தே ரேசன் கடை முன்பு இடத்தைப் பிடித்துப் படுத்துறங்கி, வரிசையில் முண்டியடித்துக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இவ்வாறு சிரமப்பட்டாலும் நூற்றுக்கு எண்பது பேருக்கு மட்டுமே பொருட்கள் கிடைக்கிறது. மீதிப் பேரை அடுத்த மாதம் வாருங்கள் என்று திருப்பி அனுப்புகின்றனர்.

இப்படி அடாவடித்தனமான உத்தரவுகளைப் போட்டு மக்களை அலைக்கழித்து ரேசன் கடைகளை மூடிவிடுவதற்கான சதித் திட்டத்தில் அரசு இறங்கியுள்ளது. உணவுப் பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரில் நகரத்தில் 28 சதவீத மக்களுக்கும் கிராமங்களில் 46 சதவீத மக்களுக்கும் மட்டுமே உணவுப் பொருட்களை வழங்கிவிட்டு, மற்றவர்களைப் பொது விநியோகத் திட்டத்திலிருந்து நீக்கிவிட முயற்சித்து வருகிறது. ரேசன் கடைகளில் பொருட்களை வழங்குவதை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக அட்டைதாரர்களுக்கு அதற்கான பணத்தைக் கொடுப்பது என்ற உலகவங்கியின் திட்டத்தைச் செயல்படுத்தத் துடிக்கிறது.

இந்த உண்மைகளை விளக்கியும், நமது வாழ்வைச் சூறையாடும் தனியார்மய - தாராளமயத் தாக்குதலை முறியடிக்க அறைகூவியும் பென்னாகரம் டெம்போ ஸ்டாண்டு அருகில் 13.8.2012 அன்று விவசாயிகள் விடுதலை முன்னணியின் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வி.வி.மு. வட்டக்குழு உறுப்பினர் தோழர் அருண் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து ஊர்வலமாகச் சென்று வட்டாட்சியரிடம் மனு கொடுத்து முறையிட்டபோது, குடும்பத் தலைவர் வரவேண்டும் என்ற உத்தரவை நீக்குவதாகவும், மற்ற கோரிக்கைகளைப் பரிசீலித்து நிறைவேற்ற ஆவன செய்வதாகவும் உறுதியளித்தார். திரளான உழைக்கும் மக்களின் பங்கேற்புடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டம் ரேசன் கடைகளை மூடத் துடிக்கும் ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்டத்துக்கு அறைகூவுவதாக அமைந்தது.

-பு.ஜ.செய்தியாளர், பென்னாகரம்

# காவிரி நீரின்றித் தவிக்கும் தமிழகம்!
# விவசாயத்தைக் காவுகொள்ளும் மறுகாலனியாக்கம்!
## – புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம்

‘‘காவிரி நீரின்றி வறண்டு வருகிறது தமிழகம்! தமிழகத்துக்குத் தொடர்ந்து துரோகமிழைத்து வருகிறது மன்மோகன் அரசு! விவசாயிகளை வஞ்சிக்கும் ஜெயலலிதா அரசு! விவசாயத்தைக் காவுகொள்ளும் மறுகாலனியாக்கம்!’’ - எனும் மைய முழக்கங்களுடன் ம.க.இ.க. தஞ்சை செயலாளர் தோழர் இராவணன் தலைமையில் 3.8.3012 அன்று தஞ்சை ரயிலடியில் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; ஆகிய அமைப்புகள் இணைந்து ஆர்ப்பாட்டத்தை நடத்தின.




பாதிக்கப்பட்டுள்ள டெல்டா விவசாயிகளுக்காக உரிய நிவாரணம் கோரிப் போராடுகின்ற அதேசமயம், நீர்வளங்களைத் தனியார்மயமாக்கும் தேசிய நீர்க் கொள்கையை முறியடிக்க வேண்டிய அவசியத்தையும்; காவிரி நீரில் தமிழத்தின் நியாயவுரிமையையும் சட்டபூர்வ பங்கையும் மறுத்து அடாவடி செய்யும் கர்நாடக அரசு மீது நடவடிக்கை எடுக்காமல் அலட்சியப்படுத்தும் மன்மோகன் அரசையும்; விளைநிலங்களை வீட்டுமனைகளாக்குவதைத் தடைசெய்ய முன்வராத ஜெயலலிதா அரசின் பித்தலாட்டத்தையும் அம்பலப்படுத்தி வி.வி.மு. பட்டுக்கோட்டை வட்டார அமைப்பாளர் தோழர் மாரிமுத்து, வி.வி.மு. தோழர் பொன்னுசாமி, ம.க.இ.க. மாநில இணைச் செயலாளர் தோழர் காளியப்பன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

விவசாயத்திலிருந்து விவசாயிகளை விரட்டியடிக்கும் தனியார்மயக் கொள்கையை ஒழித்துக்கட்டவும், நாடு மீண்டும் காலனியாவதைத் தடுத்து நிறுத்தவும் போராட அறைகூவி, திரளான உழைக்கும் மக்களின் பங்கேற்புடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டம் மக்களிடம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

-பு.ஜ. செய்தியாளர், தஞ்சை



படிப்பகம்

www.padippkam.com

## கறுப்புப் பணம்: 4

# கறுப்புக்கும் வெள்ளைக்கும் இடையில்...

**வெளிநாட்டு வங்கிகளில் முதலாளிகள் பதுக்கி வைத்துள்ள கறுப்புப் பணத்தைக் கைப்பற்ற காங்கிரசும் பா.ஜ.க.வும் கனவிலும் விரும்பவில்லை.**

*‘எனக்கு ஒரு கனவு உண்டு. எந்த தேசமும் சொந்தம் கொண்டாட முடியாத வகையில், நமக்கு மட்டும் சொந்தமான ஒரு தீவை விலைக்கு வாங்க வேண்டும். எந்த தேசத்துக்கும் சமூகத்துக்கும் கட்டுப்படத் தேவையில்லாத, உண்மையிலேயே நடுநிலையான அந்த மண்ணின் மீது டௌ நிறுவனத்தின் உலகத் தலைமையகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.’*

- கார்ல் கெர்ஸ்டாக்கர், தலைவர், டௌ கெமிக்கல்ஸ்,1972.

இந்தியாவிலிருந்து வெளியேறிய கறுப்புப் பணம், அந்நிய முதலீடாக வேடமணிந்து இந்தியாவுக்குள் நுழைவதை முன்னேற்றம் என்று கொண்டாடிக் கொண்டே, கறுப்புப் பணம் குறித்து வெள்ளை அறிக்கையை தாக்கல் செய்கிறது அரசு என்று குறிப்பிட்டு, ஜூலை இதழில் இக்கட்டுரைத் தொடரை நிறுத்தியிருந்தோம்.

2009 - ஆம் ஆண்டில் இந்தியாவில் போடப்பட்டுள்ள அந்நிய நேரடி முதலீடுகளில், 21% மொரிசியஸ் போன்ற வரியில்லா சொர்க்கங்களின் மூலம் நுழைந்திருக்கும் இந்திய கார்ப்பரேட் முதலாளிகளின் கறுப்பு பணம்தான் என்கிறது ஐ.எஸ்.ஐ.டி. என்ற ஆய்வுக் கழகத்தினைச் சேர்ந்த பேரா.சலபதி ராவ், பிஸ்வஜித் தர் ஆகியோருடைய ஆய்வு.

இதுவன்றி அந்நிய முதலீட்டு நிறுவனங்களின் ( FII ) மூலம் இந்தியப் பங்குச்சந்தைக்குள் அன்றாடம் நுழைந்து கொண்டிருக்கும் கோடிக்கணக்கான டாலர்களுக்குள்ளேயும் இந்தியக் கறுப்பு பணம் இருக்கிறது. அது சர்வதேச நிதிமூலதனம் என்ற பரமாத்மாவில் ஐக்கியமாகிவிட்ட தேசிய கறுப்புப் பண ஜீவாத்மா. அதனைப் பிரித்தறிவது கடினம்.

‘‘இந்தியாவுக்கு வெளியே அனுப்பப்பட்ட சட்ட விரோத (கருப்பு) பணத்தின் கணிசமான பகுதி, ஹவாலா, வரியில்லா நாடுகள் மூலமான அந்நிய நேரடி முதலீடு, இந்திய கம்பெனிகளுக்கான பன்னாட்டு முதலீட்டு வரவுகள் (GDR), பார்ட்டிசிபேட்டரி நோட்டுகள் ஆகிய வடிவங்களில் மீண்டும் இந்தியாவுக்குள்ளேயே நுழைந்திருப்பது சாத்தியமே’’ என்று கூறுகிறது நாடாளுமன்றத்தில் அரசு வெளியிட்டிருக்கின்ற கறுப்பு பணம் குறித்த வெள்ளை அறிக்கை.

மேற்கூறிய ‘கருப்புப் பண‘ தீவுகளெல்லாம் ஏதோ சட்டத்திற்கு உட்படாத மர்மமான பிராந்தியங்கள் போலவும், அவர்களைக் கட்டுப்படுத்த அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட பல்வேறு நாட்டு அரசுகள் முயன்று கொண்டிருப்பதைப் போலவும், இந்திய அரசும் அவ்வாறு முயன்றால், கறுப்புப் பணம் மொத்தத்தையும் அள்ளிக் கொண்டு வந்துவிட முடியும் என்பதைப் போலவும் உருவாக்கப் படும் சித்திரம் அபத்தமானது, மோசடியானது என்பதை இத்தொடரில் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம்.

நிக்கோலஸ் ஷாக்ஸன் என்ற பொருளாதாரப் பத்திரிகையாளர் எழுதி, சென்ற ஆண்டு வெளிவந்துள்ள ‘‘டிரஷர் ஐலேண்ட்ஸ் - வரியில்லா சொர்க்கங்களும், உலகத்தைக் கொள்ளையிடும் மனிதர்களும்’’ என்ற நூல், ஏகாதிபத்தியங்கள் இந்தக் கடல் கடந்த சொர்க்கங்களைத் திட்டமிட்டே எப்படி உருவாக்கின என்பதை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துகிறது.

கடல் கடந்த சொர்க்கங்கள் எனப்படுபவை, சுயேச்சையான அரசுகள் அல்ல; அவை, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற உலகின் வல்லரசுகளால் கட்டுப்படுத்தப்படும் வலைப்பின்னல்கள் என்பதை ஆதாரங்களுடன் நிறுவியிருக்கிறார், ஷாக்ஸன்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் சரிந்து விட்ட தனது உலக சாம்ராச்சியத்தைக் காப்பாற்றிக் கொள்ள இயலாத பிரிட்டன், உலகின் நிதி மூலதனத்தைத் தன்னை நோக்கி ஈர்க்கும் பொருட்டு இலண்டன் மாநகரத்தையே உலக கோடீசுவரர்களின் பணத்தைப் பாதுகாக்கும் ரகசியச் சுரங்கமாக மாற்றியது என்கிறார் ஷாக்ஸன். பிரிட்டிஷ் அரசின் சட்டங்களுக்கு, குறிப்பாக நிதி மற்றும் வரிகள் தொடர்பான சட்டங்களுக்கு அப்பாற்பட்ட, ஒரு தனித் தீவாக, ‘சிட்டி ஆப் லண்டன்’ என்ற நிதி நகரத்தைச் சட்டபூர்வமாக உருவாக்கியதுடன், உண்மையான இலண்டன் நகரத்துக்கான மேயரைப் போன்றே, இந்த நிழல் நகரத்துக்கும் ஒரு மேயரை உருவாக்கியது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்.

இப்படி உலகெங்குமுள்ள முதலாளிகளும் கோடீசுவரர்களும், தத்தம் நாட்டின் சட்டங்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு இடத்தில், தமது பணத்தை இரகசியக் கணக்குகளில் பாதுகாத்து வைத்துக்கொள்ள முடியும் என்பதற்கான சாத்தியத்தை உருவாக்கியதே பிரிட்டன்தான்.

இன்று மொரிசியஸ் உள்ளிட்ட வரியில்லா சொர்க்கங்களில் கம்பெனிகளைப் பதிவு செய்து கொண்டு வரி



படிப்பகம்

www.padippkam.com

ஏய்ப்பு செய்பவர்கள், ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருளை இன்னொரு நாட்டில் உள்ள தனது நிறுவனத்தின் கிளைக்கே பத்து ரூபாய்க்கு விற்றதாகக் கணக்கெழுதி (Transfer pricing) நட்டக்கணக்கு காட்டி வரி ஏய்க்கும் பன்னாட்டு நிறுவனங்கள் ஆகிய அனைவருக்கும் பிதாமகர்களே பிரிட்டனைச் சேர்ந்த ஏகபோக முதலாளிகளான வெஸ்டே சகோதரர்கள்தான் என்பதையும் தனது நூலில் கூறுகிறார் ஷாக்சன்.

பிரிட்டனின் காலனியாக இருந்த 14 சிறிய தீவுகளை, இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் கடல் கடந்த பிரிட்டிஷ் பகுதிகளாக (Overseas British Territories) அறிவித்துக் கொண்டது பிரிட்டன். இன்று வோடஃபோன் வழக்கில் 11,000 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு செய்திருக்கும் ஹட்சின்சன் வாம்போவா நிறுவனம், பதிவு செய்யப்பட்டிருக்கும் கே மேன் தீவுகள் உள்ளிட்ட இந்த 14 சொர்க்கத் தீவுகள் கொண்ட வலைப்பின்னலின் சிலந்தி, இலண்டன் நிதி நகரம். வெறும் 54,000 பேர் மக்கட் தொகை கொண்ட கே மேன் தீவுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை மட்டுமே 80,000.

பிரிட்டன் நிதி நகரத்தைப் போலவே, அமெரிக்கா, தன் நாட்டுக்குள்ளேயே உருவாக்கியிருக்கும் வரியில்லா சொர்க்கம் டெலாவர் என்ற மாநிலம். 'பார்ச்சூன் 500' என்று அழைக்கப்படும் உலகின் மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்களில் மூன்றில் இரண்டு பங்கு நிறுவனங்கள் டெலாவரில்தான் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. டெலாவரில் ஒரு கம்பெனியைப் பதிவு செய்து அம்மாநில அரசின் ஒப்புதலைப் பெறுவதற்குத் தேவைப்படும் அவகாசம் ஒரே ஒரு நாள் என்று இம்மாநிலம் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்கிறது.

இத்தனை பெரிய வரியில்லா சொர்க்கத்தை தன் நாட்டில் வைத்துக் கொண்டு, கே மேன் தீவுகளில் ஒரே கட்டிடத்தில் 12,000 கம்பெனிகளைப் பதிவு செய்திருக்கிறார்கள் என்று அந்த அரசை விமரிசித்தார் ஒபாமா. ''அது உலகின் மிகப்பெரிய கட்டிடமாக இருக்கவேண்டும், அல்லது மிகப்பெரிய ஊழலாக இருக்க வேண்டும்'' என்று கேலி செய்தார்.

இதற்குப் பதிலளித்த கேமேன் தீவுகளின் நிதித்துறை ஆணையர், டெலாவர் மாநிலத்தில், 1209, வடக்கு ஆரஞ்சு தெரு, வில்மிங்டன் - என்ற முகவரியில் அமெரிக்கன் ஏர்லைன்ஸ், கோகோ கோலா, போர்டு, ஜெனரல் மோட்டார்ஸ், கென்டகி சிக்கன், கூகிள், டாயிஷ் வங்கி உள்ளிட்ட 2,17,000 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதை ஒபாமாவுக்கு நினைவுபடுத்தி, ஈயத்தைப் பார்த்து பித்தளை இளிக்கக் கூடாது என்று ஒபாமாவுக்கு சூடு வைத்தார்.

உலகத்தில் உள்ள வரியில்லாத கறுப்புப் பண சொர்க்கத் தீவுகளைப் பட்டியலிட்டால், அதில் முதல் இரண்டு இடங்கள் இலண்டனுக்கும் டெலாவருக்கும்தான் என்கிறார் ஷாக்சன்.

உலகமுழுவதிலும் உள்ள கார்ப்பரேட் முதலாளிகளும், கோடீசுவரர்களும் வரி ஏய்ப்பு, கள்ளக்கணக்கு உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்கள் மூலம் தாங்கள் ஈட்டிய பணத்தை, பினாமி பெயர்களில் முதலீடு செய்வதற்குத் தெரிவு செய்யும் சொர்க்கத் தீவு எது?

'டாக்ஸ் ஜஸ்டிஸ் நெட்வொர்க்' என்ற சர்வதேச தன்னார்வ அமைப்பு 2009 - நவம்பரில் ஒரு பட்டியலை வெளியிட்டுள்ளது. கார்ப்பரேட் முதலாளிகளும், நிதி நிறுவனங்களும் கோருகின்ற நிதித்துறை கள்ளத்தனத்தை (Financial secrecy) பேணுவதில் உலகத்திலேயே இலண்டன் 5 - வது இடத்தில் இருக்கிறது. நான்காவது இடம் கேமேன் தீவு, மூன்றாவது இடம் சுவிஸ், இரண்டாவது இடம் லக்சம்பர்க், முதல் இடம் அமெரிக்கா. அதாவது, அம்பானி முதல் ஆ.ராசா வரையிலான யாரும் தங்களது பணத்தை இரகசியமாக முதலீடு செய்து வருவாய் ஈட்ட உகந்த இடம் அமெரிக்கா என்பதே இந்த ஆய்வு முடிவின் பொருள்.



கோக், ஃபோர்டு உள்ளிட்ட 2,17,00 நிறுவனங்களின் பதிவு அலுவலகங்கள் செயல்பட்டு வரும், அமெரிக்காவின் டெலாவர் மாநிலத்தின் வில்மிங்டன் நகரில், வடக்கு ஆரஞ்சு தெருவிலுள்ள கட்டிடம்: கறுப்புப் பணத்தின் மூலவர் சன்னதி.

கறுப்புப் பணம் என்பது கட்டு கட்டாக ஸ்விஸ் வங்கியின் இரும்பு பீரோக்களில் வைக்கப்பட்டிருப்பதல்ல. பூட்டி வைக்கப்பட்டால் அது செத்த பணம். உயிருடன் அலைந்து சுரண்டலில் ஈடுபட்டு அல்லது சூதாட்டத்தில் ஈடுபட்டு, பெருக முடிந்தால்தான் அது மூலதனம். பங்குச் சந்தை, நாணயச்சந்தை, ரியல் எஸ்டேட் மற்றும் தொழில் உற்பத்தி போன்றவற்றில் புகுந்து மூலதனம் இலாபமீட்ட வேண்டும். அதே நேரத்தில் எந்த நாட்டின் சட்டத்திற்கும் வரி விதிப்பிற்கும் கட்டுப்படவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கக் கூடாது. இதுதான் உலக முதலாளி வர்க்கத்தின் விருப்பம்.

கடந்த சுமார் 25 ஆண்டுகளில், அதாவது உலகம் முழுவதும் புதிய தாராளவாதக் கொள்கைகள் அமலாகத்



படிப்பகம்

www.padippkam.com

தொடங்கியதற்குப் பின்னர், முதலாளி வர்க்கத்தின் இந்த விருப்பம் வெகு வேகமாக நிறைவேறி வருகிறது. முக வரி இல்லாத முதலீட்டு வடிவங்களைச் சட்டபூர்வ மானவையாக ஆக்கியதன் மூலம், சட்டவிரோதமானவை யெல்லாம் சட்டபூர்வமானவையாகிவிட்டன. கறுப்பு வெள்ளையாகிவிட்டது.

எடுத்துக் காட்டாக, பிரைவேட் ஈக்விடி போன்ற முத லீட்டு நிறுவனங்களில், பார்ட்டிசிபேட்டரி நோட்டுகள் போன்ற நிதிக் கருவிகளில் (Financial instruments) டாடா, மித்தல், அம்பானி முதலிய தரகு முதலாளிகள் தங்களது வரி ஏய்ப்பு செய்த கறுப்பு பணத்தையோ, அமைச்சர்கள் தங்களது ஊழல் பணத்தையோ எத்தனை ஆயிரம் கோடிவேண்டுமானாலும் முதலீடு செய்யலாம். அந்த நிறுவனங்கள் அப்பணத்தை எந்த நாட்டின் பங்குச் சந்தையிலும் சூதாடி இலாபம் ஈட்டும். தங்கள் நிறுவனத் தில் முதலீடு செய்திருப்பவர்கள் யார் என்பதை எந்த அர சுக்கும் அவர்கள் காட்டத்தேவையில்லையென்றும், அவர்கள் போட்டிருக்கும் மூலதனத்துக்குக் கிடைக்கின்ற ஆதாயத்திற்கும் (capital gains) வரி செலுத்த தேவை யில்லை என்றும் டெலாவர், இலண்டன், கேமேன் தீவு கள் போன்றவை சட்டமியற்றி வைத்துள்ளன. வரி ஏய்ப்பு, இரகசியம் என்ற இரட்டை ஆதாயங்களை வழங்குவதால் தான் பன்னாட்டு நிறுவனங்களும் ஊழல் அரசியல்வாதி களும் தங்கள் கறுப்பு பணத்தை இங்கே முதலீடு செய் கின்றனர்.

இந்தியாவின் பொதுத்துறை நிறுவனங்கள் முதல் தனி யார்துறை நிறுவனங்கள் வரை பலவற்றிலும் அந்நிய நிதி நிறுவனங்களின் (FII) முதலீடு பெருகி வருகிறது. ஆனால் இப்படி முதல் போடும் 'அந்நியர்கள்' யார் என்பது இந் திய அரசுக்குத் தெரியாது. காரணம், இவை முகமூடி அணிந்த முதலீடுகள். இவ்வாறு ''பங்குச்சந்தைக்குள் முக வரி தெரியாத முதலீடுகள் நுழைவது ஆபத்து'' என்று ஒரு புறம் ரிசர்வ் வங்கி கூறுவதும், மறுபுறம் ''அந்நிய முத லீடுகள் பெருகுவதுதான் முன்னேற்றம்'' என்று மன் மோகன் அலுவாலியா கும்பல் கூவுவதும் தொடர்ந்து நாம் கண்டு வரும் காட்சிகள்.

2007-அக்டோபரில், அந்நிய மூலதனத்தில் சரி பாதி, பார்ட்டிசிபேட்டரி நோட்டுகள் என்ற வடிவத்தில் வந் திருப்பது கண்டு பீதியடைந்த செபி (SEBI) அமைப்பு அதனைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற தகவலை நிதி யமைச்சகத்துக்கு அனுப்பியது. இந்த செய்தி கசிந்தவு டன் அக்டோபர் 17 - ஆம் தேதி ஒரே நாளில் சென்செக்ஸ் 1744 புள்ளிகள் வீழ்ந்தது. மும்பை பங்குச் சந்தையின் வர லாற்றில் இவ்வளவு மோசமான வீழ்ச்சி நடந்ததில்லை. பங்குச்சந்தையின் செயல்பாடு ஒரு மணி நேரத்துக்கு நிறுத்தி வைக்கப்பட்டது. பார்ட்டிசிபேட்டரி நோட்டு களை தடை செய்யப்போவதில்லை என்று காலில் விழாத குறையாக நிதி அமைச்சர் சிதம்பரம் கெஞ்சிய பின்னரே, பங்குச் சந்தை சாதாரண நிலைக்கு திரும்பியது.

தற்போது வோடஃபோன் வரி ஏய்ப்பைத் தொடர்ந்து, வரி தவிர்ப்பு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் விதி முறைகளை (GAAR) அறிமுகப்படுத்த இருப்பதாக நிதி யமைச்சகம் கூறியதும், சுமார் ஒரு இலட்சம் கோடி அந் நிய மூலதனம் வெளியேறியது. உடனே நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி , ''அந்நிய முதலீட்டு நிறுவனங்களில் பார்ட்டிசிபேட்டரி நோட்டுகளாக முதலீடு செய்துள்ள வர்கள் யார் என்ற கேள்வியை இந்திய வரி அதிகாரிகள் யாரும் கேட்கமாட்டார்கள். சோதிக்கவும் மாட்டார்கள். எனவே, பார்ட்டிசிபேட்டரி நோட் உரிமையாளர்கள் இந் தியாவில் வரி கட்டவேண்டும் என்ற பேச்சுக்கே இட மில்லை'' என்று சத்தியம் செய்தார். *(தி இந்து, மார்ச்30, 2012)*

வரிவிதிப்பு தொடர்பான இந்திய அரசின் கொள்கை கள் அமெரிக்க முதலீட்டாளர்களை அச்சுறுத்துவதாக இந் திய அரசை ஒபாமா எச்சரித்தவுடன், ''விதிகள் தளர்த்தப் படும்'' என்றார் மன்மோகன். அதற்கான ஏற்பாடுகளை செய்துவருகிறார் தற்போதைய நிதியமைச்சர் ப.சிதம்ப ரம். ஜி.ஏ.ஏ.ஆர் விதிமுறைகளை உருவாக்கிய வருவாய்த் துறை செயலர் ஆர்.எஸ்.குஜ்ராலும் அந்தப் பதவியி லிருந்து தூக்கப்பட்டுவிட்டார்.

வோடஃபோன் வரி ஏய்ப்பைத் தொடர்ந்து, 1983-இல் மொரிசியசுடன் போடப்பட்ட இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீளாய்வு செய்யப்போவதாக நிதி யமைச்சகம் கூறியவுடனே, அங்கே பெயர்ப்பலகை கம் பெனி வைத்துள்ள இந்தியத் தரகு முதலாளிகள் மற்றும் பன்னாட்டு கம்பெனிகள் மொரிசியஸ் வெளியுறவுத் துறை அமைச்சரை இந்தியாவுக்குப் பத்தி விட்டனர். 1983 ஒப்பந்தத்தை மாற்றவோ, திருத்தவோ வேண்டாம் என்றும், 40 சதுர கி.மீ. பரப்பளவுள்ள 'அகலேகா' தீவு களை இந்தியாவுக்கு வழங்குவதாகவும், அங்கே இந்தியா கடற்படைத் தளம் அமைத்துக் கொள்ளலாம் என்றும் அவர் ஆசை காட்டியிருக்கிறார்.

சமீபத்தில் ஹாங்காங் ஷாங்காய் பாங்கிங் கார்ப்பரே சன் (HSBC) என்ற பிரிட்டிஷ் வங்கியின் மீது அமெரிக்க அரசு பல குற்றச்சாட்டுகளை அடுக்கியிருக்கிறது. அந்தப் பன்னாட்டு வங்கி மெக்சிகோவைச் சேர்ந்த போதை மருந்து மாஃபியாவின் கறுப்பு பணத்தை அமெரிக்காவுக் குள் முதலீடு செய்திருக்கிறது; சுமார் 700 கோடி டாலரை காகிதப் பணமாகவே மெக்சிகோவிலிருந்து அமெரிக்கா வுக்குள் கடத்தி வந்திருக்கிறது. சவூதியை சேர்ந்த இசு லாமிய பயங்கரவாதிகளின் வங்கிக் கணக்கைப் பேணு கிறது.

இதேபோல, அமெரிக்க அரசு விதித்துள்ள பொருளா தாரத் தடையையும் மீறி, இரானின் வணிகத்தை கள்ளத் தனமாகச் செய்து கொடுத்ததாக ஸ்டான்சார்ட் வங்கியின் மீதும் அமெரிக்கா குற்றம் சாட்டியிருக்கிறது. ஆனால், இத்தகைய அதிபயங்கர குற்றங்களை இழைத்த வங்கி களுக்கு அமெரிக்க அரசு விதித்திருக்கும் தண்டனை - அபராதம்!

கறுப்பை வெள்ளையாக்கும் குற்றம் (Money laundering) என்று அழைக்கப்படும் இந்தக் குற்றம் எச்.எஸ்.பி.சி. வங்கியில் நடந்தபோது அதன் தலைவராக இருந்த லார்டு ஸ்டீபன் கிரீன் என்பவர்தான், தற்போது பிரிட்டனின் வர்த்தகத்துறை அமைச்சர்.



படிப்பகம்

www.padippkam.com

இந்த இலட்சணத்தில், கறுப்பு பணத்துக்கு எதிராக அமெரிக்க-ஐரோப்பிய அரசுகள் தீவிரமான நடவடிக்கை எடுப்பதாகவும், அதுபோன்ற தீவிர நடவடிக்கைகளை இந்திய அரசு எடுக்கவில்லை என்றும் பாரதிய ஜனதா, காங்கிரசு அரசை குற்றம் சாட்டிக் கொண்டிருக்கிறது.

கறுப்புக்கும் வெள்ளைக்கும் இடையில் நடத்திக் காட்டப்படும் இந்த ''திருடன் - போலீசு விளையாட்டில்'', திருடன்தான் போலீசு - கறுப்புதான் வெள்ளை ! இரண்டையும் வேறு வேறாகக் காண்பது நம்முடைய காட்சிப்பிழை.

கறுப்புப் பணம் என்பது, போதை மருந்துக் கும்பல்கள், கடத்தல்காரர்கள், மாஃபியாக்கள், பயங்கரவாதிகள் ஆகியோருடனும் ஊழல் அரசியல்வாதிகளுடனும் மட்டுமே தொடர்புள்ள, கன்னங்கரிய நெடிய கரடியைப் போன்ற சித்திரமாகவே மக்களின் மனதில் பதிய வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், வெள்ளை நிறத்தின் பிரநிதிகளாக காட்டப்படும் டாடா, அம்பானி, மித்தல், மல்லையா போன்றோரே கறுப்பின் முதன்மையான உறைவிடங்கள்.

பவர்கள் பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் அவர்களுடைய கூட்டாளிகளான தரகு முதலாளிகள்.

டெலாவர், மொரிசியஸ், கே மேன் தீவுகள் போன்ற வரியில்லா சொர்க்கங்களில் இருப்பவை, பித்தளையில் பளபளக்கும் பெயர்ப் பலகைகள் மட்டுமே. அந்தப் பலகைகளின் பெயரில் நாள்தோறும் பல்லாயிரம் கோடி டாலர்கள் வால் ஸ்டிரீட்டிலும், இலண்டன், டோக்கியோ, மும்பை பங்குச்சந்தைகளிலும் சூதாடப்படுகின்றன.

பன்னாட்டு நிதி நிறுவனங்களும், முதலீட்டு நிறுவனங்களும் கோடிக்கணக்கில் கொட்டிக்கொடுத்து வேலைக்கு அமர்த்தியிருக்கும் நிதித்துறை வல்லுநர்களும், ஆடிட்டர்களும், சர்வதேச வர்த்தகம் சார்ந்த சட்ட வல்லுநர்களும் புதிய புதிய சூதாட்ட முறைகளையும், கருவிகளையும் உருவாக்குகிறார்கள். நாடுகளில் கண்காணிப்புகளை மீறி, சட்டங்களின் ஓட்டைகளின் புகுந்து, எல்லாவிதமான வரிகளையும் ஏய்த்து இலாபமீட்டுகின்ற முறைகளைக் கண்டுபிடிக்கிறார்கள். அமெரிக்காவின்

**2007-அக்டோபரில், அந்நிய மூலதனத்தில் சரிபாதி, பார்ட்டிசிபேட்டரி நோட்டுகள் என்ற வடிவத்தில் வந்திருப்பது கண்டு பீதியடைந்த செபி (SEBI) அமைப்பு அதனைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற தகவலை நிதியமைச்சகத்துக்கு அனுப்பியது. இந்த செய்தி கசிந்தவுடன் அக்டோபர் 17 - ஆம் தேதி ஒரே நாளில் சென்செக்ஸ் 1744 புள்ளிகள் வீழ்ந்தது.**




கறுப்புப் பணம் என்பது வரி ஏய்ப்பு செய்தது அல்லது இலஞ்ச ஊழல் மற்றும் குற்றச் செயல்கள் போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈட்டியது என்று மட்டுமே புரிந்து கொள்ளப்படுகிறது. அவ்வாறே சித்தரிக்கவும் படுகிறது. ஆனால், சட்டபூர்வமானவை என்று அங்கீகரிக்கப்படும் வணிகப் பரிவர்த்தனைகளுக்கு உள்ளேதான் கறுப்புப் பணத்தின் பெரும்பகுதி ஒளிந்து கொண்டிருக்கிறது.

கறுப்புப் பணம் ஒளிந்திருக்கும் இடங்களாக வரியில்லா சொர்க்கத் தீவுகள் காட்டப்படுகின்றன. மாறாக, அவை சர்வதேச வர்த்தகத்தின் முக்கியமான வழித்தடங்கள். அந்தத் தீவுகளுடனான இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தங்கள், கறுப்பை வெள்ளையாக்கிக் கொள்வதற்கு முதலாளிகளுக்கு வழங்கப்படும் வாய்ப்புகள்.

கறுப்பு என்பது முகமூடியின் நிறம் மட்டுமே. அதற்குப் பின்னால் இருக்கின்ற முகம் எது என்பதுதான் நம் கவனத்துக்குரியது. முகமூடிக்குப் பின்னால் ஒளிந்திருப்

டாட். காம் குமிழியை உருவாக்கியவர்களும், தென் கிழக்காசியாவை திவாலாக்கியவர்களும், சப்-பிரைம் குமிழியை உருவாக்கி அமெரிக்க மக்களின் வீடுகளைப் பறித்தவர்களும், கிரீஸையும் ஸ்பெயினையும் போண்டியாக்கித் அந்த மக்களைத் தெருவில் நிறுத்தியிருப்பவர்களும் இவர்கள்தான்.

1997-இல் 5.7 டிரில்லியன் (ஒரு டிரில்லியன் என்பது ஒரு லட்சம் கோடி) டாலராக இருந்த உலக கோடீசுவரர்களின் செல்வம் 2009-இல் 32.8 டிரில்லியன் டாலராக உயர்ந்தது இப்படித்தான். ''உலகின் சொர்க்கத் தீவுகளில் பதுக்கப்பட்டிருக்கும் கறுப்புப் பணத்தின் மதிப்பு குறைந்தபட்சம் 21 டிரில்லியன் டாலர்; அதிகபட்சம் 32 டிரில்லியன் டாலர்'' என்கிறது டாக்ஸ் ஜஸ்டிஸ் நெட்வொர்க். இந்தியாவின் உண்மைப் பொருளாதாரத்தைப் போல 7 மடங்கு தொகை பங்குச்சந்தையிலும், நாணயச் சந்தையிலும், ஆன்லைன் வர்த்தகத்திலும் சூதாடப்படுகிறது. இதில் எவ்வளவு கறுப்பு, எவ்வளவு வெள்ளை என்பதை யாரும் கண்டறிய முடியாது.



படிப்பகம்




மெக்சிகோவைச் சேர்ந்த போதை மருந்து மாஃபியா கும்பலின் கறுப்புப் பணத்தை அமெரிக்காவிற்குக் கடத்தி வந்த ஹெச்.எஸ்.பி.சி. வங்கிக்கு அமெரிக்கா விதித்துள்ள தண்டனை-அபராதம்!

‘‘சிக்கலான நிதிக்கருவிகள், ஒன்றிலிருந்து ஒன்று கைமாறிச் செல்லும் சிலந்தி வலை போன்ற நிதிப் பரிவர்த்தனைகள் ஆகியவற்றைப் பின் தொடர்ந்து சென்று கறுப்புப் பணத்தின் உடைமையாளரை ஒருக்காலும் அடையாளம் காணமுடியாது. வங்கிக் கணக்குகளைச் சோதனை போடுவதையும் எந்த வங்கியும் அனுமதிக்காது. ஒரு வேளை கறுப்புப் பணத்துக்கு உரியவரைக் கண்டு பிடித்துவிட்டாலும், அதைச் சட்டப்படி நிரூபிப்பது சாத்தியமற்றது’’ என்கிறார் குளோபல் பைனான்சியல் இன்டக்ரிடி என்ற அமைப்பைச் சேர்ந்த ஆய்வாளர் தேவ்கார்.

சொர்க்கத்தீவுகள், அவற்றின் இறையாண்மை, இரகசியப் பாதுகாப்புச் சட்டங்கள் போன்ற ஏற்பாடுகள் அனைத்துமே உலக முதலாளி வர்க்கம் தனது கொள்ளையைப் பாதுகாப்பதற்கு செய்து கொண்டிருக்கும் ஏற்பாடு. இந்த ஏற்பாட்டுக்கு அமெரிக்கா முதல் இந்தியா வரையிலான அரசுகள்தான் போலீசாக நின்று காவல் காக்கின்றன. திருடனைப் பிடிக்கப்போவதாக சவடால் அடிப்பதும் இதே போலீசுதான்.

எந்த அரசுக்கும் சமூகத்துக்கும் கட்டுப்படத் தேவையில்லாத ஒரு தீவை டௌ கெமிக்கல்ஸ் தலைவர் 1972-இல் கனவு கண்டிருக்கிறார். உலக முதலாளி வர்க்கத்தின் கனவும் அதுதான். கடந்த 25 ஆண்டுகளில் உலகம் முழுவதும் அந்தக் கனவு நனவாகி வருகின்றது. நாடே பர்மா பஜார் ஆகிவிட்ட பிறகு, தனியே பர்மா பஜார் எதற்கு? மூலதனத்தின் வரியில்லா சொர்க்கமாக உலகமே மாறி வரும்போது தனி ஒரு தீவு எதற்கு?

ஆலகால நஞ்சாகத் திரண்டு மேலெழும்பி, உலக மக்களை அச்சுறுத்துகிறது மூலதனம். நஞ்சின் நிறம் கறுப்பானாலும் வெள்ளையானாலும் அதன் குணம் ஒன்றுதான்.

(முற்றும்) • சூரியன்

# சிறுமி சுருதியைப் பலிகொண்ட தனியார்மயத்தை வீழ்த்துவோம்!!

## - பு.மா.இ.மு.வின் தெருமுனைக் கூட்டம்

சேலையூரிலுள்ள சியோன் மெட்ரிக் பள்ளியில் இரண்டாம் வகுப்பு படித்து வந்த சுருதி, அப்பள்ளி முதலாளியின் இலாபவெறியினால் பள்ளிப் பேருந்தில் இருந்த ஓட்டையில் விழுந்து கொல்லப்பட்டுள்ளதை எதிர்த்தும், இக்கொலைக்குக் காரணமான அப்பள்ளியினை அரசுடைமையாக்க வலியுறுத்தியும் 2.8.2012 அன்று மாலையில் தாம்பரம் மார்க்கெட் பகுதியில் பு.மா.இ.மு. சார்பில் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது.




சிறுமி சுருதியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி, பு.மா.இ.மு. மாநில அமைப்புக்குழு உறுப்பினர் தோழர் சரவணன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், பு.ஜ.தொ.மு. மாநில அமைப்புச் செயலாளரான தோழர் வெற்றிவேல் செழியன் சிறப்புரையாற்றினார். முன்னாள் சாராய வியாபாரியும், இந்நாள் கல்வி முதலாளியுமான ஜேப்பியாரின் கல்வி நிறுவனத்தில் ஓட்டுநராக வேலை செய்து பழிவாங்கப்பட்ட தொழிலாளி என்ற அறிமுகத்துடன் தனது உரையைத் தொடங்கிய அவர், சியோன் பள்ளியில் ஓட்டுநராக வேலை செய்த தொழிலாளர்கள் பு.ஜ.தொ.மு. சங்கத்தைத் தொடங்கி போராடியதால், அத்தொழிலாளிகளை வேலைநீக்கம் செய்து வீதியில் வீசியெறிந்த சியோன் பள்ளி முதலாளி விஜயனின் திமிரையும், பின்னர் அம்முதலாளி இலாப வெறியோடு ஒப்பந்த முறையில் பேருந்துகளை இயக்கியதாலேயே சிறுமி சுருதி கொல்லப்பட்டுள்ளார் என்பதையும் விளக்கி, தனியார்மயத்தின் கோரத்தைச் சாடினார். கல்வி முதலாளிகளின் கொட்டங்களைத் தோலுரித்துக் காட்டிய அவர், உழைக்கும் மக்கள் வீதியில் இறங்கிப் போராடுவதன் மூலம்தான் இத்தகைய தனியார்மயக் கொடூரங்களை ஒழிக்க முடியும் என்பதை உணர்த்தினார்.

நிகழ்ச்சியின் இறுதியில் பு.மா.இ.மு. சென்னைக் கிளை தோழர்கள் நடத்திய புரட்சிகர கலைநிகழ்ச்சி, தனியார்மயத்துக்கு எதிரான போராட்ட உணர்வினைப் பார்வையாளர்களிடம் ஏற்படுத்தியது. வியாபாரிகள், பெற்றோர்கள், இளைஞர்கள் - என உழைக்கும் மக்கள் 700 பேருக்கு மேல் திரளாகக் கலந்து கொண்ட இந்தக் கூட்டம், சுருதியின் இறப்புக்குக் காரணமான தனியார்மயத்தை ஒழிப்பதற்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதை உழைக்கும் மக்களின் நெஞ்சில் ஆழமாகப் பதியவைத்துள்ளது.

-பு.ஜ. செய்தியாளர், சென்னை

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

www.padippkam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

டால் இயலாமல் போய்விடும் என்பதுதான் நிர்வாகத்தின் அச்சம்'' என்கிறார்கள் தொழிலாளர்கள்.

அரசாங்கமும் ஊடகங்களும் ஒரு தரப்பாக, நிர்வாகத்தின் ஊதுகுழலாக இருப்பதால், அன்று ஆலைக்குள் நடைபெற்ற சம்பவம் என்ன என்பது இன்னமும் முழுமையாக வெளிவரவில்லை. சில பத்திரிகையாளர்களும், பிற தொழிற்சங்கங்களைச் சேர்ந்த முன்னணியாளர்களும், தலைமறைவாக இருக்கின்ற தொழி லாளிகளிடம் விசாரித்ததில் புதிதாகப் பல தகவல்கள் தெரிய வருகின்றன.




தொழிலாளர்களை அச்சுறுத்துவதற்காக மாருதி ஆலையில் குவிக்கப்பட்டுள்ள போலீசு பட்டாளம்.

மானேசர்-குர்கான் ஆலைகள் அனைத்திலுமே, தொழிலாளர்களை மேலாளர்கள் கெட்டவார்த்தையால் திட்டுவது என்பது மிகவும் சகஜம் என்றும், தொழிற்சங்கத்துடன் நிர்வாகம் பேச்சுவார்த்தை நடத்தும் நேரங்களில், பேச்சுவார்த்தை நடக்கும் அறைக்கு உள்ளேயே நிர்வாகத்தின் அடியாட்படை நின்றுகொண்டிருக்கும் என்பதையும், ஒரு பழகிப்போன சம்பிரதாயம் போல விவரிக்கிறார்கள் அப்பகுதி தொழிலாளர்கள்.

அன்று மாருதி ஆலையில் பேச்சுவார்த்தைக்குப் போன தொழிற்சங்க முன்னணியாளர்கள் நாற்காலியில் அமர்ந்தவுடன், நிர்வாகத்தரப்பு மேசையின் மீது ஒரு ரிவால்வரை எடுத்து வைத்ததாகவும், பேச்சுவார்த்தையின் ஊடாகவே தலைவர்கள் அடியாட்களால் தாக்கப்பட்டதாகவும் தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

எத்தனை உண்மைகள், எத்தனை ஆதாரங்கள் தரப்பட்டாலும் அவை எதையும் அரசோ, போலீசோ, நீதிமன்றமோ கணக்கில் கொள்ளப்போவதில்லை. ஜூலை சம்பவத்துக்குப் பின்னர் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்த மாருதி சுசுகியின் தலைவர் பார்கவா, சுயேச்சையான தொழிற்சங்கத்தைத் தாங்கள் எதிர்க்கவே இல்லையென்றும், அரியானா மாநில அரசுதான் சங்கத்தைப் பதிவு செய்வது தொடர்பாக சில பிரச்சினைகளை எழுப்பிக் கொண்டிருந்தது என்றும், சங்கத்தை விரைவாகப் பதிவு செய்து தருமாறு தாங்கள் அரசைக் கேட்டுக் கொண்டதாகவும் கூறினார்.

இதைவிடக் கடைந்தெடுத்த ஒரு பொய் இருக்க முடியாது. சுயேச்சையான தொழிற்சங்கத்துக்கான அங்கீகாரம் என்ற கோரிக்கையை முன்வைத்து 2011-இல் மட்டும் 5 மாதம் போராட்டம் நடந்துள்ளது. மாருதியின் உற்பத்தி வீழ்ந்தது. பங்கு விலை வீழ்ச்சி அடைந்தது. என்ன நடந்தாலும், சங்கம் அமைக்க அனுமதிக்க மாட்டோம் என்று ஜூலை 2011-இல் அறிக்கை விட்டார், மாருதியின் தலைமை நிர்வாக அதிகாரி சித்திகி. இறுதியில் தொழிலாளர்கள் தமது கோரிக்கையில் வென்றவுடனே, தொழிற்சங்கத் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் 16 இலட்சம் ரூபாய் கொடுத்து ராஜினாமா கடிதம் எழுதி வாங்கியது நிர்வாகம். இவையனைத்தும் உலகறிந்த உண்மைகள். எனினும், ஒரு ஊடகம்கூட பார்கவாவிடம் எதிர்க்கேள்வி கேட்கவில்லை.

குர்கானில் உள்ள மாருதி உத்யோக் காம்கார் யூனியனின் செயலர் குல்தீப் ஜங்கு, ''500 தொழிலாளர்களின் வேலைநீக்க உத்தரவை ரத்து செய்யவேண்டும்'' என்று கோரியிருக்கிறார். அச்சங்கத்தின் சார்பில் 5000 தொழிலாளர்கள், மாருதி தொழிலாளர்களை மீண்டும் பணியமர்த்தக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர். புரட்சிகர அமைப்புகள் மற்றும் ஜனநாயக சக்திகள் டெல்லியில் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர். தமிழகத்தில் மாருதி தொழிலாளர்களின் போராட்டத்தை வாழ்த்தி வரவேற்று பு.ஜ.தொ.மு., பிரச்சாரம் மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக்கிறது.

மாருதி போராட்டத்தை ஆதரிக்கவும் விரும்பாமல், கண்டிப்பதற்கும் துணிவில்லாமல் சிக்கித் தவிக்கின்றன போலி கம்யூனிஸ்டு தொழிற்சங்கத் தலைமைகள். சட்டத்தின் ஆட்சியைத் துளியும் மதிக்காமல், தங்களை இப்படிப்பட்ட இக்கட்டுகளில் இழுத்துவிடும் முதலாளிகளின் மீதும், தொழிலாளிகளின் மீதும் போலி கம்யூனிஸ்டுகளுக்கு கோபம் வருகிறது. இருந்தபோதிலும், அவர்கள் சட்டத்தைப் உறுதியாகப் பற்றி நிற்கிறார்கள்.

''மாநில அரசைக் கலந்து கொள்ளாமல் இவ்வளவு பேரை நிர்வாகம் வேலை நீக்கம் செய்திருப்பது சட்டவிரோதமானது. நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டுவருவோம்'' என்று கூறியிருக்கிறார் ஏ.ஐ.டி.யு.சி.யின் தேசியச் செயலர் சச்தேவா.

ஒத்திவைப்புத் தீர்மானமல்ல முதலாளிகளின் கவலை. பிரிகால், ஏனாம், மாருதி என்று அடுத்தடுத்து தொடரும் தொழிலாளி வர்க்கத்தின் போர்க்குணம்தான் முதலாளி வர்க்கத்தின் கவலை. மானேசரில் மாவோயிஸ்டுகள் ஊடுருவலா என்று தேடுகிறார்கள். தமிழகத்தில் பு.ஜ.தொ.மு. மற்றும் அதன் தோழமை அமைப்புகளை ஒடுக்க வேண்டுமென்று தென்னிந்திய முதலாளிகள் சங்கம் ஜெயலலிதாவிடம் மனுகொடுக்கிறது. உடனே உளவுத்துறையும் போலீசும் தமது நடவடிக்கைகளைத் தொடங்குகின்றன.

நக்சல் அபாயம் என்பது முதலாளி வர்க்கத்துக்கு உண்மையான அச்சுறுத்தலாகவும் இருக்கிறது. தொழிலாளிகளின் மீது அரசு அடக்குமுறையை ஏவிவிடுவதற்கான பூச்சாண்டியாகவும் அதற்குப் பயன்படுகிறது. இருப்பினும், மாருதி பிரச்சினையின் ஊடாக தனது வர்க்கத்தின் மீது தொடுக்கப்பட்டிருக்கும் தாக்குதலை இந்தியத் தொழிலாளி வர்க்கம் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை.

''அன்று இப்படி ஒரு சம்பவம் நடைபெறக் காரணமாக இருந்த குறிப்பான நிகழ்வுகள் என்ன என்பது குறித்துத் தனக்கு தெரியாதெனினும், இத்தகைய போக்கினை ஈவு இரக்கமின்றி நசுக்கவேண்டும்'' என்று பேசியிருக்கிறார் விப்ரோ நிறுவனத்தின் முதலாளி அசிம் பிரேம்ஜி. மாருதி சம்பவத்தை 'ஒரு வர்க்கத் தாக்குதல்' என்று வருணிக்கிறார், மாருதி சுசுகியின் தலைவர் பார்கவா.

'வர்க்க உணர்வு' என்பதை முதலாளி வர்க்கத்திடமிருந்து ஒரு எதிர்மறைப் பாடமாகக்கூடத் தொழிலாளி வர்க்கம் சில சந்தர்ப்பங்களில் கற்றுக் கொள்ள முடியும்.

● அஜித்



படிப்பகம்

www.padippkam.com

# இலண்டன் கலகம்: 1,800 ஆண்டுகள் சிறைத் தண்டனை!

இங்கிலாந்தின் தலைநகர் இலண்டன் நகரில் கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மார்க் டக்கன் என்ற கருப்பின இளைஞர் போலீசாரால் அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்ட பின் அங்கு வெடித்த கலகம், அந்நாட்டின் பல்வேறு நகரங்களுக்கும் பரவியது. இக்கலகம் போலீசின் அத்துமீறலுக்கு எதிரான பொதுமக்களின் எதிர் வினையாக மட்டுமில்லாமல், தனியார்மயம் உருவாக்கிய சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிரான போராட்டமாகவும் உருவெடுத்தது.

அமெரிக்காவின் மிகப்பெரும் கோடீசுவரனும் பங்குச் சந்தை சூதாடியுமான வாரன் பஃபெட், ‘‘இங்கிலாந்தில் நடந்ததைப் போன்றதொரு கலகம் அமெரிக்காவிலும் நடக்க வாய்ப்புள்ளது’’ என இக்கலகத்தின் தன்மையை உணர்ந்து எச்சரிக்கும் அளவிற்கு, அதாவது ஆளும் கும்பலுக்கு உறைக்கும் அளவிற்கு, இக்கலகம் தனியார்மயத்தைக் குறி வைத்துத் தாக்கியது. இக் கலகத்தின்பொழுது பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சொந்தமான சூப்பர் ஸ்டோர்கள் தாக்கப்பட்டதைக் கண்டு பீதியடைந்த இங்கிலாந்து அரசு, இது சாதாரண தெருப் போராட்டம் அல்ல, வர்க்கப் போரின் தொடக்கம் என்பதை உணர்ந்து, இதனை முளையிலேயே கிள்ளியெறிந்துவிடும் நோக்கத்தோடு, ‘‘கலகக்காரர்களை விரைவாகவும் கடுமையாகவும் தண்டிப்பதன் மூலம்தான் சமூகத்தின் அமைதியை, ஒழுங்கைப் பாதுகாக்க முடியும்’’ என்ற பாசிச பிரச்சாரத்தை நடத்தி வந்தது. இங்கிலாந்தின் நீதித்துறையும் இந்த அரசு பயங்கரவாதத்திற்கு ஒத்து ஊதியது.

கலகத்தில் இறங்கிய பெரும்பாலோர் மீது அதற்கு முன்னதாக எவ்வித கிரிமினல் குற்றமும் இல்லாதபோதும்; கலகத்தில் இறங்கியவர்கள் தாமே போலீசு நிலையங்களுக்கு வந்து சரண் அடைந்தபோதும்; அவர்கள் நீதிபதியின் முன் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டபோதும்; குற்றம் சுமத்தப்பட்டவர்களுள் பலர் கல்லூரிக்குச் செல்ல வேண்டிய பருவத்தில் உள்ள இளம் பருவத்தினர் என்றபோதும் கலகக்காரர்களுக்கு மன்னிப்பு அளிப்பதோ, குறைந்த தண்டனை அளிப்பதோ நிராகரிக்கப்பட்டது.





★ 25 பவுண்டு பெறுமானமுள்ள செண்ட் பாட்டிலைத் ‘திருடிய குற்றத்திற்காக’ டேவிட் ஸ்வார்பிரிக் என்ற 25 வயது இளைஞனுக்கு இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை;

★ ஒரு சூப்பர் மார்கெட்டுக்குள் நுழைந்து 10 பாக்கெட் சுயிங்கத்தை எடுத்த ‘குற்றத்திற்காக’ ஷனோலா ஸ்மித் என்ற இளம் பெண்ணுக்கு ஆறு மாத சிறை தண்டனை - என நீதித்துறையால் சட்டபூர்வ பாசிச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டது.

சாதாரண காலங்களில் நடைபெறும் திருட்டுக் குற்றத்திற்கு 2 மாதங்கள் மட்டுமே தண்டனை அளிக்கும் இங்கிலாந்து நீதிமன்றம், கலகத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் மீது சுமத்தப்பட்ட திருட்டுக் குற்றச்சாட்டுக்கு 7 மாதங்கள் எனத் தண்டனையை அதிகரித்து அளித்தது; கடையை உடைத்துக் கொள்ளையிடும் குற்றச்சாட்டுக்கு வழக்கமாக அளிக்கப்படும் தண்டனைக்குப் பதிலாக (8 மாதங்கள்), 14 மாதங்கள் தண்டனை அளிக்கப்பட்டது; பொதுச் சொத்திற்குச் சேதம் விளைவிக்கும் குற்றச்சாட்டுக்கு வழக்கமாக அளிக்கப்படும் 5 மாத தண்டனைக்குப் பதிலாக இரண்டு மடங்கு தண்டனை (10 மாதங்கள்) வழங்கப்பட்டது.

இக்கலகத்திற்காக இலண்டன் நகரில் மட்டும் 1292 பேர் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள மொத்த சிறைத் தண்டனைக் காலம் ஏறத்தாழ 1,800 ஆண்டுகள் ஆகும். இத்தண்டனைக் காலத்தின் சராசரியைக் கணக்கிட்டால், தண்டிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகள் சிறை தண்டனை அளிக்கப்பட்டுள்ளதாகக் கொள்ள வேண்டும்.

தனியார்மயம் - தாராளமயம் உருவாக்கியுள்ள மாபெரும் பொருளாதார மந்தத்திலும், கட்டமைப்பு நெருக்கடியிலும் சிக்கிக் கொண்டுள்ள ஐரோப்பா கண்டத்தின் பல்வேறு நாடுகளில் தொழிலாளர்களின், மாணவர்களின், இளைஞர்களின் கலகங்கள் காட்டுத்தீபோலப் பரவி, முதலாளித்துவ சமூகத்தின் இருப்பையே அச்சுறுத்தி வருகின்றன. கடுமையான தண்டனை அளிப்பதன் மூலம், உழைக்கும் மக்கள் மத்தியில் அரசு பயங்கரவாத அச்சத்தை உருவாக்குதன் மூலம் அத்தீ தன் நாட்டுக்குள் பரவுவதைத் தடுத்துவிட முடியும் என மனப்பால் குடிக்கிறது, இங்கிலாந்தின் ஆளுங்கும்பல்.



படிப்பகம்